922

Regd. No. M. 2210 வருஷ சந்தா ரூ 1-8-0.

வை. மு. கோதைநாயகி அம்மாள்.

# JEGAN MOHINI



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 AUG 1928
MADRAS

தனிப் பிரதி அ

V July-August 1928 இதழ் 8-9
"ஜகன் மோகினி" ஆபீஸ்,
26 தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

3L
m24, N22.3M
N128.5 8-9
182848

குறிப்பு:— [illegible] தேதிக்குள் சஞ்சிகை வெளிப்படும்.

## நமது சந்தா நேயர்கட்கு முக்கிய அறிவிப்பு.

பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். அங்ஙனமிருக்க சிலர் அடுத்த சஞ்சிகை வந்தபிறகு முன் மாதத்து சஞ்சிகை வரவில்லையென்றும், நாம் அனுப்பத் தவறிவிட்டதாகவும் எழுதுகிறார்கள். இன்னும் சிலர் 2, 3 மாதங்கள் கழித்து சஞ்சிகை வரவில்லை யென்கிறார்கள். இது மிகவும் விசனிக்கத் தக்கதே. ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 10 தேதிக்குள் உள் நாட்டு சந்தா நேயர்களுக்கும், 15 தேதிக்குள் வெளி நாட்டு சந்தா நேயர்களுக்கும் கிடைக்காவிட்டால் தபாலில் தவறிவிட்டதெனத் தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையையனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்று அணு ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

நமக்கு எழுதும் கடிதத்தில் தங்களது சந்தா நம்பரை மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறி விடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

மானேஜர்:—"ஜகன்மோகினி" ஆபீஸ்
திருவல்லிக்கேணி சென்னை

---


## "ஜகன்மோகினி"யின் முதல் இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த நாவல்கள்

மலர் I. ஸ்ரீமான் வடூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய
காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்) ரூ. 4 0 0

மலர் II. விலாஸவதி (2-பாகங்கள்) ரூ. 3 0 0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை.

கனக சபை .... .... ரூ. 1 8 0
கோகிலம் .... .... ரூ. 0 6 0

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தோடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

உ

ஓம்

# ஜகன் மோகினி

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"
ஜகன்மோ கினியேன்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 AUG 1928
MADRAS

| மலர் V | விபவஹு ஆடி—ஆவணிமீ July—August 1928. | இதழ் 8—9 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்

### திருவல்லிக்கேணிப் பஞ்சரத்நம்

*தெள்ளிய சிங்கர் துதி*

5. அரக்கனின் மைந்தனாய் அவனியில் ஜெனித்துநின்
ஆநந்த நாம மந்திரம்
அனவரத மும்துதி செய்திடும் சிறுவனும்
அன்பன்பிரக லாதன்தனை
இரக்கமற் றிரணியன் செருக்குடன் நோக்கியே
இரணியா வென்றியம்ப
எண்ணரிய கொடுமைகள் காட்டியும் பற்பல
இம்சைகள் செய்து வந்த
எரிக்குநிக ரானஅவ் வரக்கனையழித்திட
ஈண்டுதூ ணில்உதித்து
இரணியன் மார்பினைக் கீண்டவன் குடல்தனை
எழில்வக்ஷ ஸ்தல மணிந்து
திருமிக்க சிறுவனுக் கபய மளித்த நர
சிங்கமே! நாராயணா!
திருவல்லிக் கேணிதனில் சிறப்புடன் அமர்ந்தோங்கு
சிங்கமே! சரணம் கோனே!

(முற்றிற்று)

வை. மு. கோ.

# அநுபவ நீதிசாரம்.

## அபூர்வசக்தி.

65. ஒரு ஆண்சிசு, பாலுண்ணுங்காலத்தில் தாயாரிடத்தில் அதிக பக்ஷமாயிருக்கிறது; அதை எடுத்துக்கொண்டு உலாவுங்காலத்தில் அது தந்தைமீது பக்ஷமாயிருக்கிறது; பின்னர் அப்பாலகன் விளையாடும் காலத்தில் உடன்பிறந்தவர்கள் மீது பிரியமாயிருக்கிறான்; படிக்குங்காலத்தில் தோழர்கள்மீது விசுவாசமுள்ளவனாயிருக்கிறான்; விவாகமானபின்போ அவனுடைய அத்தனை அன்புகளும் ஒருங்குகூடி அவற்றோடு அவனுடைய உயிரும் சேர்ந்து எல்லாம் மனைவியிடம் லயித்துப்போகின்றன. இவ்வாறு லயிக்கும்படிச் செய்வது காதலியிடத்திலுள்ள ஓர் அபூர்வசக்தி.

66. பிதுரார்ஜிதபணமும், மாமனால் கொடுக்கப்படும் ஸ்ரீதனமும் பெட்டிக்கு அழகுசெய்வனவேயன்றி உனக்கு மதிப்பைத் தரத்தக்கவை யல்ல; உன்னுடைய சொந்தமான உழைப்பினால் சம்பாதிக்கும் பணமே உனக்குக் கௌரவத்தை யளிக்கும்.

67. உன்னுடைய ஜீவியகால முற்றும் நீ ஆநந்த மயமாகவே இருக்க வேண்டுமென்பதே உனது நோக்கம்; ஆனால் கோபமென்னும் கொடிய பைசாசம் உன்னுள் அடங்கியுள்ளமட்டும் நீ பூர்ணமான அமைதியையும், ஆநந்தத்தையும் காண்பதரிது.

68. இல்லற வாழ்க்கையை நடத்தும் பெண்மணியே! உனக்கும், உனது காதலனுக்கும் அந்தரங்கத்தில் ஏதேனும் மனஸ்தாபம் ஏற்பட்டிருப்பினும் அதைப் பிறரறியக் காட்டிக்கொள்ளாமல் மறைத்து நடப்பதே உத்தமகுணத்திற்கழகாகும்; அதனால் உனது கணவனின் கோபமும் உச்சநிலையை யடையாது; அவன் சாந்தமாவதற்கும் உபாயமான வழி இதுவேயாம்.

69. தாய்தந்தையர்களுக்குத் தம் மகனிடத்தில், அவனுக்கு விவாகமாவதற்குமுன்னிருந்த அன்பானது விவாகமானதன்பின்னர்க் குறைகின்றது. அது எதனால்? அவனுடைய பாதுகாப்பிற்குரியவளாக அவனுக்கு வரும் காதலி அவ்வன்பைப் பங்கிட்டு ஏற்றுக்கொள்கிறாள்.

70. மிகவும் ஒருமனப்பட்டு ஒற்றுமையாகவுள்ள தம்பதிகளைக் கண்டால் உலகத்தவர், அவர்களுள் மனைவி புருஷனுக்கு மருந்திட்டு அவனை மயக்கிவிட்டாள் என்ற ஓர் சொல்லைக் கிளப்பிவிடுகிறார்கள். உண்மையை ஆராயுமிடத்து மருந்தென்பதும், வசியமென்பதும் மதியீனமான அபிப்பிராயங்களென்பது விளங்கும். கணவனும், மனைவியும் ஒருமைப்பட்டு வாழ்வதற்கு முக்கிய [illegible] கணவனில் மனைவியின் இன்சொல்லும், இணையிலாப் பணிவிடைகளும் அவள் புருஷனின் நோக்கமறிந்து நடப்பதுவே பெரிய வசியமருந்து. மாதே! இதன் ரகசியத்தை அறிந்து நீ உன் கணவனிடம் நடந்துகொள்.

(தொடரும்)

வை. மு. கோ.

182848

## முக்கிய அறிவிப்பு

நமது சொந்த வேலையின் நிமித்தம் நாம் **மோகினியின்** இம்மாதத்திய 8வது சஞ்சிகையோடு **ஆகஸ்டு மாதத்திய ஒன்பதாவது** சஞ்சிகையும் சேர்த்து அவற்றைத் தங்களுக் கனுப்பி யிருக்கிறோம்; சென்ற வாண்டுகளில் நாம், சில சமயங்களில் இவ்விதம் இரண்டு சஞ்சிகைகளைச் சேர்த்தனுப்பியபோது, அவற்றின் எண்களைக் கவனியாத சில நேயர்கள் ஒரு சஞ்சிகை வரவில்லை என்று கடித மெழுதினார்கள். அதுபோல இப்போதும் வரையாது, 8-9-என்னும் இலக்கங்களை நேயர்கள் யாவரும் கவனித்து இவை இரண்டு சஞ்சிகைகளென உணர்ந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம். இன்னும் நமது மோகினியை குறித்த தேதியில் ஒருவருக்கும் விடாது யாம் அனுப்பி வருகையில் சிலரிட மிருந்து நாம் அனுப்ப மறந்துவிட்டதாகப் புகார்க் கடிதங்கள் வருகின்றன; இவ்வாறு வருவது மிகவும் வருந்தத்தக்கதாக விருக்கின்றது. இச் சஞ்சிகையின் அட்டையின் (Wrapper) உள்பக்கத்தில் தெரிவித் துள்ளபடி சஞ்சிகை சேராதவர்கள் அதை நமக்குத தெரிவிப்பதோடு தபாலதிகாரிகளுக்கும் இத்தவறுதலை (Complaint) எழுதும்படி கோருகிறோம்.

பத்திராதிபர்.

---

## மதிப்புரை.

### மஞ்சுளா!

**விலை அணு 6. வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி.**

இப்பெயர் கொண்ட ஓர் தமிழ் நாவல் எமது பார்வைக்கு வரப்பெற்றோம். அதன் ஆசிரியை ஸ்ரீமதி ஜானகி யம்மாளாவர். நாவல் சிறுவர் முதல் பெரியார்வரை யாவரும் படிக்குமாறு மிகவும் சுலபமான நடையில் நன்றாக வரையப்பட்டுள்ளது இதன் கதாநாயகியாகிய மஞ்சுளாவெனும் மாதரசி தனது மாற்றாந்தாயினால் செய்யப்படும் பல கொடுமைகளுக்கு இலக்காகிக் கன்னியா மாடத்தில் தனிவாசம் செய்வதும், தனது தோழிமார்களின் உதவியால் தனது அன்புமகன்று தனக்கேற்ற நாயகனை மணந்து சுகமாக வாழ்வதும் மிகவும் நன்றாயிருக்கின்றன. நம் தமிழ்நாட்டுப் பெண்மணிகள் பலரும்

இத்தகைய நூலியற்றுந் தொழிலே மேற்கொண்டு உலகிற்கு அனேக விஷயங்களைப் புத்தக ரூபமாக வெளியிட்டு உதவிபுரிய முன்வருவார்களே யானல் நமது நாட்டின் சிறப்பு நாளும் வளர்ந்தோங்கும்; நம் நாடு மீண்டும் முற்காலம் போல புனர் உத்தாரணம் செய்த நாடாகவே ஜொலிக்கும்.

---

# ஸ்ரீ வைஷ்ணவன்

## வருஷ சந்தா-உள்நாடு ரூ-1 வெளிநாடு ரூ. 1-4-0

### பத்திராதிபர். T. R. பெரிய நம்பியா பிள்ளை, திருநெல்வேலி.

இப்பெயர் கொண்ட மாதாந்தப் பத்திரிகையை அன்புடன் படித்து அதனுள் வெளியாகும் அமிருதம் போன்ற விஷயங்களைக் கண்டு எம் முள்ளம் ஆநந்தமயமாய்ப் பூரிக்கின்றது. இதில் அரிய பெரிய திருக்குறளுக்கும், நம்மாழ்வாரின் அற்புதமான பாடலுக்கும் பல உவமை காட்டி வரைந்துள்ள வ்யாசம் மிகவும் அழகாயிருக்கின்றது. வைஷ்ணவ அபிமானிகள் யாவரும் இதை ஆதரித்தல் மிக நல்லது.

---

# ஹாஸ்யக்கதை.

## படிப்பின் மணமறியாத பட்டதாரி படாடோப ராமநாதச் செட்டியார்.

மட்டி நாடு என்ற ஓர் குக்கிராமத்தில் கல்வியின் வாசனையைச் சிறிது மறியாத தனவந்தரான லோபி ராமநாதச் செட்டியார் என்பவர் ஒருவரிருந்தார். அவர் ஒவ்வொரு நாளிலும் சூரிய உதயத்திலிருந்து அஸ்தமன காலம்வரை எந்நேரமும் தம்முடைய பணங்களை எண்ணுவதும், அவற்றை யழகு பார்ப்பதும், விலாப்புடைக்கச் சாப்பாடு உண்பதும், உறங்குவதும் தவிர மற்ற வேலைகளைச் செய்வதே யில்லை. அவர் கையினுல் ஓர் தம்பிடிக்காசு கூட எப்போதும் ஒருவருக்கும் பிச்சையிட்டது கிடையாது. ஆனல் அவரைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து தோத்திரம் செய்து யாசகம் கேட்போருக்கு மட்டும் அவர் காலணுக் கொடுப்பது வழக்கம். இத்தகைய தற்பெருமை லோபி யிடம் ஓர் சங்கீத சாலையின் தலைவர் ஒரு நாள் ஒரு சிறுவனுடன் சென்று அவரைக் கண்டு வணங்கி, "என்ன செட்டியாரவாள்! சவுக்கியந் தானே?" என்று கேட்டார்.

செட்டியார்:—பகவந்துனி கடாக்ஷ முலதோ இந்தவரகு சுகமுகா யுன்னுமு (செட்டியார் தெலுங்கில் பேசுபவரா யிருப்பினும் அவருடைய பேச்சை நாம் தமிழிலேயே வரைவோம்) ஏது எங்கே வந்தீர்கள்? தாங்கள் வீட்டில் யாவரும் க்ஷேமம்தானே?

**தலைவர்:**—"ஆகா! எல்லோரும் சுகமே! தங்களிடம் நான் ஓர் காரியமாக வந்தேன்; அடா டா டா! தங்களுடைய உத்தமமான காருண்ய குணமென்ன! பரோபகார சிந்தை என்ன! என்ன போங்கள்; தமது ப்ரதாபம் நாடெங்கும் ஜொலிக்கின்றது; நேற்று வந்த கவிராயனுக்குத் தாங்கள் காலணாக் கொடுத்தீர்களாம்; அவன் அதைக் குறித்துக்கொண்டாடித் தங்கள்மீது கவியும் அபாரமாய்ப் புகழ்ந்து பாடி யிருக்கிறான்; அதைக் கேள்வியுற்றுத்தான் நான் வந்தேன்; தாங்கள் தரும குணத்தை இச் சிறுவனிடம் காட்டவேண்டும்; இவனுக்குத் தாய்தந்தை முதலிய எந்த மனிதர்களும் இல்லை; இவன் அனாதைச் சிறுவன்; சாப்பிடவும் சோறில்லாது ஏழ்மையால் வருந்துகிறான்; இவனுக்குச் சங்கீதப் பயிற்சிமட்டும் இயற்கையாகவே யுண்டாகியிருக்கிறது; இவனுக்கு அதன்மூலம்தான் ஜீவனம் ஏற்படவேண்டும்; முதல்முதல் இங்குதான் இப்போது வந்திருக்கிறான்; தங்களைப்போன்ற மகான்களின் உதவியால்தான் இச்சிறுவன் முன்னுக்கு வரவேண்டும்; தாங்கள்தான் உதவிபுரிய வேண்டும்; தங்களுடைய ஆதரவினால் இச்சிறுவனின் கச்சேரி நடைபெறப் போகின்றதென்றும், இவன் தங்களை, உயர்ந்த புகழ்ப்பாவினால் தோத்திரம் செய்து பாடுவானென்றும், அக்கச்சேரி நாளையதினம் நடைபெறுமென்றும் பிரபல பத்திரிகைகளில் பிரசுரம் செய்து ஓர் கச்சேரி நடத்த எங்கள் சங்கீத சபையில் எல்லோரும் ஏற்பாடு செய்துள்ளோம்; தாங்கள் ஏதேனும் தொகை யுதவி செய்யவேண்டும்; இதோ, இந்த எழுத்து விளம்பரத்தைப் பாருங்கள்" என்று கூறித் தாம் அதைப்பற்றி எழுதிவைத்திருந்த விளம்பரத்தைப் படித்துக் காட்டினார். அதில் செட்டியாரை மட்டுக்கு மீறிப் புகழ்ந்திருந்ததைக் கண்டதும் செட்டியாருக்கு உற்சாகம் பிறந்துவிட்டது. உடனே அவர், சங்கீத சபைத் தலைவரை நோக்கி, "ஆ! அப்படியா? என் பெயர் எல்லாப் பேப்பர்களிலும் வருமோ! எல்லா விளக்குக் கம்பங்களிலும் என் பெயர் எழுதின அட்டை கட்டித் தொங்கவிடப்படுமோ? பல்லாயிர ஜனங்கள் இந்த விளம்பரங்களைப் பார்ப்பார்களோ? மிகுந்த சந்தோஷம்! இதோ இந்த 50 ரூபாயைச் சிறுவனுக்குக் கொடுத்து உதவிசெய்யும்; நான் நாளைக் கச்சேரிக்கு வருகிறேன்" என்று தற்பெருமையில் மயங்கி மனம்வந்து 50 ரூபாய் அவரிடம் கொடுத்து அவரை அனுப்பிவிட்டார்.

மறுநாள் மாலை எங்குப்பார்த்தாலும் செட்டியார் பெயரோடுகூடிய அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன; பத்திரிகைகளிலும் அதைப்பற்றிய விளம்பரங்கள் வெளியாயிருந்தன. செட்டியார் அவற்றைக் கண்டு வெகு சந்தோஷம் கொண்டு பாட்டுக் கச்சேரி நடைபெறும் இடத்திற்குச் சென்று முதலில் உட்கார்ந்தார். சங்கீதம் ஆரம்பிக்கப்பட்டது. பையன் வெகு ப்ரம்மாநந்தமாகப் பாடுகிறான். எல்லோரும் ஆநந்தத்துடன் பாட்டைக் கேட்கிறார்கள்; அடிக்கடி கைதட்டி, 'பேஷ்! சபாஷ்!' என்று ஜனங்கள் ஆர்ப்பரிக்கின்றார்கள். செட்டியாருக்குச் சங்கீத ஞானம் சூன்யம். இருப்பினும் தம்முடைய பெயரை விளம்பரம் செய்திருக்கும் பெருமையினால் பூரித்து மகிழ்ந்து பாடுபவனின் வாயையே பார்த்துக்கொண்டிருக்கிறார். பாடகன் இராகத்தை ஆலாபனம் செய்து சில கீர்த்தனங்கள் பாடிப் பின், "அனாதுடனுகானு ராமனே" என்ற கீர்த்தனத்தைப் பாடத் தொடங்கினான். அவ்வாறு தொடங்கிப் பல்லவியைப் பாடி முடிப்பதற்குள், செட்டியார் காய்ந்த இரும்பில் விட்ட ஜலம்போல சீறி எழுந்து நின்று, "ஓய் பாடகரே! பாட்டை நிறுத்தும்; ஓய் தலைவரே! இங்கு வாரும். என்னை ஏய்த்துவிட்டுப் பணத்தை நீர் அபகரிக்கும்பொருட்டு இந்தப் பாடகன் ஏழை என்றும், திக்கற்றவன் என்றும் கூறி மோசடியாக என்னிடம் பணத்தை

வாங்கிவந்து விட்டீர். இவன் முதலில் பாடும்போதே தனக்கு அன்னா! தாதா! தந்தாய் அத்தா! மாமா! முதலியவர்களிருப்பதாகவும், அவர்கள் பணமோ என்னவோ தந்ததாகவும் குறிப்பிட்டு, தந்தான், தானா! தந்தானே! அன்னா!' என்று ராகமாக இழுத்து அவன் வாயிலேயே தெரிவித்தான். அது போனால் போகிறதென்று நான் அப்போது பொறுமையாக உட்கார்ந்திருந்தேன். இப்போது நேராக அவன் என்னை நோக்கி, அனுதுடனுகானு ராமா! நேனு அனுதுடனு கானு'' என்று திருப்பித் திருப்பிச் சொல்லி உம்முடைய மோசடியை இச் சபையில் வெளிப்படுத்திவிட்டான். அவனுக்குப் பிச்சை வாங்குவதில் இஷ்டமில்லை என்பதை இப் பாட்டு தெரிவித்துவிட்டது; ஆதலால் என் 50 ரூபாயை முன்னால் கீழே வையும்; இல்லாவிட்டால் உம்மீது கிரிமினல் கேஸ் போடுவேன்; ஓய் பாடகரே! நீர் உண்மையை உரைத்ததற்காக நான் சந்தோஷப்படுகிறேன்; நாளை வீட்டுக்கு வாரும்; காலணாத் தருகிறேன்; என்னமோ பட்டமும், புகழும், கூட புண்ணியமும் வருகின்றனவே என்று நான் பணம் கொடுத்தேன்; இந்தத் தலைவர் இப்படி மோசம் செய்வாரென்று தெரிந்திருந்தால் நான் கொடுத்திருக்கவே மாட்டேன்; தலைவரே! பணத்தை இப்படி வைத்துவிட்டு மறுஜோலி பாரும்'' என்று சிங்கம் போல கர்ஜனை செய்து கத்தினார். இதைக் கேட்ட சபையோர்கள் செட்டியாரின் மூடத் தனத்திற்கு நகைத்து "இவருக்குப் படிப்பின்மையினாலேயே இந்த லோபமும், மூடமும் உண்டாயிருக்கின்றன'' என்று கூறிக்கொண்டு செட்டியாரிடம் உண்மை விஷயத்தை விளக்கி அக் கீர்த்தனத்தின் முழு அர்த்தத்தையும் தெரிவித்து அவருக்குச் சமாதானம் செய்தார்கள். பின்னர், செட்டியார், அரைமனதோடு அதை யொப்புக்கொண்டு பாதிப் பணத்தைச் சங்கீத சபைத் தலைவரிடம் வாங்கிக்கொண்டு வீடு சென்றார்.

வை. மு. கோ.

---

## பரிசுகளின் விவரம்.

ஏழாவது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா நெம்பர்.

2690. V. Rangasamy Naidu Tongaat. Natal.

2678. K. Sundaresan, Lucknow U. P.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் இதே மாதிரி இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். பழைய சந்தாதாரர்கள் தங்களது சந்தா நம்பரை அவசியம் தெரிவிக்கக் கோருகிறோம்.

---

## ஸ்ரீமான்-வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை

| | ரூ. | அ. | | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 | 7 | 8 | கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 | வஸந்த மல்லிகா | 1 | 8 |
| மாயாவிநோதப் பரதேசி 1,2 | 5 | 0 | மேனகா 1,2 | 3 | 0 | வித்யாஸாகரம் | 1 | 4 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | விலாஸவதி 1,2 | 3 | 0 | திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |
| காளிங்கராயன் கோட்டை ரகசியம் 1,2 | 4 | 0 | பாலாமணி | 2 | 8 | மாணிக்க வாசகர் | 0 | 8 |
| | | | சௌந்தரகோகிலம் 1,2,3 | 6 | 0 | வஸந்தகோகிலம் | 1 | 0 |
| | | | கனகாம்புஜம் 1, 2, | 2 | 12 | மாயசுந்தரி | 0 | 12 |

வத்ஸா கம்பெனி,
திருவல்லிக்கேணி.

## " கிருஷிகன் "

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:....

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் " கிருஷிகனு "க்குச் சமானமான பத்திரிகை இவ்டயவே கிடையாதென்பது நிச்சயம்.

" கிருஷிகன் " பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினல் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் " கிருஷிகன் " ஆபீஸ்,
" ஜகந்நாதபாக் " சைதாப்பேட்டை, சென்னை.

**கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!**

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

## கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

**முதல் ரகம்** விலை ரூ. 5-8-0 **2-வது ரகம்** ரூ. 4-8-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

## ஜர்மன் சில்க் புடவைகள்

**சாதா:** மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

**கோட்டடி:** கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காத்து) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு 'உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

வ்யாமோஹப் ரசமௌஷதம் முநிமனோவ்ருத்திப்ரவ்ருத்யௌஷதம்
தைத்யேந்த்ரார்த்திகரௌஷதம் த்ருபுவனி ஸஞ்ஜீவனைகௌஷதம்
பக்தாத்யந்தஹிதௌஷதம் பவபயப்ரத்வம்ஸ னைகௌஷதம்
ச்ரேயப்ராப்திகரௌஷதம் பிபமனஸ் ஸ்ரீக்ருஷ்ண திவ்யௌஷதம்.

—முகுந்தமாலை.

" அருள் பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமிர்தே யென்கண்ணே அரிய வான
பொருளனைத்துந் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்ற வொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும் வகுத்துக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டியுயிர்த்திரளை யாட்டும்
விழுப்பொருளே யான்சொலும் விண்ணப்பங் கேளே."

—தாயுமானவர்.

என்ற பாடல்களைப் பாடினாள். இவ்வாறு பாடிக்கொண்டே யிருக்கையில் அவள், தன்னை மறந்து அப்படியே சாய்ந்து தூங்கி விட்டாள்.

பின்னர் நமது மரகதவல்லி தெளிந்து கண் விழித்துப் பார்த்த போது பிற்பகல் சுமார் 3-அல்லது 4. மணி நேரமென்று தெரிந்து கொள்ளக்கூடிய நிலையில் பொழுது மேற்கே சாய்ந்திருந்தது. அதைக்கண்டதும் அவள், தனக்குள்ளாகவே வியப்படைந்து, "ஆகா! என்னவென்றுதான் நான் இயம்புவேன் எம்பெருமானின் திருவருளை! என்னப்பனே! உனது நாமாவை உச்சரித்துப் பாடிய நிமிடமே எனது களை தீர்ந்து நான் அயர்ந்து துயின்று எழும்படியாக அத்திருவருள் செய்துவிட்டதே! ஆஹா! என்ன மகிமை! என்ன மேன்மை! உம். இனிமேல் மெல்ல எங்கேனும் சென்று எனது விதியை அனுபவித்துத் தொலைக்கவேண்டுமே; இங்கு உட்கார்ந் திருப்பதால் என்ன பயன்?" என்று கூறியபடியே எழுந்து நடந் தாள்.

அத்தருணம், ஓர் தள்ளாத கிழவி, தலைமீது பாரமான கூடை யொன்றைத் தாங்கி வேகமாக நடந்து நமது மரகதமணி செல்லும்

வழியின் குறுக்கில் ஏற்பட்டிருந்த ஒற்றையடிப் பாதையில் போய்க் கொண்டிருந்தாள். அவ்வாறு சென்ற அக்கிழவி, திரும்பிப் பார்த்து மரகதத்தைக் கண்டதும் நீடித்துப் பழகியவள் போல பேசத்தொடங்கி, "ஏண்டியம்மா! இந்த அசுர சந்தி வேளையில் தனிமையில் எங்குச் செல்கிறாய்? உன்னைப் பார்த்தால் மகாலக்ஷ்மி போல் இருக்கிறாய்! அதோடு கர்ப்பிணிபோலவும் காணப்படுகிறாயே! தனியாக இவ்விதம் வரலாகுமா!" என்றாள்.

மரகதவல்லி:—சற்றுயோசித்துப் பின், "நான் இங்குச் சமீபத்திலிருப்பவள்தான். நான் அடிக்கடி வரும் வழக்கத்தின் மேல்தான் இங்கு வருகிறேன். அதனோடு நீதான் தகுந்த துணையாக வருகிறாயே, பயம் என்ன?";என்றாள்.

கிழவி:—"ஐயோ! நான் துணையிருந்து நாசமாய்ப் போனேன். என் தம்பி கடுமையான சிக்கில் படுத்திருக்கிறான்; அதற்காக நான் சில சாமான்கள் வாங்கிக்கொண்டு அவசரமாகச் செல்கிறேன்; இவைகளைக்கொண்டு கஷாயம் வைத்துக்கொடுக்கும்படி வைத்தியன் கூறினான்; என் மனவேதனையினாலும், தள்ளாமையினாலும் இவற்றைத் தூக்கிக் கொண்டு நடக்க என்றால் முடியவில்லை. எவ்வளவோ நேரமாக நடந்தும் வழி தொலையவில்லை" என்று மெல்ல இழுத்துக் கூறினாள்.

மிக்க தயாள குணம் நிரம்பிய மரகதவல்லி, இதைக் கேட்டதும் அவளுடைய பரிதாப நிலைக் கிரங்கி, அவளை நோக்கி, "பாட்டி! அந்தக் கூடையை என்னிடம் கொடுங்கள்; நான் எடுத்துக்கொண்டு வருகிறேன்; தங்கள் தம்பியின் உடம்புக்கு என்ன?" என்றாள்.

இதைக் கேட்ட கிழவி, ஏற்கெனவே, 'இக் கூடையை இந்தச் சிறு பெண்ணாகிய இவளிடம் கொடுத்தால் இவள் இலகுவாகச் சுமந்துகொண்டு நடந்துவருவாள்; நாம் சடுதியில் வீட்டையடையலாம்' என்ற நோக்கத்தினாலேயே நம் மரகதவல்லியோடு பேசியவளாதலால், அதற்கனுகூலமாக மரகதம் கூடையைக் கேட்கவே, அவள் "ஐயோ! அம்மா! நீ சிறுபெண்; எப்படி இதைச் சுமப்பாய்!" என்று ஒப்புக்கு மேல் உபசாரமாகச் சில வார்த்தைகள்

கூறிக்கொண்டே தன் தலையிலிருந்த கூடையை அப்படியே அவள் தலையில் வைத்தாள். ஏற்கெனவே மரகதம் துவண்டு வாடியிருந்ததால் கிழவியைவிட அதிகமான விசையில் நடக்க முடியாமல் தத்தளித்த வண்ணமாகவே நடந்தாள். கிழவி, எத்தாகப் பேசத் தொடங்கி, “ஐயோ! இதுவரை அவன் உயிர் இருக்கிறதோ, இல்லையோ தெரியவில்லையே! அம்மா! நீ சற்று விசையாக நடப்பாய் என்றல்லவா உன்னிடம் கூடையைக் கொடுத்தேன்; சற்று வேகமாக நட அம்மா” என்று தாக்ஷண்யமின்றிக் கூறினாள். மரகதமும் தன்னாலானவரையில் கொஞ்சம் விரைந்து நடந்தாள்.

அத் தருணம் அவர்களுக்குப் பின்னால் ஓர் விதமான கூச்சலுண்டாயிற்று. அது சிறுகச் சிறுக அவர்களுக்குச் சமீபத்தில் வந்தது. அதைக் கேட்ட கிழவி நடுநடுங்கி, மரகதத்தின் கையைப் பிடித்து இழுத்தவாறு, “ஐயோ! மோசம் மோசம்! யாரோ துஷ்டர்கள் உன் னழகைக் கண்டு உன்னைத் துரத்தி வருகிறார்கள். வேகமாக நட” வென்று சொல்லிக்கொண்டே விரைந்து சென்றாள். வரவரக் கூச்சல் சமீபித்துவிட்டதுடன் 7-8-பேர்கள் ஓட்டமாக வந்து, மரகதத்தையும் கிழவியையும் திடீரென்று வளைத்துக்கொண்டு, மரகதத்தின் தலையிலிருந்த கூடையை எடுத்துக் கீழே வைத்து, அதன்மேல் மூடியிருந்த துணியை விலக்கினார்கள். அதற்குள் ஒருவன் கிழவியின் கன்னத்தில் பளீர் என்று ஓரறை விட்டான். துணியை விலக்கிய கூடைக்குள், சுவர்ண விக்ரகம் போன்ற ஓர் ஆண் குழந்தை உடம்பு நிறைந்த ஆபரணங்களுடன் கிடந்தது. இந்த அதிவிபரீதமானதும், மிக்க கோரமானதுமான காட்சியைக் கண்டதும் நமது மரகதவல்லிக்குத் தகவல் இன்னதென்று விளங்கவில்லை. அவள், கூடையிலிருந்த அக் குழந்தையையும், அங்கு நடந்த அமர்க்களத்தையும் கண்டு திகிலும், குழப்பமும் அடைந்து ஸ்தம்பித்து அப்படியே கல்லாய் நின்றுவிட்டாள். அங்கு வந்தவர்கள், “ஓகோ! கிழவிக்கு இவள் உடந்தையாயிருப்பவள்; ஜாக்ரதை! இவளையும் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்” என்று மரகதத்தை நோக்கிக் கூறினார்கள். அவ்வாறு கூறியதைக் கேட்ட நமது மின்னாளின் நிலைமையை என்னென்று கூறுவோம்?

---

## 10—வது அதிகாரம்.

### கேடுவரும் பின்னே; மதிகெட்டுவரும் முன்னே.

தாமோதரனைப் பிரிந்த நாள் முதலாக நமது மடமயிலாள் ராஜேச்வரிக்குண்டான மன வேதனைக் கோர் எல்லையே இல்லை. அவள் சதா தனது அருமை நேசன் தாமோதரனின் நினைவாகவே இருந்து வருகிருள். அந்த அபாரமான ஏக்கத்தினுல் அவளுடைய தேகம் மெலிந்து முகத்தில் தென்பும் ஒளியும் குன்றி விகாரப்பட்டுக் கொண்டே வருகிறது. அவள் தனது துயரத்திற்கோ ராறுதலாகத் தனது அன்பன்கொடுத்துச் சென்ற பிரிய கடிதங்களை அடிக்கடிப் படித்து அவற்றில் கண்ட விஷயங்களை எண்ணி அவற்றின் மூலம் அவள் தனது அத்தானின் அபாரமான மேன்மை தங்கிய குணத்தை மெச்சி மகிழ்ந்தும், அத்தகைய அத்தானை தான் அடையும் பாக்கியம் பெறுது போனதைப் பற்றி வருந்தியும் பொழுதைப் போக்குகிருள். இதற்கிடையில் தனது உடன் பிறந்த மரகதவல்லி சம்மந்தமாய் நடந்துள்ள விபரீதமானதும் அதி பயங்கரமானதுமான செய்தியினுல் தாக்கப்பட்டு ஏக்கமே குடி கொண்டவளாகிவிட்டாள். தனது தமக்கையின் செய்தியை விரிவாக தனது அன்பனுக்கு எழுதலாமா என்று சற்று துணிவாள். மீண்டும் இத்துயரச் செய்தியை அவருக்குத் தெரிவித்து மனக் கலக்கத்தை யுண்டுபண்ணுவது கூடாதென்றும், தான் கடித மெழுதுவதை யாரேனும் கண்டுவிட்டால் படுமோசமாகிவிடு மென்றும் அவள் அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்வாள். அவளுடைய கடிதமேனும் செல்லாவிட்டால் அதனுல் தனது அத்தான் மனம் வருந்தக் கூடுமென்பதை எண்ணும்போது அவள் உடனே எழுதுவதற்கு முற்படுவாள். உடனே அன்று அவளுடைய அத்தான் தனக் கெடுத்துரைத்த புத்திமதிகளையும், கடிதத்தில் வரைந்துள்ள நீதிகளையும் எண்ணுங்கால் தன் மனத்தைத் தானே சமாதானம் செய்துகொள்வாள். இவ்விதமாகவே ராஜம் தன் மன வெறுப்புடன் நாட்களைக் கடத்துகிருள்.

ருக்மணியோ அன்னகாரத்தை அடியோடு துறந்தவளாய் தேகம் மெலிந்து, நரம்புதளர்ந்து, மனதுஉடைந்து, மார்பு துடிக்க சதா மனதில் சகிக்கவியலாது அதிகரிக்கும் சங்கடத்தைப்பொறுக்க மாட்டாது "ஆ! மரகதம்! மரகதம்! என்னை இவ்விதமாக வேதனைக்குள்ளாக்கிவிட்டாயே. என் கண்ணே! உனது தகவல் இன்னும் ஒன்றும் தெரியவில்லையே! என் செல்வி! எந்தவிடத்தில் என்ன ஆபத்தில் சிக்கிக்கொண்டு கர்ப்பிணியாகிய நீ அவஸ்தைப் படுகிறாயோ! என்ன செய்வேன்?" என்று சதா பிதற்றியவாறு படுத்த படுக்கையிலிருக்கும் நிலைமைக்கு வந்துவிட்டாள். கண்ணபிரானுக்கும் தனது உயிர் நிலையாகிய மரகதவல்லிக்கு நேர்ந்த கடுமையான கொடிய சம்பவத்தினால் மனம் புண்பட்டு விட்டது. அவன் எத்தனையோ பேப்பர்களிலும், எத்தனையோ போலீஸ் ஸ்டேஷன்களிலும் எழுதி விளம்பரம் செய்ததற்குப் பதிலே கிடைக்கவில்லை. ஜோஸியம், மாந்திரீகம் முதலியவற்றிலும் ஆயிரக் கணக்கான பணத்தைச் சிலவிட்டு தினம் பார்த்து வருகிறான். அதிலும் பலன் கிடைக்கவில்லை. இதே மனவேதனையினால் அவன் ஒன்றையும் கவனியாதிருந்தான்.

தினம் தினம் விடிந்ததும் அஸ்தமித்ததும் கண்ணபிரான் வீட்டில் மாந்திரீகர்களே மயமாக நிறைந்துவிட்டார்கள். இவர்கள் செய்யும் மந்திரத்தினால் எதுவுமே பலன் கிடையாதிருப்பதைக் கண்ட ராஜேச்வரி ஒரு நாள் தன் தாயை நோக்கி பணிவாகப் பேசத்தொடங்கி "அம்மா! இங்கு வந்துள்ள மந்திரவாதிகளை முற்றும் நீ கவனித்தாயா?" என்று கேட்டாள்.

ருக்மிணி:—அம்மா! ராஜம்! ஏன் கேட்கிறாய்? காரணம் யாது? நான்தான் படுத்த படுக்கையில் கிடக்கின்றேனே! உனது தந்தையின் செய்கையாதோ அதை நான் முற்றிலும் அறியமாட்டேன். என்மனம் என்னவோ என் செல்வி மரகதத்தை எண்ணியவாறு உருகிக் கரைந்தோடுகின்றது. இந்த வேதனைக்கிடையில் அவர்களை நான் சிறிதும் கவனிக்கவே இல்லை. ஏனம்மா! அவர்களிடத்தில் உனக்குற்ற ஐயம் யாது! அதை விளங்க விளம்பினால் அதற்கான வகையைச் செய்யலாம். என்ன செய்தி அதை யுரைப்பாயம்மா?

ராஜேச்வரி:—அம்மா! நான் சில செய்திகளை நேரில் கண்டும், கேட்டும் எனது மனம் மிகவும் பரிதபிக்கின்றது. அதைத் தம்மிடம் உரைக்காது வாளாவிருந்தால் மிகுந்த விபரீதம் நேர்ந்து விடும்; ஆதலால் கூறுகிறேன். நமது மரகதவல்லியின் செய்தி என்னவோ இன்னும் ஒன்றும் தெரியவில்லை. மாதமோ மூன்றாகி விட்டது. இந்த வேஷதாரிகளான மந்திரக்காரர்களை வீட்டில் கூட்டிக்கொண்டு மந்திரம் செய்வதே முற்றிலும் பிசகான காரியம். அதிலும் நம் வீட்டில் தற்போது கூடியுள்ளவர்களில் இரண்டு பெயர்கள் வெகு துர்க்குணமுள்ள சோதாக்களென்பது நன்றாகப் புலப்படுகின்றது. அதாவது:—நேற்று இரவு சுமார் 10 மணிக்கு அப்பா தனது சயன அறையினின்றும் ஏதோ காரியமாக வெளியில் வந்தார். அச்சமயம் இங்குக்கூடியிருக்கும் மந்திரவாதிகளில் ஒருவன் ஏதோ பெருத்த ஜபம் செய்வதுபோல மூச்சுகூட விடாது ச்வாசபந்தனத்தோடு 5 நிமிஷம் உட்கார்ந்திருந்து பின் அப்பா திரும்பிவரும் வேளைக்குச் சரியாகக் கண்ணைத் திறந்து "ஆ! இன்று செய்த ஜபத்தில் ஏதோ சிறிது செய்தி சூசனையாகத்தெரிந்தது." என்றான். அப்பா அதைக்கேட்டு மெத்த சந்தோஷங் கொண்டவராய், "என்ன செய்தி?" என்று ஆவலோடு கேட்டார். அதற்கு அந்த மனிதன் மந்திர சக்தியினால் தாக்கப்பட்டவன்போல அபிநயித்து அப்பாவை நோக்கி "ஐயா! எனது தேவதை மந்திரத்தில் கூறியதை யான் தெரிவிக்கிறேன். அதைக்கேட்டுத் தாம் ஆயாசப்படலாகாது. நானோ அயல் தேசத்தவன். இவ்விடத்திய செய்தியோ தங்கள் குடும்ப விஷயமோ அடியேனுக்கு யாதும் தெரியாது. எனது மந்திர தேவதை தெரிவித்ததாவது:—தங்களுடைய குமாரத்தி உயிருடன்தான் இருக்கிறார்களாம். இன்னும் கூடிய சீக்கிரத்தில் அது அவர்களிருக்கு மிடத்தைக் கண்டுபிடித்து விடும். அந்தம்மாளின் முன் பைராகி தோன்றி சொக்குப்பொடி போட்டு மயக்கி அழைத்துச் சென்றது உண்மையில் அந்த பைராகியே தானாகச் செய்யவில்லையாம். அது ஒருவரின் தூண்டுதலின் பேரில் நடந்திருக்கிறதாம். அவ்விதம் தூண்டியது யார் என்று தேவதையை நான் கேட்டதற்கு அது தெரிவித்ததாவது:—தங்களுடைய சகோதரியாருக்கு வளர்ப்புப் புத்திரன் ஒருவரிருக்கிறாராம். அவர்

களுக்கும் உங்களுக்கும் பெருத்த மனஸ்தாபமாம். அதோடு தமது இளைய புதல்வியை அந்த மனிதன் விவாகம் செய்துகொள்ள விரும்பி யிருக்கிறாராம்; அவரை மணக்க பெண்ணும் ப்ரியப்படுகிறாளாம். அதற்குத் தாங்கள் சம்மதிக்காமையினால் அந்த ஆத்திரம் அந்த மனிதன் மனத்தில் வெகு தீவிரமாக வேலை செய்கிறதாம். தாங்கள் தங்களுடைய இளைய குமாரியை அவனுக்கு விவாகம் செய்விக்கமாட்டீர்களென்பது தீர்க்கமாயவனுக்குத் தெரிந்ததாம். அந்த ஆத்திரத்தினால் அவன் தமக்கு ஆறாத் துயரத்தைத் தேட வெகு நாளாய் யோசனை செய்திருந்தானாம். தமக்கு முக்கியமானவள் தமது மூத்த குமாரியே யாவளாம். அவளுக்கு ஏதேனும் தீங்கு செய்துவிட்டால் உடனே தாம் மனம் வருந்தி துன்பப்படக் கூடும். ஒருகால் அதன் மூலம் இளைய குமாரியை தனக்கு விவாகம் செய்விக்கக் கூடும் என்ற எண்ணம் அவன் பூர்ணமாகக் கொண்டானாம். அதனால் அவன் யோசித்து ஓர் பைராகிக்கு 100 ரூபாய் லஞ்சம் கொடுத்து அவனைக் கொண்டு தங்கள் குமாரத்திக்கு ஏதேனும் தீங்கு செய்யும்படியாகச் சொல்லி இருந்தானாம். பைராகி சமயம் பார்த்து அவர்கள் ரயிலடிக்கு வருகையில் இவ்விதம் செய்திருக்கிறானாம். அவன் அவர்களைக் கொன்று விடவேண்டும் என்ற கருத்துடன் செய்யவில்லையாம். தாங்கள் தமது இளைய குமாரத்தியை அந்த வாலிபனுக்கு மணம் செய்துவைத்தால் திரும்ப தங்கள் மூத்த குமாரத்தியைக் கொண்டு விட்டுவிடவேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கிறானாம். அந்தம்மாளை அவன் எவ்விடத்தில் வைத்திருக்கிறான் என்பதைக் கேட்பதற்குள் நிஷ்டை கலைந்துவிட்டது. மற்றுமோர் சமயத்தில் கேட்டுத் தெரிவிக்கிறேன், ஐயா! தெய்வம் கூறியபடி தங்கள் குடும்பத்தில் இவ்விதம் யாதேனும் நடந்திருக்கிறதா!" என்று இவன் கூறிக்கொண்டே வருவதைக்கேட்ட அப்பாவுக்கு வந்துவிட்டது கோபம். அவன் கூறியதை முற்றும் நிஜமென்று நம்பிவிட்டார். அவருடைய ஆவேசம் முற்றும் அத்தான்மீதே சென்றுவிட்டது. அவர் வாயில் வந்த விதமாக அத்தானைத் திட்டியபடியே, "உம். அந்த ஊர் பேரறியாத அனாதை மகனை விட்டேனா பார். அவனை இக்ஷணமே போலீஸாரைக் கொண்டு கைதியாக்கிவிட்டு தண்டனை யடையச்

செய்கிறேன். அதுதான் அவன் எனது இளைய குமாரத்தியை விரும்பியதற்குப் பலன்" என்று தத்திக் குதித்துக் கோபத்தால் தாண்டவமாடினர்.

இது கேட்ட அந்த மோசக்காரப் படுபாவியான மந்திரக்காரன் அப்பாவை சற்று சமாதானம் செய்வது போலச் செய்து விட்டு "ஆகா! என்ன ஆச்சரியம்! தங்கள் சொந்த மனிதனு இத்தகைய விபரீதமான வேலையைச் செய்துள்ளான்? ஐயா! தாங்கள் அவசரப்படலாகாது. ஏனெனில் போலீஸாரைக் கொண்டு அவனைக் கைது செய்து விட்டால் அவர்களுக்குத் தக்க சாக்ஷியம் காட்டவேண்டாமா? நமது தேவதை சொல்லியதை யவர்கள் ஒப்பமாட்டார்கள். பெண் இருப்பிடத்தை நன்ருக யறியாமல் நாம் அவசரப் பட்டு அவனைக் கைது செய்து விட்டால் அவன் வேறு தந்திரங்கள் ஏதேனும் செய்து தனது சகாக்களிடம் தெரிவித்து அந்தம்மாளைக் கொலை செய்யவும் ஏற்பாடு செய்து விட்டுத் தான் எதையுமே அறியாதவன் என்று ஒரே வார்த்தையாகச் சாதனை செய்து விட்டாலும் விடுவான். ஆகையால் நாம் சற்று யோசித்துத்தான் எதையும் செய்ய வேண்டும். அதாவது தாங்கள் ஓர் காரியம் செய்யுங்கள். முதலில் நான் சொல்வதேபோல ஒரு கடிதம் இப்பொழுதே எழுதிப் போட்டு அவனை இவ்விடத்திற்கு வரவழையுங்கள்; நான் அவனையே மந்திர ஜபத்தில் உட்கார வைத்து அவன் வாயிலிருந்தே உண்மையைக் கக்கும்படியாகச் செய்து விடுகிறேன் பாருங்கள்." என்ருன்.

இதைக் கேட்ட அப்பா அவன் காலில் விழுந்து நமஸ்காரம் செய்து, "ஐயா, மாந்திரீகரே! தாங்கள் எவ்விதம் கூறுகின்றீர்களோ அதேபோல யான் நடக்கச் சித்தனக விருக்கிறேன். இதோ இப்போதே கடிதம் எழுதுகிறேன். செய்தியைத் தாமே கூறுங்கள்." என்று சொல்லிக் கொண்டே தமதறைக்குச் சென்று கடிதம், மசியிட்ட பேனு முதலியன கொண்டுவந்து உட்கார்ந்தார். பின்னர் அவன் கடிதத்தில் எழுதுமாறு விளம்பியதாவது :—

"எனது குடிக்குக் கோடரிக் காம்பாய் உதித்த தாமோதரா! சீச்சீ! உன் பெயரை வாயில் வைத்து அழைப்பதற்கும் பிடிக்கவில்லை. எம்பெருமானின் எழில் நிறைந்த நாமமாக விருப்பதால் அழைக்கின்றேன். எனது அருமை மகள் ராஜத்தை உனக்கு மணம் செய்விக்காமையினால் நீ எனது குடியையே கெடுக்க எண்ணிச் செய்துள்ள சதியை நானறியமாட்டேனென்று சிறிதும் எண்ணாதே! உனது வஞ்சகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக நீயே எனது அருமை மரகதத்தை மந்திரக்காரனின் உதவியைக் கொண்டு மோசடியாக அபகரித்து வைத்திருப்பதை உண்மையான சக்தி வாய்ந்த தேவதைகளின் வாயினாலேயே நான் முற்றும் தெற்றென அறிந்தேன். உன்னுடைய செய்தியை யான் விவரமாக அறிந்தும் உன்னை உடனே போலீஸார் வசம் ஒப்புவித்துக் கைது செய்யாதிருப்பதைக் குறித்து நீயே ஆச்சரியமடையலாம். அவ்விதம் ஏன் செய்ய வில்லை என்றால் த்வாதச நாமங்களில் ஒன்றான தாமோதரன் என்கிற அழகிய பெயரை நீ கொண்டுள்ளபடியால் அந்த பெயருக்குள்ள மகிமையை உத்தேசித்து உன்னை உடனே கைது செய்யாது உனக்கு இக்கடிதம் எழுதுகிறேன். உடனே உனது குற்றத்தை யொப்புக் கொண்டு இவ்விடம் வந்து நீ செய்த தவறுக்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டு என் மரகதவல்லி யிருப்பிடத்தை தெரிவித்தாலோ அல்லது அவளை உடனே இவ்விடம் அழைத்துவந்து விட்டாலோதான் நீ பிழைப்பாய். இல்லையேல் உன்னை இக்கணமே போலீஸாரிடத்தில் காட்டிக் கொடுத்துக் கைதியாக்குவேன். நீ ரகசியமாகச் செய்துள்ள இவ்விபரீதமான கடுஞ் செய்கைக்கு சாக்ஷி எது என்று எண்ணலாம். எவ்வகையிலாவது நான் சாக்ஷியேற்படுத்திக் கைது செய்து உன்னை சந்தியிலிழுப்பேன்."

(என்று அவன் கூறிக்கொண்டு வருகையில் அப்பா இடை மறுத்து "ஐயா! அவனைக் கைது செய்ய இன்னும் ஓர் வழியுண்டு. அதாவது,—எனது இளைய குமாரத்தியின் விலை அதிகமுள்ள தங்கச் சங்கிலி யொன்று அவனிடமுள்ளதை யானறிவேன். அதை யவன் திருடிவிட்டதாகக் குற்றம் சாட்டலாம். அதையே எழுதி விடுகிறேன்." என்றார். அதை யவன் மிகவும் ஆமோதித்தான். பின் அப்பா மீண்டும் எழுதத் தொடங்கினார்.)

அடேய்! திருட்டுப் பயலே! உன்னிடம் எனது ராஜேச்வரியின் தங்கச் சங்கிலி யிருப்பதை நான் மறக்கவில்லை. அதை நீயே திருடிவிட்டதாக குற்றம் சாட்டி உடனே உன்னைத் தண்டிப்பேன். ஆகையினால் உனது குற்றத்தை நீயே ஒப்புக்கொண்டு உடனே மரகதாவையும் அழைத்துக்கொண்டு நீ உடனே இவ்விடம் வந்து சேர்ந்தால் பிழைத்தாய்; இல்லையேல் நீ அடையும் துன்பத்தை பின்னால் நீயே அறிந்து கொள்வாய். இன்னும் 15 தினத்தில் எனது ராஜத்

தின் திருமண நாள் ஏற்படும். அதற்குள் ஒழுங்காக வேலையைச் செய்து விட்டுப் போய்விடு. உனது பெயருக்கு யான் வைத்துள்ள மதிப்பை நீ கெடுத்துக் கொள்ளாதே; உடனே புறப்படு. ஜாக்ரதை:

N. கண்ணபிரான்."

என்று எழுதி முடித்து அக்கடிதத்தை உரையிட்டு விட்டார். இந்த வரலாற்றுகளெல்லாவற்றையும் நானே நேரில் கேட்டுக்கொண்டிருந்தேன். அம்மா! இவ்விதமான படுமோசக் கடிதமும் அத்தானுக்கு எழுதலாகுமா!" என்று மேலே கூற மாட்டாது கண்ணீர் உதிர்த்தாள்.

இந்த அதி பயங்கரமானதும் நம்பக்கூடாததுமான வரலாறுகளைக் கேட்ட ருக்மிணி ஏற்கெனவே அடைந்திருந்த மனவேதனையோடு மேலும் பெருந் துயரத்தை அடைந்து விட்டாள். மூளை சுழல வாரம்பித்து விட்டது. மூச்சுத் திணறுகின்றது. ஆ! என்ன கொடுமை! என்ன அனியாயம்! ஐயோ! உலகத்தில் யாருக்கும் கிடைப்பதற்கரிதான அரிய வஸ்துவாகிய என் செல்வன் தாமோதரன் மீதா இப்பழியைச் சுமத்த வேண்டும்! என்னப்பனே! தாமோதரா! நீ மிதித்த மண்ணை மிதித்தோரும் இத்தகைய எண்ணத்தை எண்ணமாட்டார்களே! ஆகா! அந்த படுபாவிப் பயல் திருட்டு மோசக்காரன் உன் மீது இவ்விதம் அடாத வார்த்தையை அக்ரமமாக ஏன் கூறினனோ தெரியவில்லையே! அடடா! என்னருமை தாமோதரா! உனது நாமாவுக்கு வைத்த மதிப்பு உனது தங்கம் போன்ற குணத்திற்கு வைக்க அவருக்கு அறிவில்லாது போயிற்றே! என்னப்பனே! உன்னுடைய மனப் பூர்ணமான அன்பை இவ்விடத்தில் வைத்ததற்கு இதுவே பலன்! ஆ! என்ன செய்வேன்?" என்று அவள் சகிக்க வியலாது புலம்புகிறாள்.

ஏற்கெனவே மனம் தவித்துக் கொண்டிருந்த ராஜேச்வரி தனது தாயாரின் பரிதாபகரமான நிலைமையைக் கண்டதும் முன்னிலுமதிகரித்த துயரம் மேற்கொண்டு சிறிய குழந்தையைப் போல குலுங்கக் குலுங்கப் புலம்பிய படியே தனக்குள் "ஐயோ! அத்

தான்! இந்த அனியாயமான மோசடிக் கடிதத்தைக் கண்டதும் தமது மனம் எவ்வித துன்பத்தை யடைந்து தவிக்குமோ? ஐயோ! பாவி என் மீது தாம் கொண்ட பிரியத்தினால் சுகமேற்படாது இத் தகைய கொடுமையான பழியா ஏற்படவேண்டும்? ஐயோ! என்ன செய்வேன்? எனது திருமணம் சமீபத்திருக்கிறதென்று பொய்யாக வரைந்துள்ளதை மெய்யென எண்ணி மனந் தவிப்பீரோ! தம் மீது அக்ரமமாகக் குற்றத்தைச் சுமத்தி யிருப்பதைக் கண்டு உயிரை மாய்த்துக்கொள்வீரோ, என்னை நிந்தித்து வருந்துவீரோ?'' என்று எண்ணுகிருள்.

ருக்மிணி சற்று தேறியவளாய் ராஜத்தை நோக்கி "என் கண்ணே, ராஜம்! வருந்தாதே! நீயே தற்போது வருந்திக் கொண் டிருந்தால் மேலே யாகவேண்டிய காரியங்களைக் கவனிப்பவரெவர்? அம்மா, ராஜம்! அதற்கு மேல் என்ன நடந்தது? யாதே னும் தெரியவருமா?'' என்ருள். இதைக் கேட்ட ராஜம் மிகுந்த பிரயாசைப் பட்டுத் தனது அயரத்தை யொருவாறு ஆற்றிக் கொண்டு மேலே பேசத் தொடங்கி "தாயே! பின்னர் அப்பா சயன அறைக்குப் போய் விட்டார். எனக்கு ஒன்றும் தோன்ருது சற்று தியங்கினேன். தங்களிடம் அப்போதே இதை யறிவிக்க வெண்ணி நான் வந்தேன். தாங்கள் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந் ததால் எழுப்பாது போய்விட்டேன். பிறகு என் மனத்தையே தேற்றிக் கொண்டு துணிபுடன் அப்பாவின் படுக்கை யறைக்குச் சென்றேன். அப்போது அப்பா நித்திரை செய்யாது ஏதோ ஆழ்ந்த யோசனை செய்துகொண்டிருந்தார். அவர் திடீரென்று தான் எதிர்பாராவிதமாக என்னைக் கண்டதும் முகங்கடுத்தவராய் எழுந்து உட்கார்ந்து "ராஜேச்வரி! என்ன செய்தி! திடீரென்று எங்கு வந்தாய்? அம்மாளுக்கு உடம்பு ஒன்றுமில்லையே! நீ திடீ ரென்று வந்ததை நோக்கினதும் நான் அம்மாளுக்கு ஏதேனும் தேக அசுகம் பலமாக உண்டாகி விட்டதோ என்று பயந்தேன். என்ன செய்தி? எங்கு வந்தாய்?'' என்று கேட்டார்.

நான் மிகுந்த பயத்துடன் பேசத் தொடங்கி "அப்பா! அம் மாளுக்கு எப்போதுமிருக்கிறபடிதான் உடம்பிருக்கிறது. வேறு

விசேஷமொன்றுமில்லை. நான் தங்களிடம் சற்று பேசுவதற்காகவே வந்தேன். தற்போது தமக்கு நித்திராபங்கம் ஏற்படினும் விஷயத்தை முக்கியமாகப் பேசவேண்டியிருப்பதால் நான் இங்கு வந்தேன்'' என்றேன்.

அதற்கு அப்பா சற்று கோபக் குறியைக் காட்டியவராய், "ஆ! என்ன ! என்னோடு உனக்கு முக்கியமாகப் பேசவேண்டிய விஷயம் யாது ? அந்த விஷயம் எனக்குச் சம்மதமானதாக விருப்பின் நான் அதைக் கேட்பேன். இல்லையேல் வெறுத்துக் கூறுவேன். என்ன விஷயம்? சொல்லு.'' என்றார். பின்னர் நான் தைரியத்தை விடாது பேசத்தொடங்கி, " அப்பா ! தமக்கு யான் கூறும் விஷயம் சற்றும் பிடித்தமாயிராதென்பதை நான் முற்றுமறிவேன். ஆயினும் அதைச் சொல்லவேண்டியது அவசியமாதலால் சொல்லாமலிருக்க முடியவில்லை. கேவலம் கீழ் ஜாதியாரும், கீழ்க்கடைப் புத்தியுள்ளவர்களும், சோதாக்களும், நாணயமற்ற வாக்குடையோரும், அல்பரும் செய்யக் கூடியதான ஓர் ஹீனமான செய்கையை மகா உன்னத குலத்திலுதித்து, உயரிய பட்டங்களைப் பெற்று, மேன்மையான ஜாகிர்தார் பதவி யடைந்து, உலகெங்கும் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் சிறிய குழந்தை முதல் பெரியவர்கள் வரையில் தெரிந்து கொள்ளக் கூடிய பிரக்யாதி பெற்ற தாம் முன் பின் யோசியாது ஒரு கொடுங் காரியத்தைச் செய்யத் துணியலாமா ? அகாரணமாக ஒரு பாபத்தையும் அறியாத ஓர் ஜீவனை வதைக்க எண்ணுவது தகுமா ? இக்காலத்தில் உள்ள மாய மந்திரவாதிகளை முற்காலத்தவர்களைப் போல நம்புதல் கூடுமா ! அப்பா ! மந்திரத்தில் பலனில்லை என்று நான் கூற வில்லை. உண்மையான தபம் செய்வதும், ஜபம் செய்வதும், மாந்திரீகம் செய்வதும் எங்கேயோ நூற்றில் ஒருவரிடம் அமையும் ; அதில் இக்கலிகாலத்தில் அப்பேர்ப்பட்டவர்கள் கிடைப்பது துர்லபத்திலும் துர்லபம். அப்படியிருக்க, தற்போது தாம் வரவழைத்துள்ள மந்திரவாதிகளெல்லோரையும் உண்மை யானவர்கள் என்று நம்பி அனியாயமாய் மோசம் போகப் போகிறீர்களே! அப்பா! இங்குள்ள மாந்திரீகர்களில் இரண்டு பேர்வழிகள் மோசக்கார மாயா மந்திரக் காரர்

கள்; அவர்கள் உண்மையான மந்திரவாதிகள் என்று நீங்கள் நம்பாதீர்கள்; தந்தாய்! சற்று முன்னால் தமக்கும், அந்தத் திருட்டு மந்திரக்காரனுக்கும் நடந்த சகல விஷயங்களையும் நானறிந்தேன்; அப்பா! வேண்டாம்! வேண்டாம்!! அவனைச் சற்றும் நம்ப வேண்டாம்; அவன் கூறியுள்ள விஷயங்கள் முற்றிலும் மிக்க மோசடியானவை ; அபாண்டமான மொழியை உண்மை என்று நம்பி வீணாக அத்தானுக்கு முன் செய்த துன்பம் போதாதென்று இன்னமும் தலைக்குக் கல் வைப்பது போல இக் கொடுங் காரியத்தைச் செய்யாதீர்கள்; அவர் ஒரு பாபமும் அறியாதவர் என்பதைக் கடவுள் ஒருவரே அறிவார்; இவனுக்கு அத்தான் மீது ஏதோ கடும் பகைமை யிருக்கக் கூடும்; அதனால்தான் இவ்விதம் சதியாலோசனை செய்து கட்டுக் கதை தயாரித்திருக்கிறான் ; நீங்கள் இவனுடைய மாய வலையில் விழவேண்டாம்; அப்பா! அத்தானுக்கு நான் வாழ்க்கைப்படவேண்டுமென்ற ஆவலினால் இவ்விதம் கூறியதாக எண்ணவேண்டாம்; அப்பா! என்னை அவருக்குத் தாங்கள் மணம் செய்விக்கவே வேண்டாம்; அவர்மீது அனியாயமாகச் சுமத்தியிருக்கும் இந்த அக்கிரமமான பழியை மட்டும் மாற்றி, இந்த மாந்திரீகத் திருட்டுப் பயலை வீட்டை விட்டு ஓட்டுங்கள்; அப்பா! அவருடைய அருமையான குணத்தை நன்றாக ஆராய்ந்து பாருங்கள்; அந்தக் கடிதத்தைக் கிழித்து எறியுங்கள்; அப்பா! நம் பொருட்டு அவர் வனவாசம் செய்வதுபோல தேசாந்திரம் சென்றிருக்கின்றார்; அவ்விடத்திலும் அவர் துன்பப்படும்படி செய்யக்கூடாது; அப்பா! என்னுடைய சங்கிலியை நானே மனமொப்பி அவருக்குக் கொடுத்திருக்கையில் அதைத் தாங்கள் திருட்டுச் சொத்தென்று கூறுவது தர்மமாகுமா? அவர் காலில் ஒட்டிய தூசும் இத்தகைய வேலையில் இறங்காதே! அப்பா! அனியாயமான பாவத்தைத் தேடிக்கொள்ளாதீர்கள்; வேண்டாம்! வேண்டாம்!! கடிதத்தை அனுப்பவேண்டாம்; அம்மாளின் விருப்பமும் இதுவே யாகும்; அப்பா! அத்தானவர்கள் தங்களுக்கு யாது குற்றம் செய்தார்கள்?'' என்று கூறினேன்; அவ்வாறு கூறி முடிக்குமுன் அப்பாவுக்கு அடங்காத கோபமும், ஆத்திரமும் பொங்கி விட்டன; அவர் கண்களில் நெருப்புப் பொறி கிளம்பிவிட்டது; அந்த நிலைமையில் அவர் ஒரே பாய்ச்சலாக

என்மீது பாய்ந்து, எனது சிகையைத் தமது கையினால் பிடித்து இழுத்துக்கொண்டுவந்து என்னை வெளியில் தள்ளிவிட்டு, 'அதிகப் பிரசங்கிக் கழுதை! உனக்கு இத்துணை தைரியம் வந்துவிட்டதா! நாயே! அந்தத் திருட்டு ராஸ்கல் செய்த திருட்டு வேலையை மறைக்க நீ இங்குத் தாளம் போடுகிறாயா! சீச்சீ! என் கண் முன் நீ வராதே; அப்புறம் செல்லு' என்று வைதபடியே உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டார்.

அம்மா! அப்போது எனக்குண்டான துயரத்திற்கோ ரளவே யில்லை; உடனே நான் தங்களறைக்கு வந்து தாங்கள் விழிக்கும் நேரத்தை எதிர் பார்த்திருந்தேன்; தாங்களும் கண் விழித்தீர்கள்; இன்று ரிஜிஸ்தர் மூலம் அந்த வஞ்சகக் கடிதம் போகப்போகிறது; இதற்கு நாம் என்ன செய்யலாம்? எனக்கு ஒன்றுமே புலப்பட வில்லை?'' என்று கூறி வருந்தினாள்.

இதைக்கேட்ட ருக்மிணி அடக்க வியலாத கலக்க மடைந்து, கண்ணீர் பெருக்கினாள். பின்னர்ச் சற்று தேறியவளாய்ப் பேசத் தொடங்கி, ''அம்மா! ராஜம்! என்னுடைய உயிரை நான் சடுதியில் போக்கடிக்கும் வழியையே உன் தந்தை செய்து வருகிறார்; நான் என்ன செய்வேன்? மறுபடியும் ஒரு முறை நானே உன் தந்தை யிடம் மன்றாடிப் பார்க்கிறேன்; பின்னர் ஈசன் விட்ட வழியாகிறது'' என்று ராஜத்தைத் தேற்றினாள். தாயார் தன்னை என்னவிதமாகத் தேற்றியும் ராஜத்தின் மனத்திலுள்ள வருத்தமென்னவோ சிறிதும் குறைந்தபாடில்லை.

கண்ணபிரானுக்கு அன்று உண்டாயிருந்த மனத்தாங்கலி னால் அவன் வழக்கமாக ருக்மிணியைப் பார்க்க வருவதையும் மறந்தான். அவன் காலை 9 மணிக்குத்தான் தனது அறையை விட்டு வெளியில் வந்தான். வந்ததும் தனது போஜனத்தையும் நாடாது வெளியில் சென்றுவிட்டான். பகல் சுமார் 1 மணிக்கு விடு வந்தான். அப்போதும் அவன் ருக்மிணியைக் கவனிக்க வில்லை. வழக்கத்திற்கு விரோதமாகத் தனது பர்த்தா வந்து தன்னைக் காணமலிருப்பதிலிருந்தே அன்று அவன் மிகுந்த

கோபத்திலிருக்கிறான் என்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டது. அதனால் அவள், "இனிமேல் நாம் அவரை வரவழைத்து அவரோடு பேசினாலும் அவர் நமது வார்த்தையைச் சிறிதும் காதில் வாங்கமாட்டார்" என்று தீர்மானித்து, ராஜத்தை நோக்கி, "அம்மா! மணியோ 1 ஆகியும் உன் தந்தை இங்கு எட்டிப் பார்க்கவே யில்லை; இனிமேல் நாம் அவரைக் காண நினைப்பதில் பயனில்லை; இந்நேரம் கடிதமும் தபாலில்போய்ச் சேர்ந்திருக்கும்; ஆகையினால் நாம் என்ன செய்யலாம்? ஒருயோசனை சொல்லு பார்ப்போம்". என்றாள்.

இதைக் கேட்ட ராஜேஸ்வரி, "அம்மா! உங்களுக்குத் தெரியாத யோசனை யான் என்ன சொல்லப்போகிறேன்! ஆயினும் தாங்கள் கேட்பதால் ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொல்லு கிறேன்; அதாவது:—அத்தானுக்கு அக்கடிதம் எப்படியாயினும் போய்ச் சேர்ந்துவிடும்; 'அக்கடிதத்தில் கண்ட விஷயம் பொய்' என்றும், 'அதைத் தாங்கள் நம்ப வேண்டாம்' என்றும் உடனே நாம் இன்று தபாலிலேயே போய்ச் சேரும்படி மற்றொரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டால் அதனால் அவர் மனம் சற்று சமாதான மடையும் என்று எண்ணுகிறேன்" என்றாள். இதைக்கேட்ட ருக்மணி, 'இது நல்ல யோசனைதான்' என்று அவ்விதமே கடிதம் எழுதிக்கொண்டு வரும்படி ராஜேஸ்வரிக்குச் சொன்னாள். ராஜேஸ்வரி, தன் தாயின் பக்கத்திலேயே உட்கார்ந்து அவளிடம் சில விஷயங்களைக் கேட்டுக்கொண்டும், தானாகச் சில விஷயங்களைச் சேர்த்துக்கொண்டும் கடிதத்தை எழுதி முடித்து அதை ருக்மிணி யிடம் படித்துக் காட்டிவிட்டு லகோடாவில் போட்டு, அதில் தபால் தலை யொட்டி, அதைத் தங்கள் வீட்டு வேலைக்காரன் வசம் தபாலா பீசுக்கு அனுப்பிவிட்டாள். அந்த ஆள் அதை வீதியிலுள்ள தபால் பெட்டியில் போட்டுவிட்டதால் அன்று கட்டுக்கு அதை எடுக்கும் நேரம் தவறிவிட்டது; அதனால் மறுநாள் கல்கத்தா வழி யாக அக்கடிதம் செல்லலாயிற்று.

இஃதிங்ஙன மிருக்க ரங்கோனிலிருந்த நமது தாமோதரனுக் குக் கண்ணபிரான் அனுப்பிய கடிதம் சேர்ந்தது. அக்கடிதத்தை

அவன் கண்டு 6வது அதிகாரத்தின் ஈற்றில் சொன்னபடி மூர்ச்சை யாகிவிட்டான். அப்படி மூர்ச்சித்தவன் சுமார் ஒரு மணிநேரம் கழித்து எழுந்தான். அவ்வாறெழுந்து தனது சுய உணர்வைப் பெற்றதும், தனது அப்போதைய நிலைமையையும், தனக்கு வந்த கடிதத்தில் கண்ட அதி பயங்கரமும், விபரீதமுமான விஷயங்களையும் எண்ணி மனம் தளர்ந்து கண்ணீரொழுகியவண்ணம் ஆற்றுவோரும், தேற்றுவோரும், போற்றுவோரும் இன்றி அனாதையைப் போன்று வருந்தினான். "அந்தோ! நமது பரிதாபத்தைக் கண்டு இப்போது இரக்கங் கொள்வாரெவர்? நம்மைச் சார்ந்த எவரேனும் இவ்வமயம் நம் அருகிலிருப்பார்களேயானால் எவ்விதம் துடிப்பார்கள்!'' என்று தானே எண்ணி விசனமுற்றான். (இந்தக் கடிதந்தான் 6-வது அதிகாரத்தின் இறுதியில் தாமோதரனுக்கு வந்ததாகக் கூறப்பட்டதும், இவ்வதிகாரத்தில் கண்ணபிரான், மாந்திரீகன் தூண்டுதலால் எழுதியனுப்பியதாகக் கூறப்பட்டதுமாகும்). அதிலுள்ள விஷயமாகிய அம்பு, தாமோதரனின் அங்கம் முற்றும் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டது. உடனே அவன், "ஐயோ! விதியே! மரகதவல்லிக்கு நேர்ந்துள்ள ஆபத்து என்னால் நடந்ததாமே! இக்கொடுமைக்கு யான் என்னசெய்வேன்! என் விதியை எண்ணி வருந்தியவாறு என் காலத்தைப் பரதேசத்தில் பரதேசிபோலக் கழிக்க வந்தும், என்வினை என்னை விடவில்லையே! ஐயோ! யான் ஒருபாவத்தையும் அறியமாட்டேனே; நான் மரகதவல்லியைப் பார்த்தே மாதக்கணக்கில் நாள் ஆகிவிட்டதே; என்மீது வீணாக இவ்விதமான எண்ணம் திடீரென்று மாமாவுக்குத் தோன்ற வேண்டிய காரண மென்ன? ஹா ஜகதீசா! என்னசெய்வேன்? என் னருமைக் காதலி ராஜேஸ்வரியை யானடையவில்லை என்ற ஆத்திரத்தினால் நான் இவ்வித சதியைச் செய்தேனென்று என் மாமனார் கரத்தினாலேயே கடிதம் எழுதிவிட்டாரே! ஐயோ! கடவுளே! எனது ராஜத்தை யானடையாவிடினும் என் மன மார அவர்களுடைய குடும்பத்திற்கோ, அவர்களைச் சார்ந்தாருக்கோ ஒரு சிறிய தீங்கையும் எண்ணமாட்டேனே; மாமனார் எனது சுபாவத்தை வெகு நாட்களாக அறிந்திருந்தும் இவ்விதம் என்மீது தப்பபிப்பிராயம் கொண்டுவிட்டாரே! ஐயோ! எனக்கவர்கள்மீதுள்ள

பக்ஷத்திற்கு அளவே யில்லையே; அங்ஙன மிருக்க என்னைக் குடிக்குக் கோடரிக்காம் பென்றும், திருட்டு நாயென்றும் என் மாமனார் தம் கரத்தினாலேயே எழுதியதை நினைக்க நினைக்க என் மனம் புண்ணாய்ப் போகின்றதே; ஹா! என்னுடைய பிறவி இவ்விதமாகவா அமையவேண்டும்! தாமோதரனென்ற நாமத்தை நான் கொண்டிருந்தும் அதன் மகிமையினாலாவது எனக்கு நன்மை யேற்படவில்லையே; ஆ! ராஜேஸ்வரி! நான் உன்னை யடைய அபாக்கியவந்தனாக விருப்பினும் இத்தகைய அபாண்டப் பழிக ளெல்லாம் என் தலையில் வந்து அமரலாமா! ஹா! இந்தக் குற்றமானது நான் கனவிலும் கண்டறியாததென்பதை எவ்விதம் நான் என் மாமனாருக்கு எடுத்துரைப்பேன்? நான் என்ன சொல்லிய போதிலும் அவர் மனத்தில் கொண்ட கோபத்தை மாற்றும் சுபாவ முள்ளவரல்லரே! இந்த விபரீதமான சங்கடத்திற்கு நான் என்ன செய்வேன்? ராஜம் இச்செய்தியை அறிந்தாளோ அறிய வில்லையோ தெரியவில்லையே! உம். அவள் அறிந்திருந்தாலும் யாது செய்யக்கூடும்? தந்தைக்குள் அடங்கியுள்ள கன்னிகைதானே! அவள் தாயாரும் பூமிதேவிக்குச் சமமானவள்; அந்த அம்மாளும் கணவனுக்கடங்கியவளே; தாம் போகும் வழியே செல்லும் சுபாவ முடைய மாமாவின் செய்கையை அந்த அம்மாளாலும் தடுக்க முடியாது; அவ்விதம் தடுக்கக் கூடியவர் கடவுளொருவரே; மற்ற வரால் அது ஆகும் காரியமன்று; ஐயோ! நான் திடீரென்று அங்கு எவ்விதம் செல்வேன்! அதோடு மரகதத்தை நான் எங்கென்று தேடி அழைத்துச் செல்வேன்; ஐயோ! இந்தவிதமான கஷ்டத் திற்கு நான் ஆளாவேன் என்று சிறிது நேரத்திற்கு முன்வரையில் எண்ணவில்லையே! ஏ கருணையங் கடவுளே! வீணாக என்மேல் கூறப்பட்டுள்ள அபாண்டத்தை மாற்றுவதற்கு நீயே தகுதியான வன்; வேறு தந்திரமும், மந்திரமும் அதனைத் தீர்க்கக் கூடியன வல்ல; என்னப்பனே! ஜதீசா!

அண்டங்கள் முற்று முனைத் தண்டனிட்டுப் போற்றும்
அமலனே ஆயர் கோனே !
அஞ்சாத நேஞ்சுடைய வஞ்சியாம் பூதனையை
அலறிடச் செய்த கோனே !

எண்டிசையும் இடியோங்கி இருளுடன் பெய்த அவ்
விரவு மழை தடுத்த கோனே !
இன்பமுடன் தனைச்சார்ந்த கோபாலருக்கு முனம்
இருபாதம் தந்த கோனே !
மண்டலம் புகழ்வனிதை மன்னவர்சபைதனில்
வருந்திடக் காத்த கோனே !
வறுமையால் துயருற்ற மாசறுசுதாமனின்
மனமகிழச் செய்த கோனே !
தண்ளேவ ஹாரமோடு தனஞ்சயன் தேரினில்
சாரத்யம் செய்த கோனே !
தங்குபுகழ் திருவல்லிக் கேணிதனில் மேவியருள்
சாரதீ சரணம் கோனே !

ஒன்றையும் அறியாப்பாவி இளைஞன் யான் என்ன செய்வேன்? என்னால் இத்துயரத்தைச் சகிக்கக்கூடவில்லையே ! ஐயோ ! ராஜம் ! உன்னுடைய அன்பைப் பெறுப் பாவி யான் துன்பங்களுக்கு இலக்காகும்படியான தண்டனையை வகித்து உயிர் வாழ்வதை விட என்னுயிரை மாய்த்துக் கொள்வது நலமென்று நினைக்கிறேன்; ஆ ! என் கண்மணீ ! ராஜேஸ்வரீ ! உனது திருமணத்திற்கு இன்னும் 15 நாட்களிருக்கின்றனவாமே ! ஐயோ ! பாவி யான் அவ்வூரிலேயே இருந்தாலும் உனது திருமணக்கோலத்தில் உனது அலங்காரங்களையேனும் கண்ணாரக் கண்டு ஆநந்திப்பேனே ; அதற்கும் அபாக்கியனாகி விட்டேனே ! அதை நான் பார்க்குங் காலம் வாய்க்குமோ வாய்க்காதோ ; நான் ஒரு சமயம் பார்க்கா விட்டாலும், நீ எவ்விதமேனும் உன்னெழிலுக்கும், மனத்திற்கும், குணத்திற்கும், கல்விக்கும், புத்திக்கும் ஒத்த கணவனையும், சுத்த சித்தனையும், உத்தம குணத்தனையும், சித்தசரூபனையும், உத்தம சீலனையும், சத்திய வாக்குடையவனையும், நித்தமும் கடவுளைத் தொழுபவனையும், உன் சித்தத்தைக் களிக்கச் செய்பவனையும், இத்தலத்தோர் போற்றக்கூடிய புண்ணிய சீலனையுமுள்ள சுத்த வீரன் ஒருவனை மணம் செய்து கொண்டு அவனோடு களிப்புடன் இல்லறம் நடத்தி வருவாயானால் அதை நான் கேள்விப்பட்டாவது சந்தோஷமடைவேன் ;

என் கண்ணே! உன் மனமகிழ மணம் செய்துகொண்டு வாழ்வா யாக; என்னை—இப்பாவியை—அறவே மறந்துவிடு........ஹா! என்ன இது! நமக்குத் தற்போது வந்துள்ள வீண் பழிதீர வகை தேடா மல் எதையோ எண்ணி வீணாக ஏக்கமடைந்து கொண்டிருக்கின் றோமே; இந்தக் கொடிய கடிதத்திற்கு எவ்விதம் பதிலளிப்பது?'' என்று பலவிதமான யோசனையில் மனத்தைச் செலுத்தித் தாங்க வியலாத துக்கமும் குழப்பமுமடைந்து உன்மத்தனைப் போல ஆகி விட்டான்.

அவனுடைய முகமும் சிரசும் ஓர் சிறிய மலையைப்போன்றும், கண்களிலிருந்து கண்ணீர் வடிவது அம்மலையில் அருவி பாய்வதைப் போலவும் தோன்றின. அப்போது அவனுடைய நிலை மிகப் பரி தாபகரமான காட்சியாக விருந்தது. இந்நிலையில் அவன் ஆற்றுவா ரற்று அனாதையைப் போல புலம்பியபடியே தனது படுக்கையில் படுத்து விட்டான். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவன் புரண்டு புரண்டு எண்ணமிட்ட வண்ணமாக இராப் போஜனத்தை யும் வெறுத்து மீறிய சோகத்தினால் தேகத்தை மறந்து, பசி தாகங் களையும் துறந்து துயிலில் ஆழ்ந்து விட்டான்.

தாமோதரன் அன்று இராப் போஜனத்திற்கு வாராமையால் அவனுடைய சிநேகிதனான சந்திரசேகரன் என்பவன் அவன றைக்கு வந்து அவனைப் பார்த்தான். அப்போது தாமோதரன் வாட்டமடைந்த முகத்துடன் உலக நாட்டத்தில் மனத்தைச் செலுத் தாமல் துயில்வதைக் கண்டு அவனுக்கு ஏதேனும் தேக அசௌக் கியம் ஏற்பட்டிருக்குமென்று எண்ணியவனாய்க் கதவை இடிக்க லாமா என்று யோசித்தான். அப்படி எண்ணியவன், "ஒரு கால் அவ்விதம் செய்வதால் அவன் தேக சுகத்திற்கோ, நித்திரைக்கோ பங்கம் நேருமே'' என்று அவ்வாறு அவனை எழுப்பாமல் திரும்பிப் போய் விட்டான். பின்னர் ஆதித்தனுதயமானதும் வழக்கம் போல அங்கு வந்து அவனைப் பார்த்தான். தாமோதரன் அப்போது சற்று கண் விழித்து ஓர் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்; அப்படி யிருப்பதைக் கண்டதும் சந்திரசேகரன் கதவை யிடித்தான். உடனே தாமோதரன் கதவைத் திறந்து சந்திரசேகரனை அழைத்து ஆசனத்தில் உட்கார வைத்தான்.

சந்திரசேகரன் :—என்ன தாமோதரா! உடம்புக்கு ஏதேனும் அசௌகரியமோ? நேற்று இரவு நீ போஜனத்திற்கு வரவே இல்லையே! என்ன உடம்புக்கு? உன் முகத்தைப் பார்க்கும் போது நீ ஏதோ பலத்த நோயினுல் பீடிக்கப்பட்டவன் போல தோன்றுகின்ருயே! என்ன செய்தி?

தாமோதரன் :—நேற்று முதல் எனக்குச் சகிக்க வியலாத தலை வலி; அதோடு சிறிது ஜுரமும் வந்து விட்டது; மண்டையிடியினுல் கண்ணைத் திறக்க முடியவில்லை; அதனுல்தான் நான் எழுந்திருக்காது படுத்து விட்டேன்; மேலும் பசி என்பதே எடுக்காமல் வயிற்றில் மந்தமாயுமிருந்தது; இரவு பட்டினி போட்டதால் தற்போது உடம்பு சற்று இலேசாக விருக்கிறது.

சந்திரசேகரன் :—அப்படியானுல் டாக்டரிடம் மருந்து வாங்கிச் சாப்பிடலாமே; இதோ அடுத்த வீட்டிலிருக்கும் வைத்தியர் மிகவும் கை தேர்ந்தவராம்; அவரிடம் சென்று மண்டை யிடிக்கு மருந்து வாங்கிக் கொண்டு வரலாம் வா. அடிக்கடி இவ்விதம் மண்டை யிடி உபத்திரவமுண்டாக இடங்கொடுக்கலாகாது; எழுந்திரு.

தாமோதரன் :—"இதற்கு வைத்தியம் ஒன்றும் வேண்டியதில்லை; எனக்கு இந்த மண்டை யிடி பாலியத்திலிருந்து வருவது வழக்கந்தான்; எத்தனையோ மருந்து சாப்பிட்டும் இது தீரவில்லை; கடவுளே கண் திறந்து பார்த்தால்தான் தீரும்; இதற்காக நீ கவலைப் படாதே; எழுந்து ஸ்நானத்திற்குச் செல்வோம்; நேரமாய் விட்டது" என்று கூறியபடியே மேலே அதிகமான வார்த்தை எதுவும் பேசுவதற்கு இடங் கொடாது சட்டென்று எழுந்து விட்டான்.

பின்னர் இருவரும் ஸ்நானத்திற்குச் சென்ருர்கள். தாமோதரன் தனது ஸ்நானத்தை முடித்துப் பூஜை செய்து விட்டு, இயன்ற வரையில் கொஞ்சம் போஜனம் சாப்பிட்டு விட்டுத் தனது தொழிற் சாலைக்குச் சென்று மாலை வீட்டிற்குத் திரும்பினுன். அன்று அவன் பேருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அவன் அதை எடுத்துப் பார்த்தான். அதன் மேல்விலாசம் ராஜேஸ்வரியின் கையெழுத்துப்

போல விருந்தது. அதைக் கண்டு அவன் திடுக்கிட்டு பிரமித்துத் தம்பித்து நின்று விட்டான். பின்னரும் அந்த எழுத்து ராஜேஸ்வரியின் கை யெழுத்துத் தானு என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டுக் கடிதத்தைப் பல தரம் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அது அவள் கை யெழுத்தென்றே நிச்சயமாக அவனுக்கு விளங்கிற்று. அதன் மேல் அவன் அளவற்ற ஆச்சரியமடைந்து, மனத்துடிப்புடன் தனது அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு கடிதத்தின் உறையைக் கிழித்து விட்டுக் கடிதத்தைக் கையிலெடுத்தான். ஆகா! அது ராஜத்தினுல் எழுதப்பட்டதுதான் என்பது சந்தேகமற அவனுக்குத் தெரிந்து விட்டது. அவன் மனம் அப்போது அடைந்த ஆநந்தத்திற்கு ஓர் எல்லை யில்லை. அவன் ராஜத்தையே நேரில் காண்பது போலான மகிழ்ச்சியை அடைந்து அந்தக் கடிதத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டான். "ஆகா! திடீரென்று ராஜம் கடிதம் எழுதியிருப்பதிலிருந்து ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென்பது தெற்றென விளங்குகின்றது; என் கண்மணி என்ன எழுதியிருக்கிருளோ அதைப் படித்துப் பார்ப்போம்" என்று எண்ணியவனுய்க் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினுன். அதில்,

"எனது அன்பும், காதலும் நிறைந்த ஹ்ருதயமாகிய கோயிலில், குடி கொண்டு சதா எழுந்தருளியிருக்கும் எனது ஆருயிர் அத்தானின் சரண கமலங்களுக்கு எனது நிஷ்களங்கமான மனத் தடாகத்தில் புஷ்பித்திருக்கும் பக்தி என்னும் தாமரை மலரினுல் அர்ச்சனை புரிந்து அனேககோடி தண்டனிட்டுச் செய்யும் விக்ஞாபனம்:

எனதரிய அத்தான்! நாம் ஒருவரையொருவர் பிரிந்து வனவாசம் செய்வது போல தூர தேச வாசம் செய்வதிலிருந்து நமக்குச் சுகமென்பதே யில்லாமல் அடியோடு நீங்கி விட்டது; இது நமக்குத் தெரிந்ததே; ஆதலின் நான் நமது சுக க்ஷேமத்தைப் பற்றி இதில் எழுதுவது அனுவசியமாம். ஈசனருளால் என் தாய் தந்தையர்கள் சுகமே; எனினும் மரகதவல்லியின் விஷயத்தினுல் தற்போது அவர்களும் சுகமின்றியே வாடுகின்றுர்கள்.

அன்பான அத்தான்! நான் இத்தனை நாட்களாகத் தமக்கு ஒரு கடிதமேனும் எழுதாதிருந்து இன்று எழுதியிருப்பதைக் கண்டு தாங்கள் வியப்புறலாம். எல்லாம் காலத்தின் கொடுமை தான். அடியாள் சந்தோஷகரமாகத் தங்களுக்கு மாலை சூடுவேன் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்கும் பாக்கியத்தை யடையாதவளாயிருப்பினும், தங்களுக்கு என் தந்தையாலனுப்பப்பட்ட கடிதமாகிய கொடிய வாளானது (ஈட்டியானது-அம்பானது) தங்கள் மனதைத் துளைத்திருக்குமென்பதைப் பாவி யானறிந்து அவ்வம்பு துளைத்ததாலேற்பட்ட வடுக்களைச் சற்று ஆற்றவேண்டுமென்று துணிந்தே இக்கடிதத்தைத் தங்களுக்கு என் தாயின் சம்மதியின் பேரில் வரைந்துவிடுத்துளேன். எனதன்புக்குரிய அத்தான்! தங்களை நான் பிரிந்து மாதங்களும், நாட்களும் சில-பல-வானுலும் என் மனத்திற்கும் தமது மனத்திற்கும் எத்தனையோ கற்ப கோடி காலமாகிவிட்டது போலத் தோற்றக்கூடியனவாயிருக்கின்றன; அத்தான்! அன்று நாமிருவரும் தோட்டத்தில் சந்தித்த காலத்தில் பாவி என்னால் தங்களுக்கு எத்தனை துன்பங்கள் ஏற்பட்டன! அந்தக் கோரமான சம்பவத்துடன் உடலை விட்டுச் செல்லும் உயிர் போல தாங்கள் என்னைப் பிரிந்து பரிதாபகரமான பார்வையுடன் சென்ற காட்சியானது என் மனத்தில் புகைப் படம்போலப் பதிந்து விட்டது; அந்தக் காலத்தில் என் மனத்திலுண்டான உணர்ச்சியே என்னை முற்றிலும் கவர்ந்து கொண்டது. அதே நாடகம் என் கண் முன்னுல் சதா நடித்துக் கொண்டே இருக்கிறது. எனதன்பரே! தமது ஆவியும், மனமும் எவ்விதம் துடிக்கின்றதோ! உம்; நமது பிரிவாற்ருமையைக் குறித்து எழுதுவதென்ருல் இக்கடிதமே ஒரு புத்தகமாகிவிடும்; நமது சென்ற ஜன்ம பலன் எவ்வித மிருக்கிறதோ அதை நாம் அனுபவித்துத்தான் தீரவேண்டும்; அத்தான்! ஆனுல் ஒன்று கூறுவேன்: தமக்கென்றே இக்காயத்தையும், ஆத்மாவையும் பரிவுடன் ஊட்டி ஆட்டி வளர்த்து விட்டுப் பின்னர் இவற்றைப் பிறருக்குத் தத்தம் செய்தால் அடியாளின் உயிர் அதிக நாளைக்கு நிற்காது; தங்களுடைய மேலான புத்திமதிகளையும், நீதி நிறைந்த கடிதங்களில் கண்ட விஷயங்களையும் நான் சிரசாக வகித்தேன்; என் பெற்ருேர் விருப்பப் படியே நான் என் மனசாக்ஷிக்கு விரோத

மாகக் கடி மணம் (தேள் கடி, மற்ற விஷ ஜந்துக்களின் கடிகளைப் போலான கசப்பு மணம்) செய்து கொள்ளச் சித்தமாகி விட்டேன்; எனினும் எனது சித்தமென்னமோ தமது பாதகமலத்தில் பதிந்து விட்டதை மாற்றவல்லவர்கள் ஈசனைத் தவிர வேறெவருமில்லை; இது உறுதி; இன்பமுள்ள அத்தான்! நான் கடிதம் எழுதுவதற்கான முக்கிய விஷயத்தை விடுத்து, கானல் நீரைக் கண்டோடும் மானைப் போல, நீங்கியும் நீங்காததுபோலத் தோன்றும் நம் சம்பந்தத்தை எண்ணி ஏதேதோ எழுதி விட்டேன்; இதனுல் பயனென்றுமில்லை; எல்லாம் ஈசன் செயல்; அத்தான்! என் சகோதரி மரகதவல்லியின் செய்தியைத் தாங்களறிந்திருப்பீர்கள்; அவளைத் தேடும் விஷயமாக எனது பிதா சில மாந்திரீகர்களை வீட்டில் வருவித்து மந்திரம் செய்கிறார்; அவர்களில் இருவரைக் கண்டவுடன் எனக்கு மிகுந்த சந்தேகமே தோன்றிற்று; அவர்கள் வேஷதாரிகளே யன்றி உண்மை மாந்திரீகர்கள் அல்லவென்பதே என் துணிபு; அதைப் பற்றி என் தந்தையிடம் நான் எவ்வளவோ கூறியும் அவர் செவியில் அதை வாங்கவே யில்லை; அந்தத் திருட்டுப் பயல்களில் ஒருவன், தனக்கு ஜபத்தில் தேவதை சொல்லியது போல, தங்களுக்கு வந்த கடிதத்தில் கண்ட செய்திகளைத் தெரிவித்து என் தந்தையின் கோபத்தை யின்னும் அதிகமாக மூட்டி விட்டான்; அதோடு அந்தக் கடிதத்தையும் அவர் எழுதும்படி அந்தப் பாவி செய்து விட்டான்; அவன் சொற்படியே அக்கடிதத்தை என் பிதா எழுதினர்; உண்மையில் முதலில் என் பிதாவுக்குத் தங்கள் மீது சற்றும் சம்சயமே கிடையாது; அந்த மாயக்காரச் சண்டாளத் துரோகி எவனே தங்கள் மீது வேண்டுமென்றே இந்தப் பழியைச் சுமத்தி விட்டான்; அந்த மோசக்காரச் சண்டாளன் எவனே தெரியவில்லை; அவன் சொல்லியதையும், செய்வதையும் பார்த்தால் தங்களுக்கு அவன் விரோதியாயிருப்பான் என்றே என் மனம் எண்ணுகின்றது; என் அன்பரே! தாங்கள் அக்கடிதத்தில் கண்ட விஷயத்தைக் குறித்துச் சிறிதும் வருந்தவோ, பயப்படவோ வேண்டாம்; தாங்கள் இந்தக் கடிதத்தைப் பார்க்கும் வரையில் என்ன விதமான அவஸ்தைப்படுகிறீர்களோ என்ற வருத்தமே என்னை வதை செய்கிறது; அத்தான்! என் தாயார் தங்களை

மிகவும் அன்புடன் விசாரிப்பதாகவும், என் தந்தையின் கடிதத்திற்குத் தாங்கள் சற்றும் கலக்கமுற வேண்டாம் என்றும் இக் கடிதத்தில் தங்களுக்கு எழுதச் சொன்னார்கள்; என் பிரியரே! மரகதவல்லியின் செய்தி நன்ருகத் தெரியும் வரையில் நான் அது விஷயமான தகவலைத் தங்களுக்கு அடிக்கடி தெரிவித்துக் கொண்டு வருகிறேன்; அத்தான்! இச்சமயம் தமதருகில் அடியாள் இருந்து தங்களை ஆற்றித் தேற்றினால் தாங்கள் எவ்வித சாந்தமடைவீர்களோ அதே போலத் தாங்கள் அடியாளின் நிருபத்தைக் கண்டு தேறுதலை யடையும் படி தங்களை மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்; என் இன்ப துரையே! தமது மனது புண்பட்டுத் தவிக்கவேண்டுமென்ற நோக்கத்துடனேயே என் தந்தை எனக்குத் திருமணம் சமீபித்திருக்கிறது என்று வரைந்திருக்கிருரே யன்றி உண்மையில் தற்போது அவ்வித ஏற்பாடு எதுவும் நடைபெறவில்லை; ஆதலால் அதனாலும் தாங்கள் வருத்தமடையவேண்டாம்; எனதாருயிராகிய அத்தான்! இங்கு நான் தங்கள் பொருட்டு எவ்வளவோ மும்முரமாக வேலை செய்து வருகிறேன்; கூடிய சீக்கிரத்தில் என் தந்தை நம்பும்படி அந்த மந்திரவாதிப் பயலை, 'இவன் உண்மை மந்திரவாதி யல்ல; வேஷதாரி' என்று அவருக்கு நிரூபித்துக் காட்டிவிட்டுத் தங்களுக்கதை விரைமாகத் தெரிவிக்கின்றேன்; ஆகையால் தாங்கள் என் தந்தையின் கடிதத்திற்குப் பதிலே போடவேண்டாம்; இவ்விடத்திற்குத் தாங்கள் வரவும் வேண்டாம்; அவசியமான போது யான் தெரிவிக்கின்றேன்; இன்று அதிகம் எழுதுவதற்கு நேரமாகி விட்டதால் இதோடு முடித்துக்கொண்டு நமஸ்கரிக்கின்றேன், அத்தான்! முக்கியமான இன்னுமொரு விஷயத்தை எழுத மறந்தேன்; ஆதலின் அதையும் எழுதி முடித்து விடுகிறேன்; அதாவது:—தாங்கள் அன்று என்னைத் தோட்டத்தில் சந்தித்த காலத்தில் தாங்கள் என் முகத்தை அன்புடன் நோக்கி, 'ராஜேஸ்வரி! உன்னை நான் ஒரே ஒரு வரம் கேட்கின்றேன்; அதாவது:—நீ என்னிடம் பிரீதிவைத்து நேசிப்பது உண்மையாக விருந்தால் எனக்கு எந்த நேரத்திலாவது ஏதேனும் ஆபத்து நேருமாயின் நீ அதினின்றும் என்னைக் காக்கவேண்டும்; அதுதான் நான் உன்னிடம் கோருவது' என்று அன்போடு தெரிவித்த

வார்த்தை உண்மையாக என் நினைவைவிட்டு அகலவில்லை; அந்தச் சந்தர்ப்பமும், அந்த வார்த்தையும் என் மனத்தில் நிலைத்து நின்று என்னை வருத்துகின்றன; என்னன்பான அத்தான்! தாங்கள் கேட்டுக்கொண்டபடியே எனது உயிரையும் பொருட்படுத்தாமல் தங்களுக்குற்ற இவ்வாபத்தைத் தடுக்க யான் கடமைப்பட்டுள்ளேன்; இதை யான் திண்ணமாகச் செய்தே தீருவேன்; இந்த உறுதி மொழியை நீங்கள் நம்புங்கள்; அத்தான்! நாம் இருவரும், ஒருவர் மீதொருவர் உண்மையும், தெய்வீகமுமுள்ள காதலைக் கொண்டிருந்தும் மணமுடித்து மனமொத்து இல்லற இன்பத்தை இனிது பெறாமல் அவ்விஷயத்தில் அபாக்கியர்களாகிவிட்டோம்; ஆயினும் நமது ஆன்மாக்கள் மட்டும் என்றும் ஒன்றுபட்டே யிருக்கும்; அடுத்த உலகம் சென்றாலும் அவ்விடத்தும் அவை பிரியமாட்டா; அத்தான்! மற்றொன்று: இனி நாம் இந்த ஜன்மத்தில் ஒருவரை யொருவர் மணக்கவோ, சந்திக்கவோ ஏது வுண்டாகவே மாட்டாது; தங்களுக்கென்றே போஷித்துவந்த என் காயத்தை அன்னியருக்களித்து அவதிப்பட என் மனம் இடங் கொடுக்கவில்லை; அதனால் நான் என் தேகத்தை அக்கினி பகவானுக் கிரையாக்கி விடப் பல தடவைகளில் துணிந்தேன்; அவ்வாறு துணிந்தும், தங்களுடைய அருமையான நீதி போதனையும், என் மாதா பிதாக்களுடைய பரிதாப நிலைமையும் அவ்வாறு செய்யாமல் என்னைத் தடுக்கின்றன; என தன்பரே! இன்னும் என் மனத்திலுள்ளவைகளை யெல்லாம் எழுதிக்கொண்டே போனால் இக்கடிதத்திற்கு முடிவென்பதே ஏற்படாது; ஆதலின் நமது விதியை எண்ணி இதோடு இக்கடிதத்தை முடிக்கின்றேன்; தாங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம்; அவ்வப்போது நடக்கும் விஷயங்களுக்கு என் தாயின் உத்தரவின்பேரில் நான் கடிதம் எழுதிக்கொண்டிருப்பேன்; கவலை வேண்டாம்; வேணும்; நமஸ்காரம்.

இங்ஙனம்.

தங்கள் சுகத்தைக் கோரும்

அபாக்கியவதியாகிய

ராஜேச்வரி.''

என்று முத்துக்கள் கோத்ததுபோன்ற விஷயங்களும், கையெழுத்தும் வரையப்பட்டிருந்தன. இந்தக் கடிதத்தைப் படிக்கும்போதே அவனுக்கு ஒருவிதத்தில் மிகுந்த துக்கமும், மற்றொரு விதத்தில் ஆநந்தமும் ஏற்பட்டு அவ்விரண்டினாலும் அவனுடைய விழிகளினின்று மாலை மாலையாகக் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது; அக்கண்ணீரானது முத்துக்களைத் தாங்கியிருக்கின்ற ஒரு வெள்ளிய தட்டுப் போல முத்துக்களை நிகர்த்த எழுத்துக்களைக் கொண்ட அக்கடிதத்தின்மேல் முத்துக்களோடு முத்துக்கள் சேர்வது போல துளித் துளியாகச் சொரிய, அவ்வெழுத்துக்களின் மசி கலைந்துகொண்டிருந்தது. ராஜேஸ்வரியினிடமிருந்து கடிதம் வந்தது பற்றி அவனுக்கு மகிழ்ச்சி யேற்பட்டது; அதில் கூறப்படும் விஷயங்களைப் பற்றி அதிக துக்கம் ஏற்பட்டது. இவ்விரண்டும் கலந்து அவனுக்கு மகிழ்ச்சியையும், துக்கத்தையும் உண்டாக்கின தன்மை எப்படி யிருந்ததெனில், கசப்பான மருந்தைத் தேனில் கலந்து குடித்தவனுக்குக் கொஞ்சம் இனிப்பும், கசப்பும் தோற்றுவது போன்றிருந்தது.

இவ்வித நிலைமையுடன் தாமோதரன் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் பலதடவைகள் படித்தான். அவனுடைய மனதில் பெரிய ஆலோசனை யுண்டாயிற்று. "நமக்குப் பகையாளியாக விருக்கக் கூடியவனே அவ்விதம் மந்திரவாதி போல வந்து நம்மீது பழி சுமத்தியிருக்கிறனென்று கடிதத்தில் நம் கண்மணி யெழுதியிருக்கின்றாளே; நமக்கு இப்பிறவியில் பகையாளி என்பவர்களே இல்லையே; அங்ஙனமிருக்க நம்மீது பழி சுமத்தக் கூடிய மனிதன் யாராக விருக்கக்கூடும்?" என்ற சிந்தனையிலேயே அவன் மனம் வெகு நேரம் ஆழ்ந்திருந்தது. பின்னர் அவன், "எல்லாம் ஈசன் நியமித்தபடியே நடக்கும்." என்று தேறினான். எனினும் அவனுடைய மனமானது பூரணமாகத் தெளியவில்லை. அவன் ராஜத்தை எண்ணிச் சற்று புலம்பினான்; தனக்குள் பலவாறு சிந்தித்து மானஸீகக் கோட்டைகட்டிச் சற்று இன்பமுற்றான்; சற்று தவித்துத் தத்தளித்தான். இவ்விதமாக அவன் உன்மத்தன் போல, "ஆ! ராஜேஸ்வரீ! உன்னை யடையாத துர் அதிர்ஷ்டத்தினால் கலங்கும் என் தலையில் இந்தப் பேரிடியும் கூட விழவேண்டுமா! ஹா!

எல்லாம் இறைவனருள்; எல்லா மவன் செயல்; எல்லாம் அவன் பொருள்'' என்று கூறினன்; மேலும் கடவுளை நோக்கி,

''வானாதி பூதமா யகிலாண்ட கோடியாய்
மலையாகி வளைகடலுமாய்
மதியாகி யிரவியாய் மற்றுள வெலாமாகி
வான்கருணை வெள்ளமாகி
நானாகி நின்றவனு நீயாகி நின்றிடவு
நானென்ப தற்றிடாதே
நானா னெனக்குளறி நானா விகாரியாய்
நானறிந் தறியாமையாய்ப்
போனா லதிட்டவலி வெல்லவெளி தோபகற்
பொழுதுபுகு முன்கண்மூடிப்
போய்த்துயில்கோள் வான்றனை யெழுப்பவசமோவினிப்
போதிப்ப தெந்த நெறியை
யானாலு மென்கோமேமை யனியாயமனியாய
மார்பா லெடுத்து மொழிவே
னண்டபகி ரண்டமு மடங்கவோரு நிறைவாகி
யானந்த மான பரமே.''

என்று துதி செய்தான். பின்னர், ''எங்கும் கண்ட திரு மேனியனாகிய என்னப்பனின் திருவிளையாடல் படி நடப்ப வற்றை அவரவர் கர்மாவுக்கு ஏற்றவாறு அனுபவித்துத்தானே தீரவேண்டும்; இவற்றை நினைத்து நினைத்து வீணாக வருந்து வதில் பயன் யாது? ஆ! நேற்றுவந்த கடிதமாகிய பெருங் கடலிடையே என் மனமாகிய கப்பல் அகப்பட்டு அதில் கண்ட விஷயங்களாகிய புயல் காற்றினாலும், அலைகளினாலும் சுழன்று கொண்டிருந்த தருணத்தில், அதற் காதரவாக ஒரு சிறு தீவு அகப்பட்டதுபோல என் கண்மணியின் ஆறுதலான மொழிகள் நிரம் பிய இக்கடிதம் கிடைத்ததும் எனது அதிர்ஷ்ட வசமென்றே கூறல்வேண்டும்; சாக்ஷாத் ராஜ ராஜேஸ்வரியின் திருவாக்கென்று இந்த ராஜேஸ்வரியின் வாக்கை நம்பி நாம் மாமாவுக்குக் கடித

மெழுதாமலும், அவ்விடம் செல்லாமலும் வாளா விருப்பதே நலம்; ஆதலால் இதையே உறுதியான தீர்மானமாகக் கொள்வோம்; ஆகா! என் கண்மணி! ராஜம்! உன்னைப் பற்றி நான் எண்ணி வருந்திப் புலம்புவதனுல் என்னறிவே மழுங்குகின்றது; நான், உன் உறவு கிடைக்குமென்று நம்பி அதனை யிழந்து இலவு காத்த கிள்ளைபோலானேன்; எனினும் உன்னை மறக்க முடியவில்லை; உன்னை மறக்க எண்ணி முயன்று பார்ப்பதும் வீணுகின்றது; என் அகக் கண்களையும், இருதயத்தையும் விட்டு நீ அரைக்கணமேனும் மறைந்தாலன்றோ உன்னை நான் மறக்கக் கூடும்! உம்; எல்லாம் வினைப் பயன்; 'முற்பகல் செய்ததே பிற்பகல் விளையும்' என்றபடி முற்பவத்தில் நான் செய்த தீவினையே இங்ஙனம் வந்து மூண்டு துன்பத்தைச் செய்கின்றது; சென்ற ஜன்மாவில் நான் எந்தத் தம்பதிகளையேனும் பிரித்துவைத்துத் துன்புறுத்தி யிருப்பேன்; அதன் பயனே இந்த ஜன்மத்தில் எனக்கு இந்தக் கதியை அளித்திருக்கிறது; உம்; இவைகளையெல்லாம் எண்ணியாவதென்ன? 'தாம்தாம் செய்த வினையைத் தாமே அநுபவிப்பார்' என்றபடி நம் வினையை நாமே அநுபவிக்கின்றோம்; என் இன்ப வடிவமான ராஜம்! நீ சொல்லியபடியே நம்மிருவருடைய ஆத்மாக்களும் ஒன்று; அவை கடவுளறிய ஒன்றோடொன்று ஐக்கியமாகிவிட்டன என்பது முக்காலும் உண்மையே; நமது பரிதாபத்தை இறைவன் நீக்க வல்லவனே யன்றி வேறுஒருவருமில்லை'' என்று பலவிதமான சிந்தனைகளிலாழ்ந்து உடல் தளர்ந்து,இடிந்த மனத்துடன் தன்னையே மறந்து அபாரமான சோகத்தில் மூழ்கிப் புலம்பியபடியே அன்று இரவும் அன்னத்தை நாடாது கழித்துவிட்டான். இப்படியே அவன் தினந்தோறும் ஒருவேளை உண்பதும், ஒருவேளை பட்டினி கிடப்பதுமாகத் துயரத்தோடு நாட்களைக் கழித்துவந்தான். இவ்வித துயரத்துடன் சில தினங்கள் சென்றன.

இவ்விடத்தில் இவன் செய்கை இப்படி யிருக்க, கண்ணபிரான் தாமோதரனுக்குக் கடிதமனுப்பிய பின்னர் அவன் வரவையே வெகு ஆத்திரத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். தாமோதரன் மீது குற்றம் சாட்டிய மந்திரவாதிக்கு முன்னிலுமதிகரித்த

மரியாதை கண்ணபிரானால் நடந்துவந்தது. அவனுடைய போதனை யைப் பூர்ணமாக நம்பிய கண்ணபிரான் மேலும் அவனிடத்தில் 'தேவதை என்ன சொல்லிற்று?' என்ற கேள்வியையே கேட்டுக் கொண்டுவந்தான்; மந்திரவாதி, தடபுடலாக ஜபம் செய்வதும், இன் னும் தேவதை வரவில்லை என்று சொல்வதுமாய்க் காலங் கடத்தி வந்தான். இவ்விதமாக இரு வாரகாலமாகிவிட்டது. தாமோதரனும் வரவில்லை; அவனிட மிருந்து ஜவாப்பும் கிடைக்கவில்லை. இவை கண்ணபிரானின் ஆத்திரத்தை அதிகமாகப் பெருக்கிக்கொண்டே வந்தன. அவனுக்கு ராஜத்தினிடத்தில் சிறிது சந்தேகமாகவே யிருந்தது; "ஒருகால் அவள், 'என் தகப்பனுர் எழுதிய கடிதத்தைச் சட்டை செய்யாதே' என்று ஏதேனும் கடிதம் எழுதி அவனுக்குத் தைரியம் கூறியிருப்பாளோ?" என்று அவன் அடிக்கடி எண்ணினன். அந்த விஷயத்தை அவளிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் அவன் மனம் நாடிற்று; "அதை நாம் அவளிடம் நேரில் கேட்டால் அவள் ஒருகால் தான் ஒன்றும் செய்யவில்லைஎன்று மறைத்துக் கூறி விடுவாளோ! என்னவோ?" என்றும் அவன் எண்ணினன். பின்னர் இந்த விஷயத்தையே வெகுநேரம் யோசித்துக் கடைசியில், "இதன் உண்மையை நம் பத்தினியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்" என்று தீர்மானித்து அவளிடம் சென்றுன்.

இந்த மாறுதல்கள் ஏற்பட்ட நாள்முதலாகக் கண்ணபிரான் ருக்மிணியிடத்திலும் சரியானபடி பேசுவதில்லையாகையால், அன்று அவன் திடீரென்று தன்னிருப்பிடத்திற்கு வந்ததைக் கண்டு ருக்மிணி, "ஏதோ விசேஷமிருக்கவேண்டும்; அதனுல்தான் இவர் வருகிருர்" என்று தீர்மானித்துக்கொண்டாள். அவள் பக்கலி லிருந்த ராஜமும் அதை எளிதில் உணர்ந்துகொண்டள். கண்ண பிரானைக் கண்டதும் ராஜம் எழுந்து சற்று விலகி நின்றுள். கண்ண பிரான் வழக்கத்திற்கு விரோதமாக அன்று ராஜத்தை நோக்கி, "ராஜம்! நான் சற்று அம்மாளுடன் தனித்துப் பேசவேண்டும்; நீ வெளியே செல்" என்று சுளித்த முகத்துடன் கூறினன்.

இதைக்கேட்ட ராஜத்திற்கு நெஞ்சு திடுக்கிட்டது; "ஏதோ இன்று விபரீதம் நடக்கப்போகின்றது" என்பது திட்டமாக அவள்

மனதிற்குத் தெரிந்துவிட்டது. அதிபுத்திசாலியாகிய ராஜம் இமைப்பொழுதில் பலபல எண்ணங்களையெல்லாம் எண்ணி விட்டாள். "நாம் நமது அத்தானுக்குக் கடிதமெழுதியதைத் தெரிந்துகொண்டுதான் இவர் அம்மாளிடம் அதை விசாரித்து நம்மை கண்டிக்க வந்திருக்கிறார்" என்ற தீர்மானம் அவள் மனத்தில் தோன்றிவிட்டது. "தந்தை கண்டித்துக் கேட்பதால் அம்மா ஏதேனும் தவறுதலாக விஷயத்தை மறைத்துச் சொல்லி ஒன்றுக் கொன்று முரண் படும்படிச் செய்துவிடுவார்களோ?" என்ற அச்சமும் ஏற்பட்டுவிட்டது. உடனே அவள், "அதற்கு ஏதேனும் தந்திரம் செய்து நமக்கும், நம் அன்னைக்கும் தொந்தரவுண்டாகா திருக்கும்படி செய்யவேண்டுமே" என்று மனங் கலங்கினள். கடைசியில் ஒரு யோசனை செய்து ஒருவிதமான முடிவுக்கு வந்தாள். உடனே தன் தாயை நோக்கி, "அம்மா! அப்பா என்னை வெளியிற் செல்லும்படி சொல்லுகிறார்; நான் செல்கிறேன்; நீங்கள் குழாயண்டை போகவேண்டுமென்று சொன்னீர்களே! இப்போது வருகிறீர்களா, அல்லது பின்னர் வருகிறீர்களா?" என்று தந்திரமாகக் கேட்டாள். ருக்மிணி திடீரென்று தன் நாயகன் வந்ததற்கும், அவ்வாறு வந்ததும் ராஜத்தை வெளியே செல்லும்படி கட்டளையிட்டதற்கும் காரணம் தெரியாமல், 'ஏதோ பிரமாதமாக விஷயம் நடக்கப்போகிறது' என்று மனங் கலங்கியிருந்த நிலையில், அவளுடைய குமாரத்தி ராஜம், ஜாடையாக, அவள் குழாயருகில் செல்லவேண்டுமென்று கூறுதிருக்கும்போதே அவ்வாறு சொல்லியதாகத் தெரிவிக்கவே, "இதில் ஏதோ மர்மமிருக்கிறது; நம்மை வெளியில் அழைத்து நம்மிடம் ஏதோ சமாச்சாரம் தெரிவிக்கவே இவள் இவ்வகைத் தந்திரம் செய்கிறாள்; ஆதலால் மதி நுட்பமுடைய ராஜத்தின் நோக்கப்படியே நாம் செய்யவேண்டும்" என்று எண்ணியவளாய் ராஜத்தை நோக்கி, "அம்மா! நான் உன்னிடம் குழாயண்டை செல்லவேண்டுமென்று சொல்லி ஒரு மணி நேரமாயிற்று; ஆதலால் நான் இப்போதே போகவேண்டும்; நீ என்னை அழைத்துக் கொண்டுபோய்த் திரும்ப இங்கே கொண்டுவந்து விட்டுவிட்டுப் பின்னர் வெளியிற் செல்லலாம்" என்று கூறியபடியே எழுந்திருக்க முயன்றாள். உடனே ராஜம் அவளைப் பிடித்து

அழைத்துக்கொண்டு வெளிப்புறமுள்ள குழா யருகில் சென்று அவள் முகத்தை நோக்கி, மெல்லிய குரலால் பேசத் தொடங்கி, "அம்மா! ஏதோ பெருத்த காரிய மிருப்பதனுல்தான் அப்பா தங்களிடம் வந்திருக்கிருர்; அத்தானுக்கு நாம் கடிதம் எழுதிய விஷயத்தைப் பற்றிக் கேட்கவே அவர் வந்திருப்பாரென்று நான் நினைக்கிறேன்; நாம் கடித மெழுதியதைத் தாங்கள் ஒளிக்க வேண்டாம்; பகிரங்கமாகக் கூறிவிடுங்கள்; நீங்கள் அவ்வாறு கூருமலிருந்து அது அவருக்குப் பின்னர்த் தெரிந்தால் விபரீதமாகி விடும்; அதை மறைக்கவேண்டாமென்று தெரிவிக்கவே நான் தங்களை இங்கு அழைத்துவந்தேன்; அதை நான் எழுதியதாகத் தெரிவிக்காமல் தாங்களே எழுதியதாகக் கூறி விடுங்கள்" என்று எச்சரித்துவிட்டு மீண்டும் ருக்மிணியை அவ்விடத்திலிருந்து முன்னிருந்த விடத்திற்கொண்டுவந்து விட்டுவிட்டு வெளியேறி, அவ்வறையில் தன் தந்தை பேசுவது தன் செவியில் விழும் இடத்தில் போய் நின்ருள். ருக்மிணி, "நம் நாயகர் என்ன விஷயத்தைப் பற்றிக் கேட்பாரோ!" என்று பயந்தபடியே கண்ணபிரானின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

கண்ணபிரான் ருக்மிணியை நோக்கியவாறு கோபத்துடனேயே பேசத்தொடங்கி, "ருக்மிணி! நான் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேச வந்துளேன்; நான் எதைக் குறித்துப் பேசவந்திருக்கிறேன் என்பதை நீ யறிந்திருப்பாய் என்றே நினைக்கிறேன்; அதாவது:—இங்கு நமது வீட்டில் வந்திருக்கும் மந்திரவாதிகளில் ஒருவர் நமது மரகதவல்லியின் விஷயமாகத் தெரிவித்த செய்தியை உனது இளைய குமாரத்தியின் மூலம் நீ தெரிந்துகொண்டிருப்பாய்; அவ்விஷயமாக நான் அந்தத் திருட்டுப் பயல் தாமோதரனுக்குக் கடித மெழுதியதையும் நீ யறிந்திருப்பாய்; அதற்கந்த மோசக்காரன் பதிலு மனுப்பாது தானும் வராது வாளா விருக்கிருன்; அதைப்பற்றி ஆலோசிக்கும்போது நீயும், உன் மகளும் ஏதோ திருட்டு வேலை செய்திருப்பதாக என் மனத்தில் தோன்றுகின்றது; நீ உண்மையை உடனே தெரிவிக்கின்ருயா, அல்லது எனது கோபத்திற்குள்ளாகின்ருயா? எனக்கு

நிற்பதற்கு நேரமில்லை; உடனே சொல்லு" என்று மிகுந்த அதிகாரத்துடன் கேட்டான்.

ருக்மிணி, கண்ணபிரான் இவ்விஷயத்தைத்தான் கேட்பா னென்பதை முந்தியே தீர்மானித்திருந்தபடியால் அதைப்பற்றி வியப்படையவில்லை. அவள் சற்று சாந்தமாகவே பேசத்தொடங்கி, "நாதா! நான் முதலில் தங்களை யொரு கேள்வி கேட்கிறேன்; அதாவது :—ஒரு குடும்பத்திலுள்ள தம்பதிகளுக்குள் இருவருக் கும் குடும்ப விஷயத்தில் சமத்வம் உண்டா, இல்லையா? இவ்விரண்டி லொன்றை நான் தெரிந்து கொள்ளவேண்டும்; ஆதலின் தாங்கள் தயவுசெய்து இதற்குப் பதிலளிக்க வேண்டும்" என்றாள்.

**கண்ணபிரான்:**—ஓகோ! என்னையே நீ கேள்விகேட்க முற் பட்டுவிட்டாயோ! நான் கேட்ட விஷயத்திற்கும், இதற்கும் என்ன சம்பந்தம்? சதிபதிகளின் ஒற்றுமைக் கேற்றவாறு அவர் களுக்குச் சுதந்திர மிருக்கின்றது; பலாபலனும் அப்படியேதான்; ஏன் அந்தக் கேள்வி எதற்கு?

**ருக்மிணி:**—"இதைக் கேட்டதற்குத் தக்க காரண மிருக்கிறது; நான் தங்களுடன் எவ்வளவோ ஒற்றுமையுடனிருந்து வருகிறேன்; அப்படி யிருந்தும் எனக்கிங்கே நீங்கள் சுதந்தரங் கொடுக்கவில்லை; குடும்பத்தில் விபரீதங்கள் நடக்கின்றன; நீங்கள் என் சொல்லைத் தட்டுகிறீர்கள்; இவற்றால் பல கெடுதிகள் உண்டாகும்; நீங்கள் என்னோடு ஒற்றுமையாய் என் சொல்லைக் கேட்டு எனக்கு உரிமை கொடுக்கவேண்டும்; அப்போதுதான் குடும்பம் சீர்ப்படும்; இவற்றை உத்தேசித்துத்தான் இக்கேள்வியைக் கேட்டேன்; இக்காலத்தில் மாந்திரீகர்களை நம்பலாமா? அவர்கள் மிகுந்த மோசக்காரர்கள்; அவர்களுடைய தந்திரச்செயல்களைக் கொண்டே அவர்களின் இயற்கையை நாம் தெரிந்துகொள்ளலாம்; ருத்திராக்ஷப்பூனை போன்ற மந்திரவாதிகளே இக்காலத்தில் மலிந்திருக்கிறார்கள்; அவர்களை நம்பலாகாது; இந்தத் தடிப் பயலுடைய முகத்தைப் பார்க்கும்போதே அதில் சோதாக்களின் களை சொட்டுகின்றதே! தாங்கள் அவனை உண்மை மந்திரவாதி என்று நம்பி வீட்டில் சேர்த்துக்கொண்டு அவனுக்குப் பணத்தை அள்ளி யிறைப்பதுடன்

வீட்டிலும் தாராளமாக உலாவச் சர்வ சுகந்தரமும் கொடுத்திருக்கிறீர்கள்; அதுவும் போதாதென்று ஒரு பாபமும் அறியாத தாமோதரன்மீது அவன் கூறிய அபாண்டத்தையும் உண்மை என்று நம்பிச் சற்றும் யோசனையின்றி ஆத்திரப்பட்டு அந்த நிரபராதிக்குக் கடித மெழுதி அவன் மனத்தை வேகவைத்திருக்கிறீர்கள்; இது தகுமா? நாம் நமது குழந்தையைப் போல எண்ணி வளர்த்த அவனிடம் தாங்கள் இப்படி வெறுப்புக் கொள்ளலாமா? அவனுடைய அருமையான உன்னத குணங்களனைத்தையும் கண்டறிந்த தாங்கள் முன் பின் யோசனையின்றி இவ்விதமான கடிதம் எழுதலாகுமா?

ஐயோ! அவன் தன்னுடைய சுத்தமான அன்பினுல் நம் குழந்தையின்மீது வாஞ்சை வைத்துப் பேசியதற்கு அன்று தாங்கள் அவனைப் படாத பாடும் படுத்தினீர்கள்! அதனுலேயே நமக்கு இவ்வித இடைஞ்சல்களேற்பட்டன; இவ்விஷயத்தைத் தாங்கள் உணரவில்லை; தாங்களறியாவிட்டாலும் கடவுள் அறிவார்; அப்படியிருக்க இப்போதும் எவனே போக்கிரிப் பயல் சொல்வதைக் கேட்டு நீங்கள் அந்தப் பரிசுத்தனுகிய தாமோதரன்மீது அடாததும், அபாண்டமானதுமான பழியைச் சுமத்தி விட்டீர்கள்; இதனுல் மிகுந்த கெடுதியுண்டாகுமென்பது எனக்குத் தெரிந்தது; அதனுல் நான், 'அக்கடிதத்தைப் பார்த்ததும் அவனுள்ளம் எவ்விதம் பதறுமோ! என்ன சங்கடத்தை யடையுமோ! மகா மானியும், உத்தமனுமாகிய அவன் அந்த அக்கிரமக் கடிதத்திற் கண்ட பழியைச் சகிக்காது தன்னுயிரை எங்கே மாய்த்துக்கொள்வானே! அதனுல் நமது குடிக்கு எத்தகைய ஆபத்தும், விபரீத சம்பவமும் நேருமோ! நமது மதிப்புள்ள குடும்பத்தின் பெயருக்கு எங்கே பங்கம் நேருமோ!' என்று பலவிதமாகக் கலங்கி, அநேகவிதமான யோசனைகளை வெகுநேரம் வரையில் செய்து பார்த்தேன்; எனது மூளையும் குழம்பிவிட்டது; முடிவில் அனியாயமான காரியத்தைத் தாங்கள் அவசரப்பட்டுச் செய்துவிட்டால் அதைத் தடுத்துத் தங்களை நல்வழிப் படுத்தத் தக்க உரிமையும், குடும்ப விஷயத்தில் தங்களோடு சமத்துவமும் எனக்குண்டென்று தைரியங் கொண்டு தமது கடிதம் சென்ற அன்றே அதை நம்பி எதையும் செய்ய



182848

வேண்டாமென்று ஒரு கடிதம் சுருக்கமாக எழுதித் தாமோதர னுக்கு அனுப்பினேன்; நான் செய்தது சிறிதும் தப்பிதமாகாது; இதைக் கடவுளறிவார்; அக்கிரமமாகக் குற்றம் செய்த குற்றவாளி யொருவன் இருக்கையில், குற்றமற்ற நிரபராதியைத் தூக்கி லிடுவதைத் தடுத்து இவன் குற்றவாளி யல்லவென்று நிரூபித்து அவனை விடுதலை செய்விப்பது சட்டத்திற்கும், தர்ம நியாயத் திற்கும், கடவுள் ஆணைக்கும் சற்றும் விரோதமாகாது; குற்றமு மாகாது. இது பல பெரியாரின் கொள்கையும், பல அரிய நூல் களிற் கூறப்பட்ட நீதியுமாகும்; நாம் இத்தகைய நீதி சாஸ்திரங் களைப் படிப்பது எதற்காக? நமது அறிவை வளர்த்து நன்மை தீமை களைப் பகுத்துணர்வதற்கேயன்றோ? அப்படி யிருந்தும் பல சாஸ் திரங்களைப் படித்துணர்ந்த தாங்கள் இத்தகைய நீதிகளை யுணரா திருப்பது ஆச்சரியம்!

இது நல்லது இது தீயது; இவர்கள் சத்பாத்திரம், இவர்கள் அசத்பாத்திரம் என்று பொருள்களுடையவும், மனிதர் களுடையவும் பேதா பேதங்களை யுணர்ந்து, நல்லவை கெட்டவை களையும், யோக்கியர் அயோக்கியர்களையும் பகுத்துணரும் தன்மை நமக்குப் பிறப்பிலேயே அமையாவிடினும், பெரியோர்கள் அமிர்தம் போன்ற அரிய நீதிகளை நிரப்பிச் செய்துவைத்திருக்கும் அறிவு நூல்களைப் படித்தேனும் நாம் பகுத்தறிவைப் பெற்று அநியாயத் தையும், நியாயத்தையும் உணர்ந்து நடக்கவேண்டாமா! அந்தோ! ஒரு பாபத்தையும் அறியாத நிரபராதியாகிய தாமோதரனின் மீது தாங்கள் இவ்விதமான பழி சுமத்தியது சற்றும் பொருத்தமான தன்று; நான் அவனுக்கு நம்முடைய ராஜத்தைக் கொடுப்பதற்காக இவ்விதம் பந்தப்பட்டுக் கூஷி பேசுவதாக நீங்கள் எண்ண வேண்டாம்; அவனை நீங்கள் உங்களிஷ்டப்படி எந்தக் கிணற்றில் தள்ளினும் அது எனக்குச் சர்வ சம்மதமே! மகா குணவானும், காருண்ய சிந்தையுடையவனும், நன்றி விசுவாசமுள்ளவனும், சித்தசன் போன்ற ரூப முடையவனும், தர்ம சிந்தை யுள்ள வனும், பரோபகார முள்ளவனுமா யிருக்கின்ற அந்தக் கோதிலாத தாமோதரனின்மீது மட்டும் தாங்கள் சிறிதும் ஐயம் கொள்ள

வேண்டாம்; அவனை அனியாயமாக வருந்தச் செய்வது நமது வீட்டில் நாமே கொள்ளியை வைத்துக்கொள்வது போலாகும்.

நாதா! தாங்கள் தற்போது அளவற்ற கோபாவேசங் கொண்டு என்னை நசுக்கி விட்டாலும் அதை நான் என் மனப் பூர்வமான இஷ்டத்தோடு ஏற்றுக் கொள்கிறேன்; அந்த நிரபராதி விஷயத்தில் தாங்கள் செய்வதை மாத்திரம் ஒப்புக்கொள்ளமாட்டேன்; நாதா! நான் என்னமோ அதிக காலம் உயிர் தரித்திருக்க மாட்டேன்; என்னுயிர் முற்றும் மரகதவல்லியோடு சென்றுவிட்டது; என் உடம்பு மட்டுந்தான் இங்கே யிருந்து ஊசலாடுகின்றது; என்னுடைய ஜீவன் வெளிச் சென்ற பின்னராவது நான் கூறிய வனைத்தும் மெய் யென்பது தங்களுக்கு விளங்காமலிராது; அப்போது தாங்கள் என்னை நினைத்துத் துக்கப்படுவீர்கள் ; என்மீது தற்போது கடின மான கோபம் தங்களுக்கு வந்தபோதிலும் அதைச் சாந்தப்படுத்தி விடுவீர்களாயின், மரகதம் சம்பந்தமாக நேர்ந்திருக்கும் அந்தச் சங்கடத்துடனுவது இன்னும் சில தினங்கள்வரை நான் உயிருட னிருப்பேன்; வீணாக ஓர் உயிரை வதை செய்யவேண்டாம்; 'எளியாரை வலியாரடித்தால் அவ் வலியாரை தெய்வ மடிக்கும்' என்னும் மூதுரையைத் தாங்கள் எண்ணுங்கள்; நமது கண் முன்னும் சஞ்சரிப்பது கூடாதென்று வனவாசம் செய்வதுபோல அன்னிய நாடு சென்றுள்ள தாமோதரனின்மீது பகையும் வேண்டாம், பிரியமும் வேண்டாம்; தங்கள் குமாரத்தியையும் அவனுக்கு மணம் செய்விக்கவேண்டாம்; அவன் ஜோலிக்குப் போகாமல் அவனை விட்டுவிடுங்கள்; நாதா! தங்கள் கண்களில் பறக்கும் தீப்பொறியைக் காணும்போது பயமாக விருக்கிறதே! நமது குழந்தையின் ஒரு சிறிது நன்மையை மட்டுமாயினும் நாம் கோரவேண்டாமா; தாமோதரனின்மீதே தன் உயிரை வைத் திருக்கும் குழந்தையைச் சுகத்துடன் வாழச் செய்து கண் குளிரப் பார்க்கவேண்டாமா? அவனுக்குத் துன்ப மேற்படச் செய்து அவனை வதைத்தால் அவனுடைய உயிரோடு ராஜத்தின் ஆவியும் தானே நீங்கிவிடும்; நமது காலகதியால் நாம் ஒரு குழந்தையைப் பறி கொடுத்துவிட்டுக் கலங்குவது ஏழேழு தலைமுறைக்கும்

போதும்; அதோடு இந்தக் குழந்தையையும் இழந்துவிட்டால் நம் கதி என்னும்? இதையேனும் யோசியுங்கள்; ராஜத்தையே தாயாக பாவித்து அவள் கை மூலமாகவே வளர்ந்துவரும் நரஸிம்மனும் அவளுடைய பிரிவால் ஏக்கமடைந்து ஆவி நீத்து விடுவான்; பின்னர் நமது கதி அதோகதிதான்; நான் எதையும் ஒளியாமலும், விடாமலும் பிற்காலம் வரப்போவதைத் தீர்க்காலோசனை செய்து சொல்கிறேன்; நாதா! கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்ய நாடி அது கிடைக்காததால் வருந்துவதுபோல நாம் காரியம் கெட்டபின் நன்மை யிழந்து வருந்தலாகாது; இப்போதே நல்வழியில் செல்லுவது மிகச் சிறந்ததாகும்; என் பிராணபதி! என் சொல்லைச் சற்று கவனியுங்கள்; நாதா! நான் நெடுநேரமாகச் சொல்லிக்கொண்டு வரும் வார்த்தைகளுக்குத்தாம் பதிலே பேசாது மவுனமாக விருப்பினும், 'பதுங்கும் புலியே பாயும்' என்பதற்கிணங்கப் பின்னர்ப் பெருங் கோபத்துடன் என்மீது பாய்வீர்களென்பதை நான் உணர்வேன்; ஆயினும், ஓர் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவளுக்கு அந்தக் குடும்ப விஷயமாயுள்ள எந்தக் காரியத்தையும் சீர் திருத்தச் சுதந்திரம் உண்டு; ஆகையினால், தங்கள் குடும்பத்தை யேற்றுக் கொண்டிருக்கும் யான் துணிந்தே யாவற்றையும் கூறுகிறேன்; நாதா ! நான் மற்றொன்றும் தங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன்; அதாவது :—ஆதியில் தாங்கள் அடியாளை மணம் செய்துகொண்ட காலத்தில், தங்களுக்கு என்னையே மணக்க விருப்பமிருந்ததென் றும், தங்கள் பிதாவுக்குச் சற்று சம்மதக் குறைவாயிருந்ததென் றும், அதனால் தாங்கள் மிகுந்த மனவேதனை யடைந்ததாகவும், பிதாவைத் தள்ளிவிட்டேனும் தாங்கள் என்னையே மணக்க உறுதி கொண்டதாகவும், பின்னர்த் தங்கள் பிதாவே தங்களுடைய விருப்பத்திற்கிணங்கி என்னைத் தங்களுக்கு மணஞ்செய்து விட்டதாகவும் தாங்கள் என்னிடம் கூறினீர்கள்; அந்தக் காலத்தில் தாங்கள் அனுபவித்த மனோவேதனைதானே, தங்கள் விருப்பம் நிறைவேறாத போது மற்றவர்களுக்கு மிருக்குமென்பதை நினைத்துப் பாருங்கள்; அவ்விதம் எண்ணிப் பார்த்தீர்களானல் தாங்கள் அந்தத் தாமோதரனுக்கு உபகாரம் செய்யாவிடினும் உபத்திரவமாவது செய்யாதிருப்

பீர்கள்; நாதா! இத்தனை கதைகளையும் தங்களுக்கு எதற்காக எடுத்துரைக்கின்றேன்? தங்கள் குமாரத்தியைத் தாமோதரனுக்கு மணம் செய்விக்க வேண்டுமென்று உத்தேசித்துச் சொல்லவில்லை; அந்த நிரபராதியாகிய தாமோதரனுக்கு நீங்கள் தீங்கு செய்யாதிருப்பதற்காகவே கூறுகிறேன்; ஆதலின் அந்த நிரபராதியை ஒன்றும் செய்யாதீர்கள்; கடவுளறிய அவன் குற்ற மற்றவன் என்பதை நான் சத்தியமாகக் கூறுவேன்; நாதா! நாதா!! என் வார்த்தையில் சற்று மதிப்பு வையுங்கள்; நான் பலஹீனமடைந்திருக்கும் இந்நிலைமையில் என்னால் அதிகமான வருத்தத்தைத் தாங்கக் கூடவில்லை; என் பிராணகாந்தா! பதிலில்லையா? என் வார்த்தை செவியில் ஏற வில்லையா? என்மீது இரக்கமில்லையா?'' என்று மூச்சுத் திணற ஆத்திரத்துடனும், அனுதாபத்துடனும் பெரியதோர் பிரசங்கம் போல இவற்றைக் கூறினாள். இந்தச் சொற்பொழிவைக் கேட்ட கண்ணபிரானுக்குத் தாங்கக் கூடாத கோபம் பொங்கியெழக் கூடியதாயிருந்தும் அவன் அவ்வாறு அவசரமாகக் கோபங்கொள்ள வில்லை; சற்று நிதானித்தான். ஏனெனில் ருக்மிணியை அவன் சாமானியமாக நேசித்தவனல்லன்; தனது கண்ணின் மணியைப் போலவே பாவித்து வருபவன். அவளுடைய சொல்லாகிய அம்ருதத்தைப் பருகுவதில் அவனுக்கு எப்போது மதிகப்பிரியம்; அதோடு இன்று அவள் பேசிய ஒவ்வோர் விஷயமும் அவனுக்கு நேர் விரோதமாக விருப்பினும் ஒவ்வொன்றிலும் அடங்கி யிருந்த நியாயமும், யாழிசை போன்ற அவளுடைய பேச்சினிமையும் ஒன்று கூடி அவனது கோபத்தைச் சிறிது தடைசெய்து கொண்டே வந்தன. மேலும், 'இவள் எந்த மட்டுந்தான் பேசுகிறாள் என்று பார்த்து முடிவில் நாம் எதையும் பேசலாம்' என்ற பொறுமையும் அவனுக்குண்டாகி யிருந்தது; மற்றும், 'இவள் கூறுவது முற்றும் இவளாகப் பேசுவதா, அல்லது ராஜத்தின் உபதேசமா என்பதை ஆராயவேண்டும்' என்று நினைத்தும் வாளாவிருந்தான். அவ்வாறு சாந்தத்தை மேற்கொண்ட அவன், ருக்மிணியின் சொற்பொழிவு நின்றவுடன், அவள் எடுத்துக் கூறிய பல விஷயங்களையும், அனேக நீதிகளையும், பிற்காலம் வருவனவற்றையும் ஆழ்ந்து யோசித்தான். அவ்வாறு யோசித்ததும் அவ

னுடைய குணம் மாறி விட்டது; மனம் குழம்பி விட்டது. உடனே அவன், "ஒருகால் தாமோதரன் நிரபராதியாகத்தானிருப்பானே? நாம் வீணாக அவன் மீது பழி சுமத்தி அவனுக்கேதேனும் தீங்கு செய்து விட்டால் ருக்மிணி கூறியபடி நமது குடும்பமே கெட்டு வாடுமென்பது உண்மைதான்; இன்னும் அதனால் எல்லோருடைய உயிரும் நீங்குவதுடன் நம் குடும்பத்திற்கு இழிவான பெயர் வருமென்பதும் வாஸ்தவந்தான்" என்று தனக்குள் தானே எண்ணினான். அப்படி எண்ணினவனுக்கு மீண்டும் பழய துர்க்குணம் மேலிட்டு விட்டது; அங்ஙனம் மனம் மாறுபடவே அவன், "ஆகா! என்ன மதி மயக்கம் நமக்குண்டாகி விட்டது! நேரில் தேவதையே சொல்லிய வார்த்தை பொய்யாகி விடுமா! தெய்வங்களின் வார்த்தை பொய்யாகிவிட்டால் மனிதரின் வார்த்தையை நாம் எவ்விதம் நம்புவது? துஷ்டப்பயல், ராஜத்தை நாம் அவனுக்குக் கொடுக்காததால் வைராக்கியங் கொண்டு இவ்விதமான காரியம் செய்வதற்குக் காரணமிருக்கிறது; இவள் சொல்லியவைகளெல்லாம் ராஜத்தின் போதனையினாலேயே சொல்லப்பட்டவைகளா யிருக்கலாம்; அதனால்தான் இவ்வளவு சட்ட திட்டங்களோ டமைந்திருக்கின்றன; நாம் இவற்றைப் பயித்தியக்காரத் தனமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது" என்று மனம் ஒரு நிலைக்கொள்ளாமல் மிகுந்த கலக்கத்துடன் மதுவெறி யேறியவன் போல் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு அப்போதுண்டாயிருந்த ஆத்திரத்தினால் ருக்மிணியை நசுக்கி விடலாமா என்னும் எண்ணமுண்டாயிற்று. உடனே அவனுக்கு அவள் மீதேற்பட்டிருக்கும் பழய வாஞ்சையானது அவ்வாறு அவளுக்குத் தீங்கு செய்யாமலிருக்கும்படி அவனைத் தடுத்து விட்டது. மேலும் அவள் மிகவும் பரிதாபமாகப் படுத்திருக்கும் நிலையும் அவனை அக்காரியத்திற் பிரவேசிக்க விடவில்லை. ஆகையால் அவன் கையை நீட்டாது, தனது கோப முழுவதையும் கண்களினால் காட்டிய வண்ணம் பேசத் தொடங்கி, "ஏ ருக்மிணி! உனக் கிதுபரியந்தமில்லாத துணிபும், அதிகப்ரசங்கித் தனமும் தற்போது உண்டாயிருப்பது நல்வினைக்கோ தீவினைக்கோ தெரியவில்லை; நீ எனது சொற்கடங்கி நடப்பதை விட்டு எனக்கே நீதிகளும், ஜோஸியர்களைப் போல பிற்கால பலனையும் உபதேசிக்க வந்து விட்டாய்; உனக்குச்

சுதாவில் இத்தகைய துணிபு உண்டாகி இருக்காது; அந்தத் தடிக் கழுதை ராஜத்தின் உபதேசமே உனக்கு இத்தகைய சக்தியை உண்டாக்கி யிருக்கிறது; இதற்கையமே யில்லை; நேரில் தேவதை கூறியதையும் நம்பாதிருப்பது கூடுமோ! தெய்வம் ஒரு போதும் பொய்யுரைக்காது; மரகதவல்லி விஷயத்தில் அந்தச் சண்டாள ஞகிய தாமோதரனே படுமோசம் செய்திருக்கிறுன்; இது உண்மை யிலும் உண்மை; நான் அவனை வெறுமனே விடப்போவதில்லை; என் வயிறெரியச் செய்த அந்தக் கொலைபாதகனைத் தகுந்தபடி சிக்ஷிக்க எனக்குத் திறமை யுண்டு; நான் இன்றிரவே ரங்கோ னுக்குப் பிரயாணமாகப் போகிறேன்; அங்கு நேரில் சென்று அவனுடைய போக்கிரித்தனத்தைப் பகிரங்கப்படுத்தி அப் பாவியைச் சிறையிலிட்டு என் கண் குளிரப் பார்க்காவிட்டால் என் பெயர் அந்தக் கோபால க்ருஷ்ணனின் நாமமாகிய கண்ணபிரா னன்று; இதுவே உறுதி; உன்னுடைய ஊத்தை வாயின் பிரசங் கத்திலீடுபடுபவன் நானல்லன்; அந்த மந்திரவாதி நமது வீட்டி லிருப்பது நாம் செய்த தவப் பயனே யாகும்; தெய்வத்தை நேராகக் கண்டு தெய்வத்துடன் உரையாடு புண்ணியத்தைச் செய்த அப்பேர்ப்பட்ட உத்தம தவ சிரேஷ்டரை நீ வைது பாபாத்மாவாகிவிட்டாய்; கல்கத்தா மார்க்கமாக நான் இன்றே அந்தச் சண்டாளனின் இருப்பிடத்திற்குச் செல்கிறேன்; இதனுல் பிற்காலத்தில் என்ன நேர்ந்தாலும் நேரட்டும்; எது எவ்விதமேனும் நடக்கட்டும்; உன்னை நான் கையால் தீண்டாது செல்வது உன்மீது வைத்துள்ள வாஞ்சையினுலேயே என்று எண்ணு; இத்தகைய பரம சண்டாளனைச் சும்மா விடுவது தர்ம விரோதமேயாகும்; அவன் குற்றவாளியல்லவென்று கூறும் நீயே அவனுடைய மோசச் செயலைக் கண்டு பழிக்கப் போகிறுய்" என்று படபடத்துக்கோபாக் கினி பொங்கக் கூறிக்கொண்டே அவ்விடத்தை விட்டு எழுந்தான்.

அவனுடைய வார்த்தையைக் கேட்ட ருக்மிணியின் மனம் கலங்கி இடிந்து போய்விட்டது. ஐயோ பாவம்! மறைவிலிருந்த படியே இங்கு நடந்த சம்பாஷணைகள் யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த ராஜத்தின் நிலைமை மிகவும் பரிதபிக்கக் கூடிய தாகிவிட்டது. அவளின் உயிர் தாமரை யிலை நீர்த்துளிபோல

தத்தளித்துக்கொண்டிருந்தது. தன் தாயார் எத்தனையோ விதமான சமாதானங்களைக் கூறியும் தந்தை அவற்றையெல்லாம் சிறிதும் செவியில் வாங்காமற் போனதுடன், மேலும் விபரீதமாக ரங்கோனுக்கே நேரில் செல்வதாகக் கூறியதை அவள் கேட்டதும் அவளுடைய உயிர் பெரும் பாகமும் நீங்கிவிட்டதென்றே சொல்லத் தக்க நிலையை அடைந்துவிட்டது. அவ்வமயம் அவள் மனத்தில் எழுந்த எண்ணங்களை அளவிடுதல் சாத்தியமன்று. அவளுக்கு உருவெளித் தோற்றத்தில், தாமோதரன், அவள் கண்ணெதிரில் மிகவும் பரிதாபகரமான பார்வையோடு நின்று, "ஆ! என்னுயிரினும் இனிய கண்மணி! ராஜம்! தற்சமயம் எனக்கு நேர்ந்துள்ள ஆபத்தினின்றும் நீயாகிலும் என்னைக் காப்பாற்றுவாயென்று நான் நம்பியிருந்தேனே; நீயுமா என்னைக் கைவிட்டுவிட்டாய்?" என்று புலம்பிக் கண்ணீர் சிந்தக் கசிந்த உள்ளத்துடன் கேட்பதுபோன்ற காட்சி உண்டாயிற்று. அதனால் அவள் சகிக்க வியலாத பரம வேதனைக்காளாகித் தத்தளித்தாள். அச்சமயம் தானே தன் தந்தை யருகில் சென்று அவன் காலில் விழுந்து வணங்கித் தாமோதரனுக்குத் தீங்கு செய்யாதிருக்கும்படி அவனை வேண்டிக் கொள்ளலாமா என்றும் எண்ணினாள். மறுபடியும், " அவ்வாறு செய்தால் நம் தந்தை என்ன சொல்வாரோ—செய்வாரோ!" என்று அஞ்சினாள். இவ்விதம் அவள் வாதைப்பட்டுக்கொண் டிருக்கும்போதே அவளுடைய பிதா எழுந்து சென்றான். அவள் அதைக் கண்டதும் மனத்தில் துணிபுகொண்டு சரேலென்று உள்ளே பிரவேசித்துத் தனது தந்தையின் இரு பாதங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சிறிய குழந்தையைப்போல கோ வெனக் கதறத்தொடங்கினாள். அதே தருணம் ருக்மிணியும் தனது மெலிந்த நிலைமையையும் கவனியாது தட்டுண்டு தடுமாறித் திணறி எழுந்து கண்ணபிரானின் காலைப் பிடித்துக்கொண்டு, "ஆ! என் பிராண நேசரே! ஐயோ! நமது குடிக்கு என்னவிதமான ஆபத்து இன்னும் நேரப்போகின்றதோ; தெரியவில்லை; 'கேடுவரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே' என்னும் பழமொழிக் கொப்பத் தாங்கள் புத்தி மாறுபட்டு இத்தனை நேரம் நான் சொல்லியவற்றை யெல்லாம் சற்றும் கவனியாது தங்கள் போக்கிலேயே நடக்கத்

துணிந்து சிறிதும் அச்சமின்றித் தீமையான செய்கையைச் செய்யப் புகுந்துவிட்டீர்கள் ; இது தகுமோ ? ஐயோ ! யான் ஒவ்வொரு சாதக பாதகத்தையும் விவரித்து விவரித்துக் கூறினேனே ; அனைத்தையும் தள்ளிவிட்டீர்களே! பின் நேர்வதையும் கவனிக்கவில்லையே; நாதா! வேண்டாம்! வேண்டாம்!! ரெங்கோன் செல்ல வேண்டாம்'' என்று புலம்பினாள்.

ராஜேஸ்வரியோ தன்னை மறந்த ஆத்திரத்தினால் தூண்டப் பட்டவளாய்க் கண்ணபிரானை நோக்கி, "ஆ! என்னரிய தந்தையே! தாங்கள் இதுவரை இருமுறை என்னை எப்படி யுதைத்துத் தள்ளியிருப்பினும் நான் மீண்டும் தமது பாதத்தைப் பிடித்துக்கொள்வது தமக்கு வியப்பாக விருக்கலாம்; ஜலத்தில் தாமரை உத்பவிக்கின்றது; அவ்வாறு நீரிலேயே உண்டானாலும் நீர் அதில் சிறிதும் ஒட்டாது விலகியே யிருக்கின்றது; அப்படி யிருந்தாலும் தாமரை ஜலத்தைவிட்டு வெளியில் போவதில்லை; அதேபோல தமக்குப் புத்திரியாக ஜனித்த என்னிடம் தாங்கள் பற்றில்லாதிருப்பினும் நான் தங்கள் பக்தியினின்றும் விலக மாட்டேன்; நான் தங்கள் குழந்தை; என்னுடைய நன்மை தீமைகளைக் கவனிக்க வேண்டியவர்கள் தாங்களே; என்னுயிருக்காதாரமும் நீங்களே; இவற்றை மறக்கவோ, மறைக்கவோ கூடுமோ? தாங்கள் என்னை என்னசெய்த போதிலும் அஃதெனக்குச் சம்மதமே ; கேவலம் திக்கற்ற பரதேசியாகவும், நிரபராதியாகவு முள்ள அத்தானின்மீது மாத்திரம் நீங்கள் கருணை காட்டவேண்டும்; ரங்கோன் செல்வதை நிறுத்தித் தங்களுடைய ஆத்திரம் தீருவதற்காக என்னை வேண்டுமானால் தமது காத்தினாலேயே கண்டதுண்டம் செய்து கோபத்தைத் தணித்துக்கொள்ளுங்கள்; தாங்கள் மனம் நோவதற்குக் காரண கர்த்தா யானாக விருக்க, என்னைவிட்டு, என்னை விரும்பியவர்களை ஏன் தாங்கள் பகைக்கவேண்டும்? அப்பா! அப்பா!! வேண்டாம்! அத்தானை அனியாயமாகத் துன்புறுத்தவேண்டாம்!! உண்மையறியாது அவரைத் தண்டிக்கப் புகுந்தால் அது துன்பமாகவே முடியும்; ஆகையால் தயவு கூர்ந்து தமது கோபத்தை மாற்றிக் கொள்ளுங்கள்; தாங்கள் முன் பின் யோசியாது வழிப் போக்கனான திருட்டு மந்திர வேஷதாரியின் வார்த்தையை நம்பி

எதுவும் செய்யாதீர்கள்; தாங்கள் ரெங்கோன் பிரயாணம் செய்யத் துணிவது எவ்விதமிருக்கிறதென்றால், நமது வீட்டிற்கு விபத்தை விலைக்குவாங்குவது போலவிருக்கிறது; மேலும் தாங்கள் அவ்விதம் சென்று திரும்பி வருங்காலையில் இங்கு சவதரிசனமே செய்ய நேரிடும்; அதை யுறுதியாக நம்புங்கள்." என்று சொல்லிப் பிரலாபித்தாள். இவ்வாறு கதறியும் கண்ணபிரான், "ஆகா! இரண்டு முதலைகளும் ஒன்றுசேர்ந்து என் காலைப் பிடித்து அடக்கி என்னை விழுங்கிவிட முயல்கின்றன; சீச்சி! கழுதைகளே! உங்கள் நீலித் தனத்திற்குப் பயந்தவன் நானல்லன்; உங்களுடைய உயிர் போவதும் வருவதும் உங்கள் கையில்தான் இருக்கின்றனவோ! இந்த மிரட்டு யாரிடம்!" என்று சிம்மம் போல் கர்ஜித்துக் கொண்டே ராஜத்தையும், ருக்மிணியையும் அலாக்காகத் தூக்கித் தள்ளிவிட்டு, "இப்போதே மெயிலில் யான் கல்கட்டா மார்க்கம் ரங்கோன் செல்கிறேன்; மந்திரக்காரரும் என்னுடன் கூட வருகிறார்; பத்திரம்" என்று கூறிக்கொண்டே வெளியிற் சென்று விட்டான்.

அப்போது இரவு மணி சுமார் 7 இருக்கலாம். மேற் கூறியபடி சென்ற கண்ணபிரான் உடனே தன்னுடைய குமாஸ்தாவிடம் கூறித் தனது பிரயாணத்திற்கு வேண்டுவன சித்தம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டு, மந்திரவாதியுடன் தானும் போஜனம் உண்டு எழுந்து மோட்டாரில் தன் சாமான்களுடன் பிரயாணமாகி வீட்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டான். அந்தோ! அச் செய்தியைக் கேட்ட ருக்மிணியின் மனமும், ராஜத்தின் மனமும் பட்டபாடு சொல்லுந் தரமுடையதன்று. அவர்கள் அனலிலிட்ட மெழுகென உருகித் துடித்தார்கள்; செய்வது இன்னதென்றறியாது தவித்த வண்ணம் நிலத்தில் சாய்ந்தார்கள்.

## 11—வது அதிகாரம்.

### கற்புடைய காரிகைக்குக் கணவனே கதி

தந்திரமாக பீபிபோல மோசக் கருத்துடன் வந்த சேட்டைக் கண்டதும் மூர்ச்சையாகிவிழுந்த நமது வனிதா ரத்தினமாகிய மஞ்சுளவல்லி எழுந்து அங்குச் சற்று நேரத்தில் தானே தெளிந்து எதிரில் நிற்கும் சேட்டை நோக்கினாள். அவ்வாறு நோக்கியதும் அவள் அடைந்த நிலைமையை எடுத்தெழுத நமது மனமும், கையும், எழுதுகோலும் நடுங்குகின்றன; நமக்கே இவ்வாறு நடுக்கமுண்டாகுமெனில் அவளுடைய நிலைமை எவ்வாறிருந்திருக்குமென்பதை வாசகர்களே யூகித்துணர்ந்து கொள்ளலாம். அந்தோ! காலனே கடுகி வந்து தன்னெதிரில் நிற்பதைக் கண்டவள் போன்று அவள், குலை நடுக்கமும், இருதயத் துடிப்பும், மனச் சுழற்சியும் அடைந்து ஆவியொடுங்கும் நிலையை அடைந்துவிட்டாள். அவளைக் காண்பவர், "இவள் ஆவி இவளுடைய இருதயத்தில் இருக்கின்றதோ இல்லையோ" வென்று சந்தேகங்கொள்ளும்படி அப்போது அவளுடைய நிலைமையிருந்தது. அந்தோ! அவள் தன் எதிரில் நகைத்த முகத்துடன். நின்று தனக்கு நடுக்கத்தைச் செய்யும் சேட்டை மீண்டுமொரு முறை உற்று நோக்கினாள்; நோக்கியதும் தனது வாழ்க்கையின் நிலைமையையும், அப்போதேற்பட்டிருந்த ஆபத்தான நிலைமையையும் எண்ணினாள். துக்க மேலீட்டால் அவளை யறியாது, 'சர்வேச்வரா!' என்ற வார்த்தை அவள் வாயினின்றும் வெளிவந்துவிட்டது.

இதைக் கேட்ட சேட் மிகுந்த களிப்பும், தேகப் பூரிப்பும் கொண்டவனாய் அவளை நோக்கி, "ஓகோ! ஆண்டவன் பெயரைக் கூறுகின்றாயா? அச்சா! அச்சா!! மெத்த சந்தோஷம்; நீ என் ராணியல்லவா" என்று இறுமாப்புடன் கூறிய வண்ணம் நகைத்துக் கொண்டே அங்குப் போடப்பட்டிருந்த சாய்மான நாற்காலியில் உட்கார்ந்தான். அவன் கூறியதையும், அவனுடைய காம வெறி கொண்ட நிலைமையையும் கண்ட நமது மின்னிடை மாதரசியாகிய

மஞ்சுளவல்லியின் மனத்திற்குள் அவளை யறியாமலே மிகுந்த துடிப்பும், கலக்கமும் தோன்றி, அவளை அளவற்ற வேதனைக் குள்ளாக்கின. "ஐயோ! நாம் இந்த விபரீதமான ஆபத்திலிருந்து எவ்விதம் தப்புவது! என்ன செய்வோம்!" என்று அவள் மிகவும் பீதியடைந்தாள். அவளால் சகிக்கக் கூடாத சஞ்சலத்தினுல் அவளுடைய தலை சுழன்றது; அவள் மனதிற்குள்ளாகவே கடவுளை வேண்டினுள்; தன் தீவினையை எண்ணிக் கதறினுள்; தன் நாயகன் தன்னை அதுகாறும் நடத்தி வந்த பெருமையையும், இப்போது நடத்தும் சிறுமையையும் அவள் எண்ணி யெண்ணி மனம் வாடினுள்; அத்துன்பத்தால் அவளுடைய நெஞ்சம் வெந்து புண்பட்டுப் போய்விட்டது. இவ்வாறு ஏற்பட்ட பலவித கலக்கங்களோடு அவள், "ஐயோ! கடவுளே! என் பர்த்தா என்னை விடுத்து மற்ருெரு மாதின் வலையில் சிக்காதிருப்பின் என் கதி இவ்வித பரிதாப நிலைக்கு வருமா? ஆ! யான் முற்பிறப்பில் செய்த தீவினைப் பயனே இவ்விதம் வந்து மூண்டதோ! நாம் தற்போது தப்ப வழி தேடாமல் வாளாவிருந்தால் இந்தக் காமுகன் நம்மை வலுவில் தீண்ட முற்பட்டு விடுவான்; அவ்வாறு செய்வானே யானுல் நமது கதி யாதாகும்! நாம் உடனே இதற்கோர் உபாயம் செய்யவேண்டும்" என்று தனக்குள் தானே எண்ணியவளாய்ச் சற்றுத் தெளிந்த மனத்தோடு துணிகரமாக ஒரே பாய்ச்சலாக மானைப் போல துள்ளிக் குதித்துப் பக்கத்திலிருந்த சமயலறைக்குள்;புகுந்தாள்.

இதைக் கண்ட சேட் திடுக்கிட்டுத் திடீரென்று எழுந்து பின் தொடர்ந்தான். அவன் தன்னிடம் நெருங்குவதற்குள் சமையலறைக்குட் புகுந்த அவள் கதவைத் தாளிட்டுக் கொண்டாள். அவ்வாறு தாளிட்டுக் கொண்டதும், சேட் ஏமாற்ற மடைந்தவனுய்ப் பெருமூச்சு விட்டான். அத்தருணம் அவன் கொண்ட ஆத்திரத்திற்கு அளவே யில்லை. அவனுடைய மீசைகள் துடித்தன; கண்ணும், முகமும் சிவந்தன; நெஞ்சம் பதறிற்று; புருவங்கள் நெரிந்து மேலேறின; மேலும் அவன் பல்லைக் கடித்தான்; தாடியைப் பிடித்து உருவினுன்; திருதிறென்று விழித்தான்; உடனே அவன் தனது முழுப் பலத்தையும், ஆத்திரத்தையும் கொண்டு கதவைத் தடதடவென்று இடித்து உடைத்துவிடலாமா வென்று எண்ணினுன். பின்

னர் அவ்விதம் செய்தால் தன் செய்கை அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்குத் தெரிந்துவிடு மென்றும், யாரேனும் வந்துவிடுவார்களென்றும், அப்படி வந்து விட்டால் காரியம் முற்றும் கெட்டுவிடு மென்றும், கோபத்தை உள்ளடக்கிக்கொண்டு சாந்தமாகவே பேசி அவளை மயக்கி வெளிப்படுத்தவேண்டு மென்றும் தீர்மானித்தவனாய்த் தணிந்த குரலால் பேசத் தொடங்கி, "என் காதற் கனிரஸமே! நீ உட்புகுந்துகொண்டு என்னை விளையாட்டுக் காட்டுகிறாயா! அதுவும் எனக்கு மிகுந்த பிரியமே! என் கண்மணியே! நீ கதவைத் தாளிட்டுக் கொண்டதால் உனது தரிசனம் எனக்கு மறைந்து விட்டதே; அது மிகுந்த வருத்தமாயும், சகிக்கக் கூடாததாயும் இருக்கின்றதே! உனது தரிசனத்தை எனக்களித்தவாறு நீ என்னவிதமான ஓட்டங் காட்டிய போதிலும் நான் உன்னுடன் கூட ஓடியாடி விளையாடுவேன்; கதவைத் திறந்து உன் முகத்தைக் காட்டு பார்ப்போம்" என்று வெகு நயமாகவும், அன்பொழுகும் விதமாகவும் மொழிந்தான்.

இவனுடைய வஞ்சகத்தை முற்றும் உணர்ந்த நமது ஆரணங்கான மஞ்சுளா மேல் நடக்கவேண்டிய காரியத்தைப் பற்றி ஆழ்ந்து யோசனை செய்யத் தொடங்கி, "நாம் ஒருவாறு இவ்வறைக்குட் புகுந்து தப்பித்துக் கொண்டோம்; இனி இந்த அயோக்கியனைப் பிடித்துத் தண்டனைக்குட்படுத்த உபாயந் தேடவேண்டும்; நாம் இங்கிருந்தபடியே பெருஞ் சத்தமிட்டு மனிதரை வரவழைக்கலாமென்றாலோ அதற்குள் இவன் தந்திரமாகத் தப்பியோடிவிடுவான்; இதற்கென்ன செய்யலாம்" என்று ஏதேதோ யோசித்துப் பார்த்தாள். அவள் மனதிற்குத் திடீரென்று ஒருபாயமும் தென்படவில்லை. அதற்கு மேல் அவள் கடவுளை நோக்கி, "என்னப்பனே! சர்வேசா! நீதான் இதற்குத் தகுந்ததோர் யோசனையை எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்று பலவிதமாகத் தோத்திரம் செய்தாள். அதன்மேல் ஒருவிதமான தீர்மானம் அவள் மனத்திலேற்பட்டது. அங்ஙன முண்டாகவே அவள், 'வஞ்சனைக்காரப் பாவிகளை வஞ்சனையினால்தான் வெல்லவேண்டும்' என்று தன்னுடைய மனக்கிலேசத்தையும், ஆத்திரத்தையும் ஒருவாறு அடக்கிக் கொண்டு தணிந்த குரலால் பேசத் தொடங்கி வெளியில் நின்ற சேட்டிற்குக் கேட்கும்

படி, "ஐயா, பெரியவரே! என்னுடைய தற்போதைய நிலைமையை யும், எண்ணத்தையும் தமக்கு அடியாள் எடுத்துக் கூறவேண்டிய தில்லை; அவை முற்றும் தாமறிந்தவையே; எனக்கு விளையாட்டி லேயே அதிக நாட்டம் என்பதையும் தாம் இப்போது தெரிந்து கொண்டீர்; நான் கதவைத் தாளிட்டதால் தம்மை வெறுப்பதாக எண்ணலாகாது; என்னுடைய மனமானது இன்று காலையில் உம் மைப் பார்த்தபோதே உம்முடைய உயிரையே வாங்கி என்னிடம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று திட்டமாக எண்ணி விட்டது; காலையில் தம்முடைய வண்டிக்காரன் அருகிலிருந்ததால், தம்முடன் நான் பிரியமாய்ப் பேசுவதைக் கேட்பின் கேவலமாக நினைப்பா னென்று அஞ்சியே அவ்விதம் கடிந்து பேசினேன்; பின்னர்த் தாம் இப்போது இங்கு வரவே தம்மைப் பார்த்ததும் எனக்கு அடக்க முடியாத ஆனந்தமுண்டாகி விட்டது; அப்படி யுண்டான ஆனந்தப் பெருக்கால் மூர்ச்சையாகி விட்டேன்; பின்னர்த் தெளிந்ததும் நடந்த சம்பவத்தைப் பற்றி எனக்கு மிகுந்த வெட்கமுண்டாயிற்று; அவ் வெட்கத்தாலும், விளையாட்டுப் புத்தியாலுமே இவ்வாறு இந்த அறைக்குள்ஓடிவந்துவிட்டேன்; தம்மை நான் அல்லாவென்றே பாவித்திருக்கிறேன்; என் கணவர் இருக்கும் நிலைமைகளை தாமறிந்த விஷயங்களே; என்பர்த்தா என்னை விடுத்து வேறொருத்தியைத் தேடிச் சென்றதுபோல நானும் ஓர் தகுந்த நாயகனைத் தேடியடை யவே முயற்சி செய்துவந்தேன்; அப்படியிருந்த எனதெண்ணம் நிறைவேறும்படி கடவுளே உம்மை என்னிட மனுப்பி யிருக்கிறார்; புவிச்சக்கிரவர்த்திபோல வந்துள்ள தமக்கு முன்னிலையில் கேவல மான எழ்மைக் கோலத்தையுடைய யான் நிற்பதற்கு இப்போது தகுதி யற்றவளாயிருக்கிறேன்; அதனாலுமே வெட்கி இங்கு வந்து விட்டேன்; தங்களுடைய அந்தஸ்துக்குச் சரியா யிருக்கும்படி நான் என்னை உயர்ந்த ஆடை யாபரணதிகளால் அலங்கரித்துக்கொண்ட பின்னரே தமக்கெதிரில் வர எண்ணுகிறேன்; நானோ, எல்லா உயர்வுகளையும் காலக் கொடுமையால் இழந்துவிட்டவள்; ஆதலால், சக்கிரவர்த்திபோன்ற செல்வவந்தராயிருக்கும் தமக்குச் சரியான பீபியைப் போல நான் ஆகத்தக்க ஏற்பாடு செய்தால் உடனே கதவைத் திறந்துகொண்டு வெளியேறி உம்முடன் கூடவே

வருகிறேன்" என்று சொன்னாள். இவள் இவ்வாறு சொல்லியதைக் கேட்ட சேட்டிற்கு, ஆகா! அங்கம் பூரித்து முகம் அன்றலர்ந்த தாமரை மலரைப் போல செழிப்புற்றது; இருதயத்தில் ஆநந்த ஊற்றுச் சுரந்து வெள்ளமாகப் பெருக வாரம்பித்துவிட்டது. அப்போதவனடைந்த பேரானந்தத்திற்கு ஓர் அளவு கூறவே முடியாது. அவன் ஆநந்தத்தால் தாண்டவம் புரிபவன் போல துள்ளி யெழுந்து நின்றுகொண்டு, "ஆகா! என் பாக்கியமே பாக்கியம்! என் கண்மணி! நீ கூறுவது முற்றும் உண்மையானதா, அல்லது என்னை ஏமாற்றி அனுப்பிவிட்டு நீ தப்பித்துக்கொள் வதற்குச் சொல்லும் தந்திர வார்த்தையா?" என்று கேட்டான்.

இதைக்கேட்ட மஞ்சுளா, "பெரியவரே! தாங்களிப்படிக் கேட்பீர்கள் என்று நான் முன்னரே நினைத்தேன்; அவ்வாறே தாங்களும் கேட்கிறீர்கள்; தாங்கள் கூறுவதிலிருந்து என்னை மோசக்காரி என்று நினைக்கிறீர்களென்பது தோன்றுகின்றது; அவ்விதம் தமக்குச் சந்தேக மிருக்கும் பக்ஷத்தில் தாங்கள் இந்த அறைக் கதவின் வெளிப்புறத்தைப் பூட்டிவிட்டு வீதிக் கதவையும் பூட்டிக்கொண்டு சென்று ஆடை யாபரணங்களைக் கொண்டு வாருங்கள்; நான் அப்போது கூடத் தப்பிப் போக முடியுமா? இப்போது என் வார்த்தையில் நம்பிக்கையுண்டாயிற்று? என்னைத் தாங்கள் சட்டை பண்ணாவிட்டாலும் இனி நான் தங்களை விடவே மாட்டேன்; இது உண்மை; தாங்கள் சற்றும் சந்தேகமின்றி வெளிச் சென்று சீக்கிரம் வந்தால் நானும் அலங்காரம் செய்துகொண்டு உடனே உங்கள்பின் வந்துவிடுகிறேன்" என்றாள்.

இதைக் கேட்டபின் சேட் அவன் வார்த்தையை முற்றும் நம்பினான். எனினும், வீட்டுக் கதவுகளெல்லாவற்றையும் பூட்டி விட்டு, மஞ்சுளாவிருக்கும் சமயலறைக் கதவையும் பூட்டிக்கொண்டு, அவளிடத்தில், "என் இன்ப வல்லியே! இதோ நான் என் வண்டியிலேயே சென்று ஒரு விநாடியில், உனக்கு வேண்டிய அலங்காரப் பொருள்களைச் சேகரித்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு வீதிக் கதவையும் பூட்டிவிட்டுத் தான் வந்த வண்டி யிலேயே ஏறிச் சென்றான்.

அவனால் சமயலறையில் வைத்துப் பூட்டப்பட்ட மஞ்சுளா என்ன செய்தாளெனில், அந்த வீட்டிற்குக் கிணறில்லாதிருந்த படியால் அவ் வறையிலிருந்து பக்கத்து வீட்டுக் கிணற்றில் தண்ணீர் மொண்டுகொள்ளும்படி அக் கிணற்றுக்கு நேரே அவ்வறையின் சுவரில் சிறு வழியொன்று வைக்கப்பட்டிருந்தது. அவள் சிறிதும் தாமதிக்காமல் அந்த வழியில் குனிந்து நுழைந்து கிணற்றின் கைபிடிச் சுவரைப் பிடித்துக்கொண்டு அதன் ஆதாரவில் பக்கத்து வீட்டிற் புகுந்து அந்த வீட்டுப் புழைக்கடையின் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றாள். பக்கத்து வீட்டில் அப்போது யாரு மில்லாது அவ்வீடு பூட்டப்பட்டிருந்ததால் அது நமது சற்குண பூஷணிக்குச் சற்று உதவியாயிருந்தது. மேற் கூறிய சிறு வழியிருந்ததை யறிந்திருந்ததாலேயே அவள் தானிருக்கு மறையைப் பூட்டிக்கொண்டுபோகும்படி சேட்டினிடம் தைரியமாகக் கூறினாள்.

அவள் மேற்கூறியபடி வெளியேறியபின் வீதியை அடைந்து சற்று தூரம் சென்று சுற்று முற்றும் பார்த்தாள். அத் தெருவின் கோடியில் பீட் கானிஷ்டேபில் நிற்பதைக் கண்டாள்; பேராநந்தம் கொண்டாள். உடனே வேகமாக அவ்விடம் சென்று இரகசியமாக அவனிடத்தில் அன்று காலே முதல் நடந்தவரலாறு முற்றும் கூறி, அவனைத் தன்னுடன் வரும்படியாக அழைத்ததோடு, மேலும் சில விஷயங்களையும் அவன் பாற் கூறினாள்.

இவளுடைய யுக்திக்கும், புத்திக்கும் சேவகன் வியந்து ஓர் விசில் அடித்தான். உடனே மற்றொரு சேவகனும் அங்கு வந்து சேர்ந்தான். பிறகு மஞ்சுளா, அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு போய்த் தான் முன்பு வந்த வழியாகவே புழைக்கடைப் பக்கம் சென்று கிணற்று வழியாகச் சமயலறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக்கொண்டாள். பின்னர் மூவரும் அங்கு நடத்த வேண்டிய காரியங்களைப் பற்றிப் பேசி முடிவு செய்துகொண்டு மூச்சுப்பேச்சின்றி உட்கார்ந்திருந்தார்கள்.

பின்னர்க் கால் மணி நேரத்திற்குள் சேட் கதவைத் திறந்து முன்போல வீதிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு சமய லறை

யண்டை வந்து சேர்ந்து வெகு சந்தோஷத்துடன், "என் காதல் கிளியே! இதோ உனக்கு வேண்டியவற்றையெல்லாம் கொண்டு வந்தேன்; கதவைத் திறந்து பெற்றுக்கொள்" என்றான்.

மஞ்சுளா:—"பெரியவரே! எனக்கு இந்தக் கந்தைத் துணியுடன் தம்மைப் பார்க்க மிகவும் வெட்கமாயிருக்கின்றது; ஆதலால் அவற்றை ஒவ்வொன்றாக இந்த அறையின் ஜன்னல் வழியாகக் கொடுங்கள்; நான் எடுத்துக்கொள்கிறேன்; என்மீது இப்போது நம்பிக்கை வந்ததா?" என்றாள்.

சேட்:—என் கண்ணின்மணியே! உன்னை நான் இனிமேலும் நம்பாவிட்டால் என் கண் அவிந்துவிடும்; உன்மீது பூரணமான நம்பிக்கை கொண்டேன்; இதைச் சத்தியமாகக் கூறுகிறேன்; உனக்கு அப்படி வெட்கமாயிருந்தால் நான் பெட்டியுடன் அவற்றை வாசற் படியண்டை வைத்துவிட்டுக் கூடத்திற்குச் செல்கிறேன்; நீ எடுத்து அணிந்துகொள்; இப்போது சரிதானா?

மஞ்சுளா:—"ஆகா! மெத்த சந்தோஷம்! என்மீது தாங்கள் கொண்டுள்ள வாஞ்சையே வாஞ்சை! அவ்விதமே வையுங்கள்" என்றாள்.

சேட் அப்படியே தான் கொண்டுவந்தவைகளைப் பெட்டியுடன் வாசற்படியண்டை வைத்துவிட்டுக் கூடத்தின் பக்கம் சென்றான். மஞ்சுளா தன்னறையில் போலீஸ் வீரர்கள் இருப்பதனால் தைரியமாகவே கதவைத் திறந்து பெட்டியை எடுத்துக் கொண்டு மீண்டும் கதவைத் தாளிட்டுவிட்டாள். இவற்றையெல்லாம் பார்த்த போலீஸ் வீரர்களுக்குண்டான வியப்பிற்கோர் எல்லையே இல்லை. பெட்டியில் என்னவிருக்கின்றனவென்று போலீஸ்காரர்களே அதைத் திறந்து பார்த்தார்கள். அதில் உயர்தரமான 4-5-தினுசுப் பட்டாடைகளும், அவற்றிற்கேற்ற ரவிக்கைகளும், வைரத்தினாலான சில உயர்ந்த ஆபரணங்களும், நல்ல முத்தினால் செய்யப்பட்ட ஹாரம் முதலியவைகளும் காணப்பட்டன. அவற்றைக் கண்ட மஞ்சுளா அருவருப்பும், சகிக்க வியலா வெறுப்பும் அடைந்தவளாய் அவைகளை லக்ஷியம்

செய்யாது விலகி நின்று அங்குள்ள சேவகர்களை நோக்கி, "இனி நாம் உத்தேசித்த காரியங்களை நிறைவேற்றலாம்" என்று மெல்ல ஜாடையாகக் கூறினுள். உடனே ஒரு சேவகன் தனது உடைகளின் மீதிலேயே அங்குச் சேட்டினுல் கொண்டுவரப்பட்ட உயர்தரப் பட்டாடைகளை அணிந்து தருக்கிய மாதரைப் போல முக்காடிட்டுக்கொண்டு தயாராக நின்றுன்.

இதற்குள் சேட் பேசத் தொடங்கி, "என் இன்ப வடிவான கண்மணி! பெட்டியிலுள்ளவற்றைப் பார்த்தாயா? அவை யுனக்குப் பிடித்தமாயிருக்கின்றனவா? இன்று இவற்றைத் தற்கால சாந்தியாக அணிந்துகொள்; நீ என்னுடன் வந்துவிட்டபின் எனது கம்பெனியிலுள்ள எல்லாவற்றையும் உனக்கே சொந்தமாக்கி விடுகிறேன்; உன்னிஷ்டப்படி அவற்றை நீ உபயோகப்படுத்திக் கொள்ளலாம்; ;எல்லாவற்றையும் அணிந்துகொண்டாயா? இனி வெளியில் வரலா மல்லவா?" என்று வெகு ஆவலோடு வினவினுன்.

மஞ்சுளா:—ஆகா! எல்லா அலங்காரமும் முடிந்துவிட்டது; இங்குக் கொண்டுவந்துள்ள சகலமான பொருள்களும் எனக்கு நிரம்பவும் பிடித்தமாகவே யிருக்கின்றன; இனி வெளி வருவதில் ஆக்ஷேபனை யில்லை; ஆனுல் ஒரே ஒரு சந்தேகம்; அதை நிவர்த்தி செய்துவிட்டால் பிறகு ஒரு விதமான தடையு மில்லை; உடனே புறப்பட்டுவிடலாம்.

சேட்:—ஆ! என் அன்பே! உனது சந்தேகம் யாதாயினும்சரி; அதை ஆக்ஷேபனையின்றி நீ என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் ; சற்றும் யோசனை வேண்டாம்; கேட்டுக்கொள்.

மஞ்சுளா:—பிரமாதமானது ஒன்றுமில்லை; தங்கள்மீது ஆசை கொண்டு நான் இப்போது தங்களுடன் வந்து விடுகிறேன்; தாங்கள் என்னழகைக் கண்டு மோகித்ததுபோல பின்னுல் என்னிலு மழகான வேறொரு பெண்ணைக் கண்டு இச்சை கொண்டால் அப்போது என் கதி என்னவாகும்? அப்போது தாங்கள் என்னை வெறுத்துத் தள்ளி விடுவதோடு என் நாயகரால் தமக்குக் கொடுக்கவேண்டிய பணத்தையும் என்னிடம் கேட்பீர்

களே; அவ்வாறு கேட்டால் நான் எவ்விதம் பணம் கொடுக்க முடியும்? நான் தம்மைப் பிரிவதோடு அந்தக் கடன் தொந்தரவாலும் சங்கடப்படவேண்டுமே; இவற்றைப் பற்றிய சந்தேகந்தான் என் மனத்தைக் கலக்கிக் கொண்டிருக்கிறது" என்று மெல்ல வாழைப்பழத்தில் ஊசி யேற்றுவது போலக் கூறினாள். இவளுடைய அதி சாமார்த்தியமான வார்த்தையைக் கேட்டுப் போலீஸாரும் வியந்தார்கள்.

சேட் :—(இவற்றைக் கேட்டதும்) "ஆஹா! இந்தச் சந்தேகமா நீ கொண்டாய்? அட பயித்தியமே! உனக்கு எவ்வளவோ உயர்ந்த நுட்பமான புத்தி யிருந்தும் என்னுடைய மாதிரியை நீ முற்றுமுணர்ந்து கொள்ளாமல் போய்விட்டது வியப்பினும் வியப்பாக விருக்கிறதே! நீ அந்த விதமான சந்தேகம் சிறிதும் கொள்ள வேண்டாம்; உனக்கு அதற்காக எத்தனை உறுதி வேண்டுமானாலும் செய்து கொடுக்கத் தயாராக விருக்கிறேன்; என் கட்டிக் கரும்பே! உன்னையா நான் மறப்பேன்! சூரிய சந்திராதிகள் திசை மாறிச் சென்றாலும் நான் உன்னை ஒரு வினாடியும் மறவேன்; நான் உன்னை மறப்பதாவது, வேறு மாதை விரும்புவதாவது, உன் நாயகன் கொடுக்க வேண்டிய பணத்தை உன்னிடம் கேட்பதாவது எக்காலத்திலாவது நடைபெறுமா? இவை யெல்லாம் வீணான யோசனை; உனக்கு அவ்விஷயங்களில் சிறிதும் பயமே வேண்டாம்; இனி நீ என்னுடைய பொருளாகையினால் உன்னிடம் நான் உண்மையை உரைப்பதில் தவறு ஒன்றும் நேராது; கடன் விஷயத்தைப் பற்றிய உண்மையைக் கூறுகிறேன் கேள்: உன் கணவன் எனக்குப் பணம் கொடுக்க வேண்டியதே யில்லை; உன்னுடைய அழகைப் பற்றி எனது நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார்; அதைக் கேட்டதும் உன் மேல் எனக்கு ஆசை யுண்டாயிற்று; அதன் மேல் உன்னை எந்த விதத்தில் அடையலாம் என்று நான் யோசனை செய்தேன்; அதற்கு உன் புருஷன் என்னிடம் கடன்பட்டிருப்பதாக ஒரு தந்திரம் செய்வதே தகுதியானதென்று எனக்குத் தெரிந்தது; ஆதலால் உன் கணவன் மீது ஓர் பொய்க் கடன் கணக்குத் தயார் செய்து அதைக் கொண்டு வந்தேன்; அல்லாவும் என் பக்கமிருந்தமையால்

என் காரியம் அதன் மூலம் நிறைவேறி விட்டது.'' என்று காம வெறியினால் உண்மையை உரைத்து விட்டான். இதைக் கேட்டதும் மஞ்சுளா அளவிலா ஆனந்தமும், வியப்பும் கொண்டாள். போலீஸார் அங்கு வந்தது முதல் நடந்த சகல சம்பாஷணைகளையும் தமது குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொண்டே வந்தார்கள். அப்போது அவர்களுக்கு அந்தச் சேட்டின் மீது உண்டாகிய ஆத்திரத்திற்களவில்லை.

மஞ்சுளா :—(சேட் மேற் கூறியபடி சொல்லி முடித்தவுடன்) "ஆகா! அப்படியா! யான் நினைத்த மாதிரிதான் விஷயம் நடந்திருக்கிறது; எந்தக் கடன் ஏற்பட்டாலும் என் கணவர் என்னிடம் கூறாதிருப்பதில்லை; அப்பேர்ப்பட்டவர் இதைப் பற்றிக் கூறாததால் தாமாகத்தான் இந்தக் கணக்கைத் தயார் செய்திருப்பீர்கள் என்று நான் முந்தியே சந்தேகித்தேன்; அது சரியா யிருக்கிறது; இப்போது சொன்ன வார்த்தைகளால் எனக்குத் தைரியமுண்டாகி விட்டது; எனினும் இன்னும் உறுதியாகும் பொருட்டு இவ்விஷயங்களைத் தாங்கள் எழுதிக் கொடுத்து விட்டால் எக்காலத்திலும், எவ்வித காரணத்தாலும் என் மனதில் சிறிதும் சந்தேகமே ஏற்படாதொழிந்து விடும்; இப்போதே நான் உம்முடன் இதோ வந்து விடுகிறேன்'' என்றாள்.

சேட் :—அவள் இவ்வாறு பேசி முடிப்பதற்குள்ளாகவே அவளுடைய பேச்சை நிறுத்தி விட்டு, "ஆகா! உனக்கின்னும் அவ்விஷயத்தில் சந்தேகமாய்த்தா னிருக்கிறது; ஆகையினால் எனது கையினாலேயே நான் கூறிய உண்மைகளை எழுதித் தருகிறேன்; நீ சற்றும் வருந்த வேண்டாம்.'' என்று சொல்லி விட்டு ஒரு காகிதத்தில்,

"என் அன்பைக் கொள்ளை கொண்ட அரிவையர் மணியாகிய மஞ்சுளாவுக்கு எழுதிக் கொடுக்கும் உறுதிமொழிச் சீட்டாவது:—

உண்மையில் உன் கணவன் ஒரு பைசாவும் எனக்குக் கொடுக்க வேண்டியதில்லை; நான் உனது மோகத்திலீடுபட்டு உன்னை யடையும் பொருட்டு உன் கணவன் எனக்குக் கடன் கொடுக்க வேண்டியதா

கப் பொய்க் கணக்குத் தயாரித்துக் கொண்டு உன் கணவனில்லாத சமயம் பார்த்து உன்னிடம் வந்து பயமுறுத்தினேன்; இவ்வாறு செய்தால் நீ இதற்குப் பயந்தும், உன் புருஷன் உன்னை நீக்கி வேறு தாசியை வைத்துக் கொண்டிருப்பதை உத்தேசித்தும் அவனை விட்டு நீங்கிவிட உத்தேசிப்பாயென்றும், அச்சமயம் என் காதலை நான் உன்னிடம் தெரிவித்தால் நீ அதற்கிசைந்து என்னிடம் வந்து விடுவா யென்றும் தீர்மானித்திருந்தேன்; நீ அவ்வாறே என்னுடன் வர இசைந்து விட்டாய்; இனி எந்தக் காலத்திலும் உன்னை நீக்க மாட்டேன்; உன்னிடம் கடனும் கேட்க மாட்டேன்; இவற்றை நீ உறுதி யாக நம்பு ;

இங்ஙனம்
உன் அன்பன்
பியாரா சாகிபு.''

என்று எழுதி முடித்து அதை ஜன்னல் வழியாக மஞ்சுளாவிடம் கொடுத்தான். உடனே மஞ்சுளா, ''ஆகா! தங்களுடைய உத்தம குணத்திற்கு எதைத்தான், கைம்மாறு தருவதென்பது எனக்குத் தெரியவில்லை; எனினும் இதுதான் என்னால் தரக் கூடியது'' என்று கூறியவாறு பெண் ஆடை யணிந்து தயாராக விருந்த சேவகனின் முகத்தைப் பார்த்து ஜாடை காட்டிவிட்டுக் கதவைத் திறந்தாள். உடனே அந்தப் போலீஸ் வீரன் ஒரு பெண்ணைப் போலவே நடந்து வந்து கரைபுரண்டோடும் காமவெள்ளத்தில் மிதக்கும் சேட்டை இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டான்.

சேட் இந்த எதிர் பாராத பரமானந்தமான செய்கைக்கு மிகவும் மெச்சித் தனது ஆவல் பூராவும் காட்டித் தன் ஆத்திரமடங்கத் தன்னிரு கரங்களாலும் கானிஷ்டேபிலை பலங்கொண்ட மட்டும் கட்டித் தழுவிக் கொண்டான். கானிஷ்டேபிலும் இதுதான் தருணமெனத் தனது முழுப் பலத்தையும் காட்டி, ''என் துரையே! என் ராஜ வடிவே ! இதுதான் என்னுடைய கைம்மாருகும்'' என்று மெல் லிய குரலால் கூறியபடியே அவனை நிமிரவொட்டாது இறுகப் பிடித்து நெருக்கினான்.

அவ்வாறு சேவகன் சேட்டைக் கட்டி யிறுக்கவே அவன் விலா வெலும்பெல்லாம் மொடு மொடு வென்று நொரிந்தது; அவனுக்குப் பெருமூச்சு வாங்கிற்று. அவனால் சமாளிக்கக் கூட வில்லை. எனினும் அந்தப் பித்தன் தன் மீது மஞ்சுளா அதிகமான பிரீதி வைத்து அவ்விதம் இறுக்கிக் கட்டித் தழுவுகிறாள் என்று நினைத்தான். அவ்வாறு நினைத்தும் அவனுக்கு விலா வெலும்பு ஒடிகிறதுபோ லிருந்ததால் வேதனை யுண்டாயிற்று. அதனால் அவன், "அடே அப்பா! இவளென்ன இந்த நெருக்கு நெருக்குகிறாளே!" என்று சேவகன் கைப்பிடியினின்று தன்னை விடுவித்துக் கொண்டு உட்கார்ந்து அவனைத் தூக்கித் தன் மடிமீது உட்காரவைத்து, "ஆகா! எங்கள் ஜாதியில்தான் மூடத் தனமாகப் பெண்கள், தங்களுடைய அழகிய முகத்தை மறைத்துக் கொள்கிறார்கள்; அதே போல நீயும் தாமரை மலர் போன்ற உன் முகத்தை ஏன் மூடவேண்டும்? என் காமக் கிழத்தியே! அந்த மூடியை விலக்கி உன் முக தரிசனத்தை எனக்குக் காட்டுவாய் கண்ணே" என்று கூறியபடியே அந்தச் சேவகனின் முட்டாக்கைத் தானே விலக்கினான். ஆகா! முட்டாக்கின் உள்ளே மஞ்சுளா முக மில்லாது மீசை முளைத்த பெரிய குண்டோதரன் போன்ற சேவகன் முகம் தோன்றிற்று. அதைக் கண்டவுடன் சேட்டு நெருப்பை மிதித்தவன்போல, கூ! கூ!! வென்று தன்னை மீறிய பயத்தினால் திடுக்கிட்டுக் கூவியவாறு நடுக்க முடன் எழுந்திருக்க முயன்றான்.

இந்த அதிவினோதமான காட்சியைக் கண்டு உள்ளிருந்த மஞ்சுளாவும், மற்றொரு சேவகனும் அடக்க வியலாத நகை புரிந்து மேலே நடப்பதைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். சேட் அலறி யடித்துக்கொண்டு எழுந்திருக்க முயலுவதைக் கண்ட கான்ஸ்டேபில் தனது பலங் கொண்டமட்டும் அவன் துடையில் அழுத்தி உட்கார்ந்து தனது ஒரு கரத்தினால் அவனுடைய தாடியைப் பிடித்துக்கொண்டு உருவுவதுபோல இழுத்து இழுத்துச் சுண்டி, மற்றொரு கரத்தினால் அவன் கழுத்தின் பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு, "என் அன்பரே! ஏன் நடுங்குகின்றீர்? இன்னும் எந்த உத்தமிகளின் மீதாவது மையல் கொண்டு பொய்க் கணக்குகள் தயாரிக்க முடிவு செய்திருக்கின்றீரா? அந்தச் சந்தோஷத்தினால்

தேகம் புளகிதமடைந்து ஆடுகின்றதா? ஐயோ! பாவம்! இவ்வித மான உத்தம காரியங்கள் செய்து எத்தனை பெரிய பட்டமும், புகழும், மாடி வீடும், கோடி பணமும், ஜோடி வண்டிகளும் சம்பாதித்திருக்கிறீர்? அடாடாடா! என்ன அருமையான வேலைகளை யெல்லாம் செய்து என் துரை அலுத்துப் போய்விட்டார் பாவம்! அதனால்தான் இவர் தேகமே நடுங்குகின்றது; அடே 304-எழுந்து வாடா! என்னைச்சுகந்த—நம் ஜெயிலுக்குகந்த—நாதருக்குக் கை கால்களைப் பிடித்துவிடவாடா! எழுந்திரு" என்று கூறிக் கொண்டே சேட்டின் தொடையை அப்பளமாய் நசுங்கும்படி ஒரே அழுத்தாக அழுத்தித் தாடியை அவனுயிர் போகும்படி இப்படியும் அப்படியும் இழுத்துக்கொண்டு கூவினான்.

இந்த அதி கோரமானதும், கொடுமையானதும், பயங்கர மானதுமான சம்பவத்தினால் சேட் திக்குமுக்காடிப் போனான். தன் பிராணன் போய்விடும்படியாக அந்த முரட்டு ஆள் தன்னை அழுத்தியும், தன் தாடியை இழுத்தும் இம்சிப்பதைச் சகிக் மாட்டாமல், "ஓ! அல்லாவே! அல்லாவே!" என்று கத்தினான். அவன் கதி பாம்பின் வாயின் தேரையின் கதியைப் போல விருந்தது. அங்கிலையிலிருந்துகொண்டு அவன், "நாம் இவ் வீடு முழுதும் பூட்டிக்கொண்டு சென்றிருக்கையில் இந்த முரட்டு மனிதன் எங்கிருந்து எப்படி இங்கே வந்தான்? ஒருகால் அந்த மஞ்சுளா மாந்திரீக சக்தியினாலோ; கற்பின் மகிமையினாலோ மாயமாக இவனை வரவழைத்து விட்டாளோ!" என்று பெரிய யோசனை செய்தான். அதற்குள் மற்றொரு சேவகனும் எழுந்து வந்து அந்தச் சேட்டின் ஒரு கரத்தைக் கெட்டியாகப் பிடித் துக்கொண்டான். இந்தச் சம்பவத்தைக் கண்ட சேட்டு முன் னிலு மதிகரித்த திகிலும், குழப்பமும் அடைந்து தத்தளித்தான். மேலும் அவன் கானிஷ்டேபில் உடையோடு இருப்பதைக் கண்டு அவன் உயிரே நீங்கிவிடுவதுபோலாய்விட்டது. 304 சேட்டைப் பிடித்துக்கொண்ட பின்னர் முன்னால் வந்த கானிஷ்டேபில் சேட் மடியிலிருந்து எழுந்து தனது ஆடையை மாற்றிவிட்டுச் சுய உடை யுடன் அவனுக்குச் சேவை சாதித்தான். அதைக் கண்ட சேட்,

"இருவரும் சேவகர்கள்" என்பதை அறிந்து பெருந் திகிலடைந் தான். அவனுடைய நிலைமை மிக்க விநோதமாயிருந்தது. அவனுடைய ஆத்திரம் முற்றும் மஞ்சுள வல்லியின்மீது சென்றது. "ஆகா! அந்த மோசக் கள்ளி நம்மைப் போலீஸாரிடம் பிடித்துக் கொடுக்கும் கருத்துடனேயே நம்மை மயக்கித் தந்திரமாக அனுப்பி யிருக்கிருள்" என்று தான் ஏமாந்து போனதைப் பற்றி மிக்க அவமான மடைந்தான். அவள் மீது அதிகரித்த கோபமும் கொண்டான். என்ன கோபங் கொண்டாலும் இரு வீரர்களுக் கிடையில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் அவனல் என்ன செய்ய முடியும்? அவன் ஒன்றுஞ் செய்யமாட்டாது தியங்கி நின்ருன்; அவன் கண்களில் நெருப்புப் பொறி பறக்கின்றது.

இந்த நிலைமையில் நமது மஞ்சுளா அந்தச் சேட்டின் முன் னிலையில் தோன்றி, ஏளனமாக நகைத்துக்கொண்டே, அவனை நோக்கி, "தூத்தூ! நீ இந்த ஜென்மத்தைச் சுமந்து திரிவதைவிட நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாமே! நீ வெகு சீமான் போல நடித்துச் சேர்த்த உனது பொருள் முற்றும் இவ்வித பொய்க் கணக் கெழுதிச் சம்பாதித்த பொருள் தான் என்பது உன் வாயி னலேயே நிஷ்களங்கமாக விளங்கிவிட்டதே! அடா துரோகி! நீச புத்தி யுடைய மடையா! மிக்க ஒழுங்குள்ள இஸ்லாமிய வம்சத்தி லுதித்தும் அக் குலத்தவருக்கே அடுக்காத பரம சண்டாளத்துவ மான வேலைகளைச் செய்ய உன் புத்தி எவ்விதம் உடன் பட்டதோ! மகா உத்தமரான அக்பர் என்ன! ஷாஜஹானென்ன! பாபரென்ன! இன்னும் தெய்வ பக்தியில் ஈடுபட்ட மகா சிரேஷ்டராகிய கபீரென்ன! பெண் பிள்ளையாகிய மீராபாய் என்ன! இவர்களெல்லாம் உதித்த மேன்மை தங்கிய இஸ்லாமியர் குலத்தில், நீ ஏன் பிறந் தாயோ! பாவியாகிய உனக்கு மான மென்பது சிறிது மில்லையே; நீ வெட்கத்தை விலைக்கு விற்றுவிட்டு ஹீனத் தொழிலே பிரதான மென்று கருத்தில் கொண்டாயே! சண்டாளா! வெகு சாத்விகமாய் பீபி போல வந்து என்னைக் காப்பதாகக் கூறிய வஞ்சகா! தற் சமயம் சாக்ஷாத் கடவுளைப் போல தருணத்தில் காக்கவந்த கருணை வள்ளல்களாகிய இவர்களில்லாவிடில் என் கதி என்னகும்! தாய்

தந்தை, உடன் பிறந்தோர்கள், சுற்றத்தவர்கள் முதலிய யாரு மற்ற மாபாவியாகிய எனக்கு இவர்களே தற்போது பெருந் துணை வர்கள்; இவர்கள் செய்த பேருதவிக்கு நான் எந்நாளும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருப்பதோடு இவர்களை என் அண்ணன் மார்களாகவும் பாவித்து வருவேன்; அடே மதங்கொண்டமடையா! உனது துர்க் குணத்திற்கும், உன்னுடைய மோசக் கணக்கிற்கும், உனது தீய நினைவிற்கும் தகுந்த மரியாதையை என் அண்ணன் மார்களாகிய இவர்கள் உனக்குச் செய்வார்கள்; நீ அதைப் பெற்றுக் கொள்; சண்டாளா! என்னுடைய நாயகனின் பெயரை வீணுகக் கெடுக்க வந்ததுடன் அனியாயமாக என்னுயிரையும் மாய்க்க முற்பட்டாயே! உனது முன்னிலையில் நின்று பேசுவதும் மான முள்ளவர்களுக்கு ஹீனமேயாகும். கிராதகப் பதரே! உனது காம வெறியன்றோ இத்தகைய இழிவையும், கொடுமையான செய்கையையும் செய்ய உன்னைத் தூண்டிற்று. ஐயோ! எந்த உத்தமி உன்னைப் பதியாக அடைந்து பரிதபிக்கின்றாளோ! நாச காலா! நீ செய்ய எண்ணியது நன்மையா தீமையா என்பதை இப்போதேனும் யோசித்துப்பார்; உம். நீ இன்னும் இதைப் போன்ற எத்தனை அனியாயங்களைச் செய்திருக்கின்றாயோ! அவற்றிற்கெல்லாம் கடவுள் உன்னைச் சரியானபடியே சிக்ஷிப்பார்; தூராக்ருத பூண்டே! திருடனை திருட்டுத்தனமாகவே பிடிக்க வேண்டுமென்றபடி வஞ்சக நீசனுகிய உன்னை வஞ்சனையினுலேயே ஈசன் பிடித்துவிட்டான். இனியேனும் உனது தீய க்ருத்யங்களை யொழித்து நல்வழிப் படுவாயோ, வேறு என்ன செய்வாயோ!" என்று தன் வாயில் வந்த வாறெல்லாம் மனம் போனபடி திட்டி விட்டாள். அப்போதும் அவள் வயிற்றெரிச்சல் தீரவில்லை. அவளுடைய மனக் கொதிப்பும் அடங்கவில்லை.

இவளுடைய சொல்மாரியைக் கேட்ட சேட்டுக்கு அபாரமான ஆத்திரம் ஒரு புறம் பொங்கிற்று. மற்றொருபுறம் மகா உன்னத பதவியில், பெரிய வர்த்தகதனிகனென்று விளங்கும் தான் கேவல மான பெண்பிள்ளை வாயில் வந்தவாறு திட்டுவதைக் கேட்டுக் கொண்டு அதற்குப் பதில் கூட கூற வியலாத விதமாகப் போலீஸ்

வீரர்களின் கையில் சிக்கியிருப்பதை உத்தேசித்துச் சகிக்கமாட்டாத விசனமும், அவமானமும் அதிகரித்து அவன் மனத்தை வாட்டிக்கொண்டிருந்தன. அவன் ஏதாவது பேசலாமென்று வாயைத் திறந்தான்; வாய் வரவில்லை. அவன் பேசுவதற்கு இடமின்றி மஞ்சுளா பேசிவிட்டபடியால் எதையும் பேச அவனுக்கேது வில்லாமற் போயிற்று. இவ்வித பரம இம்சையான நிலைமையில் அவன் குனிந்த தலை நிமிராது வாளாவிருந்தான்.

அத்தருணம் போலீஸார் இருவரும் மஞ்சுளாவை நோக்கி, "அம்மா! தாங்கள் புகழும்படியாக அத்தனை அபாரமான காரியம் எதுவும் நாங்கள் செய்துவிடவில்லை; தாங்கள் சாமார்த்தியமாகவும், தந்திரமாகவும் சொல்லியவற்றையே நாங்கள் எங்களுடைய போலிஸ் சட்டப்படி செய்தோம். போலீஸாருக்கும் தெரியாத தந்திரங்களைத் தாங்களே தற்போது செய்து இந்த மோசக்காரனை நாங்கள் பிடிக்கச்செய்தது வெகு விநோதமாகவிருக்கிறது; தங்களின் மனக் கொதிப்பினால் தங்களுடைய தேகம் நடுங்குகின்றது; தாங்கள் இனிச் சற்றும் பயப்பட வேண்டியதில்லை; தாங்கள் நிம்மதியாக உட்காருங்கள்; இனி நாங்கள் இந்தப் பெரிய மனிதரை மரியாதை ஸ்தலத்திற்கு அழைத்துச் சென்று அதிகமாக உபசரித்து இவர் செய்துள்ள அருமையான நற்கிருத்தியங்களுக்குச் சரியான படி இவர் கைகளுக்குத் தோடாக்களிட்டுத் தகுந்த விடுதியில் அமரச் செய்கின்றோம்" என்று கூறிவிட்டுச் சேட்டை நோக்கி, "ஐயா! உத்தமரே! ஏன் யோசிக்கின்றீர்கள்? நடவுங்கள்; நேரமாகிறது; உம்முடைய மகிமையை நாங்கள் மூவரு மட்டுமறிந்தால் போதுமா? பல ஜனங்களும், போலீஸ் அதிகாரிகளும், இன்னும் மற்ற உம்முடைய உற்றார், உறவினர்கள் முதலிய யாவரும் கண்டு களித்து உமது பிரதாபத்தை அரிய பெரிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்ய வேண்டாமா? உம்; புறப்படும்" என்றார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சேட்டுக்கு மனம் கலங்கி, வெட்கம் மேலிட்டு, வருத்த மதிகரித்து விட்டது. அவன், தான் செய்த காரியமும், செய்ய விருந்த காரியமும் மிகவும் வஞ்சகமானவைகளும், மகத்தான பாபத்திற்கு ஏதுவானவைகளும், குடி

கேடானவைகளும், தன்னுயிருக்கே எமன் போன்றவைகளுமான கொடிய விஷம் போன்ற கொடூரச் செய்கைகளென்பதை அப்போது தான் உணர்ந்தான். மகா உத்தமியாகிய மஞ்சுளவல்லியின் இரு கண்களிலிருந்து அன்று வடிந்த கண்ணீரே இரு போலீஸ் வீரர்களாக மாறி வந்து தன்னைப் பிடித்துக் கொண்டு, நீதிகளைத் தனக்கு இடித்துக் காட்டிக் கூறி மேலும் ஏளனமாகப் பரிகசிக்கின்றதென்று எண்ணினான். மஞ்சுளா கோபத்துடன் பார்க்கும் பார்வையானது அவன் மார்பில் அம்பு ஊடுருவிப் பாய்வது போல அவனுக்குச் சகிக்கக் கூடாத வேதனையை யுண்டாக்கி விட்டது. அவன் எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி மனம் நொந்து வருந்தினான். அதன் மேல் போலீஸ்காரர்கள், 'வாருங்கள்' என்று அவனைக் கரத்தைப் பற்றி இழுத்தார்கள். அப்படி அவர்கள், தன் கரத்தைப் பற்றி இழுத்ததும் அவன், தீர்மானமாகிய ஓர் முடிவிற்கு வந்தவனாய்ப் போலீசாரை நோக்கி, வெகு பணிவாகவும், இறங்கிய குரலுடனும், பரிதாபமான பார்வையுடனும் பேசத் தொடங்கி, "கௌரவம் பொருந்திய போலீஸ் வீரர்காள்! நான் செய்ய நினைத்திருந்த அனியாயமான கொடிய செய்கையிலிருந்து என்னை விலக்கி நல் வழிப் படுத்திய அந்த அம்மாளை நான் இப்போது என் தாயாரைப் போலவும், சகோதரியைப் போலவும் பாவிக்கின்றேன்; அவர்களிடம் என் நன்றி யறிதலைக் காட்டி எனது குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவர்களை நமஸ்கரிக்க விரும்புகிறேன்; ஆதலால் ஒரு வினாடி என்னை விடவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

இத்தகைய வார்த்தைகளைக் கேட்ட போலீஸ்காரர், "இந்த நீசன் தந்திரமாகத் தன்னை விடுவித்துக் கொண்டு, தன்னை ஏமாற்றிப் பிடித்துக் கொடுத்து விட்டுத் ;தூஷணையாகப் பேசிய மஞ்சுளவல்லியின் மீது பாய்ந்து அவளை வதைத்துத் தன் வஞ்சகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக இவ்வாறு தந்திரம் செய்கிறான்" என்று நினைத்து அவனை விடாமல் கெட்டியாக இறுக்கிப் பிடித்துக்கொண்டு, "என்ன பிரபுவே! அம்மாள் மீதுண்டான ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வதற்குத் தங்களை விடும்படி சொல்லுகிறீர்களா, அல்லது மன்னிப்புக் கேட்டுக் கொள்வதற்கு விடும்படி சொல்லுகிறீர்களா ?

தம்மை விடுவது முடியாது; உம், பீபியாக வந்து இந்த அம்மாளைக் காப்பதாகப்பசப்பிப் பின்பு புலிபோல் வெளிப்பட்டுத் துன்புறுத் திய புண்யாத்மா வன்றோ தாங்கள்; உம்மை யொருபோதும் நாங் கள் விடோம்; உம்; நடவும்; நேரமாகிறது" என்று அதட்டி னார்கள்.

இதைக் கேட்ட சேட் கண்ணீர் பெருக்கிய வண்ணம் மீண்டும் பேசத் தொடங்கி, "ஐயா! என் மீது நீங்கள் இனிச் சற்றும் சந்தே கிக்க வேண்டாம்; நான் சொல்வது உண்மை; நான் செய்த குற்றத் திற்கு அந்த அம்மாளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாலன்றி என் மனம் சமாதான மடையாது; ஐயா! யான் உண்மையில் என் னுடைய இந்த ஜீவிய காலத்தில் எந்த மனிதருக்கும் ஒரு விதமான தீங்கும் செய்தறியேன்; என்னுடைய கெட்ட காலத்தால் இச்சம யம் நூதனமாக இந்த விதமான துர்ப்புத்தி எனக்கேற்பட்டு விட் டது; இதுவே எனது முதல் துர்க்கிருத்யம்; இந்த அம்மாளை யடையும்பொருட்டுச் சமீபத்திலேயே நான் இந்தக் கணக்கையும் தயார் செய்தேன்; இதன் பலனை நான் பிரத்தியக்ஷமாக அனு பவித்துவிட்டேன்; என்னிடம் தோன்றிய இந்தத் துர்க்குணத்தை இனி நான் மாற்றிக்கொண்டு திருந்திவிடுவேன்; என்னை நீங்கள் முற்றிலும் நம்பலாம்; இதற்கு என்னவிதமான உறுதி வேண்டு மானாலும் நான் கூறுகிறேன்; என்னுடைய கௌரவமான ஜீவியத் தைத் தாங்கள் யாவரும் அறிந்தே யிருப்பீர்கள்; ஆதலின் என்மீது தயை செய்து எனக்கு உயிர்ப் பிச்சை யளிக்கவேண்டும்; நான் தங்க ளிடம் வேண்டுவதாவது:—என்னுடைய மானத்தைத் தாங்கள்தான் காப்பாற்றவேண்டும்; எனது குற்றத்தைப் பலரறியத் தாங்கள் வெளியிடாமல் என்னை மன்னித்து விடுதலை செய்யவேண்டும்; அதற்காக நான் தங்கள் பால் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவனாக விருப்பேன்; இதன் பொருட்டுத் தங்களுக்கு நான் என்னால் கூடுமானவற்றை அளிக்கத் தடை யில்லை; இதனால் தங்களை யான் லஞ்சம் வாங்கச் சொல்வதாக எண்ணக்கூடாது; என்னை எவ்விதமேனும் இந்த வெட்கக்கேடான விபத்தினின்றும் நீக்க வேண்டும்; என்னைத் தங்கள் சொந்த மனிதன் போல பாவித்து

எனது இடரை நீக்கவேண்டும்; இவ்வாறு நான் தங்களிடம் சட்ட விரோதமான காரியத்தைச் செய்யச் சொல்வது என்மீது குற்றமாகும்; எனினும் என்னுடைய மானக் கேட்டை உத்தேசித்தே நான் தங்களை வேண்டிக்கொள்கிறேன்; ஆதலால் இதைத் தாங்கள் சட்ட விரோதமென்று நினைக்கக் கூடாது; என்னைத் தங்கள் குழந்தையைப்போல எண்ணி இத்தருணம் தாங்கள் காக்க வேண்டும்; இனிமேல் எனது ஜென்மத்தில் நான் இவ்வித வேலையில் தலையிடுவதில்லை மன்று தங்களுக்கு எழுதிக் கொடுக்கிறேன்; என்னை இந்த மட்டோடு விட்டுவிட வேண்டும்'' என்று வெகுவாக மன்றாடிப் பின்னர் மஞ்சுளாவை நோக்கி, ''என் தாயே! பாவி யான் அறியாது செய்த பிழையைத் தாங்கள் பொறுத்து அடியேனை ஆதரிக்கவேண்டும்; லோக மாதாவாகிய தங்கள்மீது நான் துர் எண்ணங்கொண்டதற்கு என்னை எவ்விதமான தண்டனைக்குட்படுத்தினாலும் அது எனக்குத் தகுந்ததே; ஆயினும் என் தாயே! அறியாது மூடத்தனமாக நான் செய்த குற்றத்தை மறந்துவிட்டு எனக்கு உயிர்ப் பிச்சை யளிக்கவேண்டும்; என்னைக் கைதியாக்கி அழைத்துச் சென்று தண்டித்தால் நான் உயிருடனிருக்க மாட்டேன்; என்னுடைய உயிர் தற்கொலையினால் நீங்கிவிடுமேயன்றி நில்லாது; இதுகாறும் செய்துள்ள பாபங்களோடு நான் இன்னும் தற்கொலை செய்யும் பாவத்திற்கும் உள்ளாகாமல் தாங்கள் என்னைக் காப்பாற்றவேண்டும்; என் மாதாவே!'' என்று கதறியவாறு போலீசார் கைப் பிடியினின்றும் திமிறிக்கொண்டு சரேலென்று பாய்ந்து மஞ்சுளவல்லியின் காலில் தடாலென்று விழுந்து, ''என்னன்னையே! என்னுடைய மான அவமானங்கள் தமது வாக்கிலிருக்கின்றன; தாங்கள் இச் சங்கடத்தினின்றும் என்னை மீட்டால் மாத்திரமே எனது கண்ணியமும் உயிரும் நிலைக்கும்; தாங்கள் இப்படியே விட்டுவிட்டால் என்னுயிர் தரியாது; என்மீது கருணை பாலிக்கவேண்டும்'' என்று கல்லும் கரையும் வண்ணம் கதறினான்.

இந்த எதிர்பாராத விநோதமான செய்கையையும், சற்று நேரத்திற்கு முன்னிருந்த அவனுடைய புத்தி இவ்வளவு சீக்கிரத்தில் நல்லுணர்வைப் பெற்று மாறிவிட்டதையும், அவன்

தன் குற்றத்தைத் தானே யொப்புக்கொண்டு கலங்குவதையும் நோக்கிய மஞ்சுளவல்லியும், போலீஸாரும் வியப்புற்று நின்றார்கள். ஏற்கெனவே இளகிய மனதுடைய மஞ்சுளாவின் மனம் அவன் பால் இரக்கங்கொள்ளத் தொடங்கியது. சேட் கூறுவது முற்றும் தான் தப்பித்துக்கொள்வதற்காகச் சொல்வதன்று என்றும், உண்மையாகவே தனது குற்றத்தை எண்ணி வருந்துகிறான் என்றும் அவனுடைய பல குறிப்புக்களால் அவள் உணர்ந்து கொண்டாள். அதன்பின் அவள் போலீஸாரை நோக்கிப் பணிவாகப் பேசத் தொடங்கி, “என் சகோதரர்களே! நான் கூறப்போவது சட்ட விரோதமானதென்பதை யானறிவேன்; இருப்பினும், இதை நீங்கள் அங்கிகரிக்கவேண்டும்; ஸ்ரீராமாயணத்தில், சரணாகதிப் படலத்தில் ஸ்ரீராமபிரான், ‘ஒருவன் எத்தகைய அபராதம் செய்த கொடியோனானாலும் தான் செய்த குற்றத்தைத் தானே யொப்புக் கொண்டு தானே நேரில் தன் விரோதியிடம் சென்று சரணாகதி யடைந்து அபயமளிக்கவேண்டினால் அவ் விரோதி, அவன் முன் செய்த கொடுமைகளை உடனே மறந்து அவனுக்கு அபய மளித்து அவனைக் காத்தலே தரும நீதி யாகும்’ என்று கூறினார் என்ற நீதி காணப்படுகின்றது; இந் நீதியை அவரே காகாசுரனிடத்தில் செய்து காட்டியிருக்கிறார்; மேலும் தம்முடைய பத்தினியையே களவாடிய இராவணன்மீதும் கருணைகொண்டு, அவன் சரணாகதி யடைந்தால் அவனுக்கும் அபய மளிக்கச் சித்தமாக விருந்தார் என்பதும் இராமாயணத்தில் கூறப்படுகின்றது; ஆகையால் இந்த மனிதன் எத்தகைய துராக்ருதம் செய்திருந்தபோதிலும் அவற்றைத் தானே யுணர்ந்துகொண்டு நம்மிடம் தன் குற்றத்தை மன்னிக்கும்படி சரணம் புகுவதால் நாம் மூவரும் சேர்ந்து இவனிடம் உறுதிமொழி பெற்றுக்கொண்டு இந்தக் கேஸை இரகசிய மாக மறைத்துவிடுவதே நலமென்று எனக்குத் தோன்றுகின்றது; மேலும் இந்தக் கேஸ் நடவாதிருப்பது எனது சொந்தக் காரியத் திற்கு மிகவும் அனுகூலமாக விருக்கும்; எப்படியெனில் கேஸ் நடந்தால் நான் முதலில் நீதி ஸ்தலத்திற்கு வரவேண்டும்; என்னுடைய தற்போதைய நிலைமையில் நான் வெளியில் தலைக் காட்டவே மனமற்றவளாக விருக்கிறேன்; ஆதலால் இதைப்

பகிரங்கப் படுத்தா திருந்துவிட்டால் எனக்கு அத்தகைய தொந்தரவு நேராது; ஆகவே இவற்றையெல்லாம் யோசித்து நீங்கள் என்னுடைய வேண்டுகோளுக் கிணங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்" என்று வெகு நயமாகவும், அவர்கள் மனத்தில் நன்ருகப் பதியும் வண்ணமாகவும் கூறினுள்.

இதைக் கேட்ட போலீஸ் வீரர்கள் எதுவும் தோன்ருது சற்றுத் தியங்கினுர்கள்; "சட்ட விரோதமாகச் செய்யும் இவ் வேலை மிகவும் தப்பிதமாயிற்றே" என்று நெடுநேரம் யோசித்து அதை மஞ்சுளா விடமும் தெரிவித்தார்கள். அவள் மேலும் 'முக்கியமாக நான் நீதித் தலத்திற்கு வராவண்ணம் காரியம் நடத்துவதுதான் நல்லது' என்று அவர்களை மிகவும் வேண்டிக்கொண்டாள். அதன்மேல் அவர்கள் ஒருவாறு அதற்குச் சம்மதித்துச் சேட்டினிடத்தில், அவன், தான் செய்த குற்றத்தை யொப்புச்கொண்டு அதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படிக்கும், இனிமேல் எக்காரணத்தை முன்னிட்டும் தான் மஞ்சுளவல்லிக்கு யாதொரு தீங்கும் செய்வதில்லை என்றும், பிறருக்கும் இவ்விதமான கொடுமை செய்ய மனத்திலும் எண்ணுவதில்லை என்றும் உறுதிமொழிப் பத்திரம் எழுதிக்கொடுக்கும்படிக்கும் சொன்னுர்கள். அவன் அவ்வாறே மன்னிப்புக் கேட்டு உறுதிமொழிப்பத்திரமும் எழுதிக் கொடுத்தான். போலீஸ்காரர்கள் அதை மஞ்சுளாவிடம் கொடுத்து அதற்கு வேறெரு காப்பி யெடுத்து அதைத் தாங்கள் வைத்துக் கொண்டு சேட்டை அந்த மட்டோடு விட்டுவிட்டார்கள்.

உடனே சேட்டு மிகுந்த களிப்பை யடைந்து அங்குள்ள மஞ்சுளாவுக்கும், போலீஸ் வீரர்களுக்கும் வந்தனம் செய்துவிட்டுத் தான் எடுத்துவந்த ஆடையாபரணங்களையெல்லாம் மஞ்சுளா எடுத்துக்கொள்ளும்படி அவளை வேண்டினுன். மகா உத்தம குணமுள்ள மஞ்சுளா அவற்றைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேனென்று கண்டிப்பாக மறுத்துவிட்டாள்.

உடனே சேட் அவளுடைய மேன்மையான போக்கைக் கண்டு வியந்தவனுய் அவைகளை அந்த இரண்டு போலீஸ் ஜவான்களுக்கும் சமபாதியாகப் பங்கிட்டுக்கொடுத்துப் பெற்றுக்கொள்ளும்

படி அவர்களை வேண்டினன். அவர்களும், "சட்ட விரோதமாக நாங்கள் எதையும் உன்னிடம் வாங்க மாட்டோம்" என்று மறுத்துக் கூறிவிட்டு வெளியே செல்லப் புறப்பட்டார்கள். மஞ்சுளவல்லி அவர்களுக்கு மிகுந்த உபசார வார்த்தைகள் கூறித் தன்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்து வழி விட்டாள். சேட்டும் அவர்களிடம் மரியாதையாக விடை பெற்றுக்கொண்டு நமஸ்கரித்து அவர்களறியாவண்ணம் அவர்களுடைய சட்டைப் பையில் ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை வைத்துவிட்டு அவர்களைத் தோத்திரம் செய்து, பின் மஞ்சுளாவை மீண்டும் வணங்கி, "அம்மணி! தங்களைத் துன்பத்திற்குள்ளாக்க வெண்ணிய பாவியாகிய என்மீது தாங்கள் இரக்கங்கொண்டு என்னைக் காப்பாற்றியதற்கு நான் என்னுயுள் கால முழுவதும் தங்களுக்கு அடிமைத் தொழில் பூண்டு ஏவல் புரிந்தாலும் அது ஈடாகாது; தாயே! இச்சண்டாளனைத் தாங்கள் மன்னித்தருளியதை என்னுயுள் பரியந்தம் நான் மறவேன்; இனி இவ்வித துர்க்குணத்திற்கு என் மனத்தில் நான் இடம் கொடேன்; இது சத்தியம்; நான் சென்று வருகிறேன்" என்று அவளிடம் கூறிவிட்டு வீதியை அடைந்து தனது வண்டியி லேறிக்கொண்டு போய்விட்டான். போலீஸ்காரர்களும் அவளிடம் விடை பெற்றுக் கொண்டுபோய்விட்டார்கள்.

அதன்மேல் தனியாக விருந்த மஞ்சுளவல்லிக்கு அன்று காலை முதல் அதுவரையில் நடந்த சம்பவங்களை மனத்திலும், கண்கள் முன்னிலையிலும் தோன்றிக்கொண்டிருந்தன. தனக்கு அன்று வந்த ஓர் கண்டத்தினின்றும் தன்னை விடுபடச் செய்த கருணை மூர்த்தியாகிய கடவுளை எண்ணித் தன் மனமுருகத் தோத்திரம் செய்து பாடத் தொடங்கினள்:

"கண்ணி னுள்மணி யென்னவே தொழுமன்பர் கருத்துள்
நண்ணு கின்றநின் னருளெனக் கெந்நாள் நணுகும்?
மண்ணும் விண்ணுமற் றுள்ளன பூதமு மாறுப்
பெண்ணு மாணுமா யல்லவாய் நிற்கின்ற பெரியோய்"

என்று ஆநந்த மயமாகிய ஆதி மூர்த்தியின் திவ்ய நாமத்தைப் பாடியபடியே தன்னை மறந்து துயிலில் ஆழ்ந்துவிட்டாள்.

அவள் இவ்வாறு தன் னினைவற்றுத் துயிலும் போதுகூட அவள் மனத்தில் அன்று நடந்த அதி பயங்கரமான சம்பவங்களே கனவாகத் தோன்றி அவளைத் திடுக்கிடச் செய்தன. இன்னும் அவள் தூங்கும் போது, "இத்தருணம் ஏதேதோ பணிவாகச் சொல்லி விடுதலை யடைந்த சேட், தான் தப்பித்துக் கொள்வதற் காகத்தான் இவ்வகைத் தந்திரம் செய்தானோ? தப்பித்துக் கொண்டு போனவன் மறுபடியும் முன்போல நம்மிடத்தில் வந்து ஏதேனும் துன்மார்க்கமான செய்கையைச் செய்ய முற்படுவானோ" என்றது போன்ற பல வெண்ணங்களையே மனத்திற் கொண்டிருந்த படியால் அவள் மனப் போக்கின்படியே, சேட் மீண்டும் தன்னரு கில் வந்து பழிக்குப் பழி வாங்கத் துணிந்து, தன் மீது கரம் வைத் துத் தன்னைப் பலாத்காரமாகப் பற்ற முயல்வதாயும், தனக்கு உதவி புரிய எவருமில்லாதபடியால், தான் கோவெனக் கதறித் தன் நாயகனை அழைப்பதாகவும் சொப்பனங் கண்டு அந்த அதிர்ச்சியால் திடீரென்று கண் விழித்துக் கொண்டாள். அவ்வாறு விழித்துக் கொண்ட பின்பும், அவளுடைய கனவானது உண்மையில் நடப்பது போலவே அவளுக்குத் தோன்றிற்று. அதனால், மிக்க பீதியும், குழப்பமும் அவள் மனத்தைக் கவிந்து கொண்டன. அவள், "நாம் உண்மையில் இந்த ஆபத்தில் சிக்கியுள்ளோமா, அல்லது இது கனவா?" என்று யூகித்து இரண்டிலொன்றைத் துணிய முடியா மல் கலங்கி, அப்படியே இடிந்து விட்டாள். அவளுடைய மார்பு தடதட வென்று துடித்தது. மூச்சுத் திணறிற்று. தேகம் முற் றும் வெயர்வை யொழுகி நடுக்க முற்றுக் கிடுகிடு என்று ஆடிற்று. அவள், "ஆ! ஆ!" என்று துடித்தாள். அவளது சித்தம் சரியான சுவாதீன நிலைமையில் இல்லாது கலங்கி விட்டது.

இந்நிலைமையில் அவள் சற்று நேரமிருந்து பின்னர்த் தான் கண்டது முற்றும் கனவுதான்; ஜாக்ரத்தில் நடந்ததன்று என் பதை யுணர்ந்து கொண்டாள். அவ்வமயம் நடுநிசியா யிருந்தது. மணி சுமார் இரவு ஒன்றரையாகி யிருந்தது. அந்தோ! அந்த நடு நிசிவேளையில் தன்னந்தனியாக ஓர் வீட்டில் தான் கண் கலங்கிய வாறு உட்கார்ந்திருக்கும் தலை விதியை எண்ணி அவள் ஆருத் துய ரத்தினால் மெய்ம்மறந்து கோவெனக் கதறி யழுது விட்டாள். அப்

போது வீதியில் ரோந்து சுற்றிவரும் சேவகர்கள் அவ்வீதி வழியே செல்லலாயினர். அவர்களின் செவியில் இவளுடைய புலம்பலின் சத்தம் கேட்டது. அவ்வாறு கேட்டதும், அவர்கள், "இவ்வீட்டில் ஏதோ விபரீதம் நடக்கிறது" என்று தீர்மானித்துக் கொண்டு மஞ்சுளா வீட்டின் கதவைத் தடதட வென்று தட்டினார்கள்.

நமது மின்னிடை மாதரசி தான் சில தினங்களுக்கு முன் இருந்த சிறப்பையும், இப்போது அடைந்திருக்கும் நிலைமையையும் எண்ணி மேற் கூறியபடி வாய் விட்டுப் பிரலாபித்துப் புலம்புகையில், இவர்கள் கதவை இடிக்கவே அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பலவிதமான கலக்கங்களை யடைந்தாள். உடனே அவளுக்கு அன்று வந்த சேட்டின் நினைவும், சற்று நேரத்திற்கு முன் தான் கண்ட கனவின் ஞாபகமும் மனத்தில் எழுந்தன; ஏற்கெனவே கலங்கியிருந்த அவளுக்கு இடிமேல் இடி விழுவது போல இந்தச் சம்பவமும் நிகழவே, 'அந்தச் சேட்டே தான் வந்துவிட்டானோ!' என்ற அச்சம் அதிகரித்து விட்டது. அதனால் அவள் மிக்க மனவேதனை யடைந்தாள். கதவிடிப்பதோ வெகு பலமாயிருக்கிறது; கதவைத் திறப்பதற்கோ அவளுக்கு மிக்க திகிலா யிருக்கிறது. இந்நிலைமையில் மஞ்சுளா சற்று மனதைத் தேற்றிக் கொண்டு கதவைத் திறக்காமல் மெல்ல நடை யருகில் வந்து, "யார்?" என்று கேட்டாள்.

சேவகர்கள் :—"நாங்கள் ரோந்துக்காரப் போலீஸார்கள்; இவ்வீட்டிலிருந்து அழுகைச் சத்தம் கேட்டதால், அந்தத் தகவலை விசாரிக்க வந்தோம்; என்ன விசேஷம்? கதவைத் திறவுங்கள்" என்றார்கள்.

மஞ்சுளா :—அவர்கள் சேவகர்கள் என்று கூறியதால் சற்று தைரியமடைந்து, கதவைத் திறந்து தன் கையினால் பிடித்தபடியே, "ஐயா! விஷயம் ஒன்றுமில்லை; என் தாயார் இறந்துவிட்டதாகச் சற்று நேரத்திற்கு முன் தந்தி வந்தது; அந்த விசனத்தால் நான் புலம்பினேன்; என் கணவர் என்னைத் தேற்றினார்; அதன்மேல் நான் உடனே அழுகையை நிறுத்தி விட்டேன்; வேறொன்றுமில்லை" என்று சமயத்திற்குத் தகுந்தபடி சட்டெனப் பதிலுரைத்தாள்.

இதைக் கேட்ட சேவகர்கள் உண்மை என்று நம்பிப் போய்விட்டார்கள். சேவகர்கள் சென்றதும் மஞ்சுளா கதவைத் தாளிட்டுக் கொண்டு படுக்கைக்குச் சென்று முன்போலவே துயரக் கடலில் மூழ்கியவளாய்ப் படுத்துக் கொண்டாள்.

இவள் செய்கை இங்ஙன மிருக்க மைலாவின் வீட்டில் இருக்கும் நமது மணிவண்ணன் மைலாவுடன் கூடி சதா ஆடலாலும், பாடலாலும், சரச விநோதங்களாலும் மகிழ்ந்து தனது பொழுதை வெகு உல்லாசமாகக் கழிக்கின்றான். அவனுடைய மனத்தில் மஞ்சுளாவின் நினைவு அடியோடு மறந்து போயிற்று. மைலாவின் மோகமே பெரும் மேகமாகத் தோன்றி மஞ்சுளாவின் முகமாகிய மதி அவன் மனமாகிய ஆகாயத்தில் தோன்றாமல் மறைந்து விட்டது. தனக்கு மைலாவே நற்கதி யளிக்கும் கடவுளென்றும், அவள் வீடே தனக்குச் சுவர்க்க பதவி யென்றும், அவளால் கிடைக்கும் இன்பமே நித்திய சுகமென்றும் அவன் எண்ணியவனாய் அக மகிழ்ந்திருக்கின்றான். அவன் மைலாவுடன் கதைக்குப் பின் பாட்டுப் பாடுவதற்குத் தலைப்பட்டு வெளியில் சென்றது முதல் அவனைக் கண்ட அவனுடைய சிநேகிதர்களும், உறவினர்களும் கண்ட கண்ட விடங்களிலெல்லாம் அவனிடத்தில், "ஐயோ! அனியாயமாய் இவ்வித அக்கிரமத்திலிறங்கி விட்டாயே! ஐயோ! அந்த மஞ்சுளாவை நீ இவ்விதம் புறக்கணித்து விட்டு உன் கண்ணியத்தையும், குலப் பெருமையையும் கெடுத்துக் கொண்டு தாசியோடு தூர்த்தனாய்த் திரிவது உனக்கு அடுக்குமா? வேண்டாம். இனிமேலாவது மஞ்சுளாவைக் கை விடாது காப்பாற்று" என்று எத்தனையோ விதத்தில் இதமாயும், நயமாயும், சற்று கண்டித்தும் கூறினார்கள். அவ்வாறு கூறியதெல்லாம் அவன் செவிக்கேறவில்லை. அவர்கள் அப்படிச் சொல்லும்போதெல்லாம் அவன், "எனது செய்கையைப் பற்றிப் பிறர் கவனிக்க வேண்டியது அனாவசியம்" என்று ஒரே வார்த்தையில் அவர்களுக்குப் பதில் சொல்லி முடித்து விடுவான். மணிவண்ணனுக்கு மிகவும் பிரியமானவனான ரங்கநாதன் என்பவனும் அவனுக்கு எத்தனையோ முறை புத்தி சொன்னான். அவ்வாறு சொல்லியும் அவைகளை அவன் செவியில் வாங்காது போனதுடன் ரங்கநாதனையும் விரோதித்துக் கொண்டான். மஞ்சுளாவல்லியை, புஷ்ப

வல்லி தனது வீட்டிலேயே இருக்கும் படி அழைத்தாள். அதற்கு மஞ்சுளா, அநேக வித நீதிகளை யுரைத்துத் தான் எவ்விடத்திற்கும் வருவது கூடாதென்றும், தனக்குரிய இடத்திலிருப்பதே சுவர்க்க பதவி யென்றும் கூறி விட்டாள்.

மணிவண்ணன் வைஷ்ணவ மதத்தையே கைப்பற்றியவனுகை யால் முந்தி மரக்கறி பதார்த்தத்தை விட்டு இதர பதார்த்தங்களை ஒரு போதும் புசிக்க மாட்டான். அப்படி யிருந்தவன், மைலா வீட்டிலேயே புசிக்கத் தலைபட்ட பின்பு மாமிச போஜனமுண்ணப் பழகிக்கொண்டான். முதலில் அன்னிய பதார்த்தங்களை உட் கொள்ளச் சற்று மனம் ஒப்பாது சாப்பிட மறுத்தான்; நாளடைவில் மைலாவின் உபசார வைபவத்தினுலும், உபதேச ரத்தின மாலையி னுலும் புலாலுணவை மிகுதியும் உண்ணத் தலைப்பட்டு விட்டான். அதனோடு அவன் நெற்றியில் மிகவும் அலங்காரமாக வணிந்து கொள்ளும் திருநாமத்தையும் நீக்கிக் கஸ்தூரி பொட்டிடவும் தலைப் பட்டான். உரித்த தேங்காயளவு காம்பீரமாக விருந்த அவனுடைய குடுமி முடிச்சானது, மனையாளை வஞ்சித்த முண்டமாகிய இவன் தலையில் நாம் இருக்கலாகாதென்ற நோக்கத்துடன் நீங்குவதுபோல நீங்கி விட்டது. தலையில் குரங்குக் கிராப்பும் ஏற்பட்டு விட்டது.

மணிவண்ணனை நன்ருக அறிந்தவர்களுங்கூட அப்போது அடையாளங் கண்டு கொள்ள முடியாதபடி அவன் உருவம் பல விதத்திலும் மாறி விட்டது. அவனுடைய இயற்கையான அழகு முற்றும் குன்றித் தற்போதுள்ள நவ நாகரீகமான விகார சொரூபம் அவனுக்கேற்பட்டு அவன் முற்றிலும் புது மனிதன் போலத் தோன்றினன். மைலா வீட்டிற்கு வரும் மாமாக்களின் செய்கையை விவரிப்பது மிகுந்த ஆபாசமாகும். ஆதலின் அதைத் தள்ளி நமது கதைக்கு வேண்டுவன வற்றை மட்டும் ஈண்டுக் கூறுவோம்:

மைலாவுக்கு மணிவண்ணனின் சகவாசம் ஏற்படு முன்னர் அவளுடைய தேகத்தில் படாடோபமாக மின்னிக்கொண்டிருந்த சிங்கார நகைகளெல்லாம் உண்மையான வைரக் கற்களால் செய்யப்பட்டவைகளல்ல; போலியாக ஏற்படும் தாசிகளின்

நேயத்தைப் போன்ற இமிடேஷன் வைரங்களால் செய்யப்பட்டவை. இப்படிப் போலி நகைகளை அணிந்துகொண்டிருந்த அவள், மணி வண்ணனென்னும் கறவை மாட்டைப் பிடித்தவுடனே அவனுடைய சொத்துக்களை யெல்லாம் கறந்து, உயர்ந்த ஆடை யாபரணங்களை அணிந்துகொள்ளத் தந்திரஞ் செய்யத் தொடங்கினாள். அவ்வாறெண்ணி முதலில் அவனுக் கிருக்கும் சொத்துக்களின் விவரங்களை அவனுடைய வாயினின்றே தெரிந்துகொண்டாள். அதன்மேல் அவனுடைய சொத்துக்களைக் கவரச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்படி யிருக்கும்போது, அவளுடைய இனத்தவர்களின் வீட்டில் ஓர் கலியாணம் வந்தது. அதற் கவர்கள் அவளை அழைத்திருந்தார்கள். அந்தக் கலியாணத்தன்று மைலா அக் கலியாணத்திற்குப் போவதற்கு ஆயத்தப் படாமல் விசனத்துடன் படுத்திருந்தாள். முன்னரே எச்சரித்திருந்தபடி தாய்க் கிழவி மைலாவின் அருகில் வந்து, "ஏண்டி மைலி! இவ்விதம் படுத்திருக்கிறாயே! கலியாண வீட்டிற்கு எப்போது போவது? உனக்கு வைர நகைகள் இல்லையென்று விசனமாயிருக்கிறது; அதனாலேயே நீ அங்குப் போகப் பிரயத்தனப் படாமலிருக்கிறாய்; உனக்கு வைர நகைகள் வேண்டியிருந்தால் அதற்குத் தகுந்தபடி நம் ஜாதித் தொழிலை அனுசரிக்கவேண்டும்; நீ அதை வீட்டுக் குலமாதரைப் போல் ஒருவனையே கட்டிக்கொண்டழுகிறாய்; இப்படி யிருந்தால் வைர மிழைத்த நகைகள் எப்படி வரும்? உனக்குள்ள கில்ட் நகைகளுடன் தான் நீ எப்பொழுது மிருக்கவேண்டும்; இன்று நீ வைர நகைகளில்லையென்று கலியாண வீட்டிற்குப் போகாதிருந்தால் நாளை நம் வீட்டிற்கு யார் வருவார்கள்? இமிடேஷன் நகை யணிந்த உன்னைக்கண்டு அவர்கள் பரிகாசம் பண்ணுவார்களே என்று நீ வெட்கப்பட்டு அழுகிறாய்; அதற்கு நாம் என்ன செய்யலாம்? அந்தக் கலியாண வீட்டுப் பெண்ணாகிய லலிதாவுக்குக் கிடைத்துள்ள மாப்பிள்ளை அவளிடம் வந்த முதல்நாளே சகலமான வைர ஜோடிப்பு நகைகளையும் கொண்டுவந்து போட்டு அவளை அலங்கரித்துவிட்டான்; அதன் பின்னரே அவள் அவனோடு சம்பந்தம் வைத்துக்கொண்டாள்; அத்தகைய மனிதனை நீ தேடிக்கொண்டாயா? ஏதோ பாட்டுப்

பாடுகிறுனென்பதை மாத்திரம் உத்தேசித்து நீ ஒருவனை ஆசை நாயகனுக வைத்துக்கொண்டாய்; அவனிடமிருந்து நீ எதையும் பெற்றுக்கொள்ளவில்லை; இப்படி யிருந்துகொண்டு நீ வீணுக அழுவதில் பயன் யாது? எழுந்திரு; நான் எதிர் வீட்டுக் காரியின் சீமைக் கமலக் கம்மலை மட்டுமாவது இரவல் வாங்கி வருகிறேன்; அதையேனும் நீ போட்டுக்கொண்டுபோ'' என்று மிகுந்த வருத்தமும், கோபமும், அனுதாபமும் தோன்றிய முகத்துடன் வெகு வெறுப்பாகக் கூறினுள்.

அதே தருணம் மணிவண்ணன் கீழிருந்து அவர்களிருந்த மெத்தைக்கு வந்தான். அப்படி வரும்போது கிழவியின் வார்த்தைகள் முழுவதும் கேட்டான். கிழவியும் இவன் வருவதை யறிந்தே அந்த வார்த்தைகளைக் கூறினுள். அவற்றைக் கேட்ட மணிவண்ணனுக்கு மைலா தன்மீது உண்மையான பிரியம் வைத்தே தன்னேடு நேசித்து வருகிறுள் என்று தீர்மானித்தான். அதனுல் அவன், அவள்மீது அதிகம் பற்று வைத்து அளவிலா ஆநந்தமடைந்து, ஏற்கெனவே தனக்குப் பணம் கொடுக்கவேண்டியவர்களுக்கு, 'நீங்கள் சீக்கிரம் பணத்தைத் தரவேண்டும்' என்று கடிதம் எழுதியிருந்தபடி, அவர்களிடம் பணத்தை வாங்கி மைலாவுக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொடுக்கக் கருதி உடனே அவர்களிடம் போய்ப் பணத்தைக் கேட்டான்.

அவர்கள், பணம் இன்னும் வரவில்லை என்றும், அடுத்த வாரத்தில் கொடுத்துவிடுகிறுே மென்றும் கூறிவிட்டார்கள். அதன் மேல் அவன், ''நம் உயிர் போன்ற மைலா மனம் வருந்த இனி நாம் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது; நாம் ஒன்றும் செய்யவில்லை என்று கிழவி பேசியதையும் நாம் காதாற் கேட்டுவிட்டோம்; ஆதலால் நாம் கட்டாயம் எவ்விதமாயினும் பணத்தைச் சம்பாதித்து அவளுடைய மனம் களிப்புறும் வண்ணம் செய்யவேண்டும்; நமக்குப் பணங் கொடுக்கவேண்டியவர்களோ வாயிதாச் சொல்லி விட்டார்கள்; ஆதலால் இதற்கென்ன செய்யலாம்?'' என்று யோசித்தான்; ஒரு காரியம் அவன் நினைவிற்கு வந்தது. அதாவது: அவன் முதல் முதலாக மைலாவின் வீட்டைத் தேடி யலைந்தபோது

ஓர் ஆசாமி அவனைக் கண்டு பேசித் தன்னால் பண உதவி செய்யக் கூடுமென்று சொல்லித் தனது விலாசம் பெயர் முதலியவற்றை அவனுக்கு எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றான் என்று 5வது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறதல்லவா? அவனைக் கண்டுபிடித்தால் காரியம் சித்தியாகுமென்று எண்ணினான். அவ்வாறு எண்ணியதும் அன்று அவன் தெரிவித்த விலாச முள்ள இடத்திற்கு ஓர் வண்டி யமர்த்தி அதிலேறிக்கொண்டு அங்குப் போய்ச் சேர்ந்து அந்த மனிதனைக் கண்டு தான் முன் சந்தித்த அடையாளங்களைத் தெரிவித்துத் தனக்குப் பெருந் தொகைப் பணம் தேவை என்றும், உடனே வேண்டுமென்றும் தெரிவித்தான்.

தரகரி பேரமே தொழிலாகக் கொண்டுள்ள அந்த ஆசாமி மணிவண்ணனை மிகவும் உபசரித்து ஓர் ஆசனத்தில் அமரச் செய்தான். மணிவண்ணனும் அமர்ந்தான்.

**தரகரி:**—"ஐயா! பிரபுவே! பணத்தை இதோ நான் அரை மணி நேரத்தில் வாங்கித் தருகிறேன்; அடியேனுக்கு அதுவே தொழிலாகையினால் பணம் வாங்குவோர் 100க்கு 15 ரூபாய் விதம் எனக்குக் கமிஷன் கொடுப்பது வழக்கம்; அவ்விஷயத்தை முதலில் முடித்துக்கொண்டால் உடனே நாம் மார்வாடியிடம் செல்லலாம்" என்று முதலிலேயே தன் டிஸ்கவுண்டுக்கு அடிப் போட்டான். இதைக் கேட்ட மணிவண்ணன் பெரிதும் மகிழ்ந்தவனாய், "ஆகா! சமயத்தில் உதவி புரியும் புண்ணியராகிய தமது கமிஷனையா யான் குறைப்பேன்! அவ்விஷயத்தில் சந்தேகமே வேண்டாம்; வாங்கும் பணத்தில் உங்களுக்குச் சேரவேண்டிய தொகையை எடுத்துக் கொண்டு எனக்கு மிச்சத்தைக் கொடுத்தால் போதும்" என்றான்.

உடனே இருவரும், மணிவண்ணன் ஏறி வந்த வண்டியிலேயே ஏறிச் சவுகார்பேட்டையை அடைந்து ஓர் மார்வாடியிடம் சென்று செய்தியை உரைத்தார்கள். மார்வாடி தொகை எவ்வளவென்று கேட்டான். மணிவண்ணன் சற்றும் வாய் கூசாமலும், யோசனை யின்றியும் "15 ஆயிரம் ரூபாய் தேவை" என்றான். உடனே மார்வாடி அத் தொகைக்கோர் அண்டிமாண்டு தயார் செய்து அதில் மணிவண்ணனின் கை எழுத்து வாங்கிக்கொண்டு, 15 ஆயிரம்

ரூபாயில் அதற்கு 100க்கு 5 ரூபாய் வட்டி வீதம் கூடிய வட்டித் தொகையையும், தரகரிக்குச் சேரவேண்டிய தொகையையும் கழித்துக்கொண்டு மிகுதியுள்ள ரூபாயை மணிவண்ணனிடம் கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்ட மணிவண்ணன் ரூபாய் கைக்கு வந்ததைப் பற்றி ஒருவாறு சந்தோஷ மடைந்தானெனினும் மனதிற்குள், ரூபாய் 15ஆயிரம் ரொக்கமாக வாராமல் அதில் அதிக மான பணம் குறைந்துவிட்டதைப் பற்றியும், தான் திருப்பிப் பணம் கொடுக்கும்போது ரொக்கமாக 15 ஆயிரம் ரூபாய் கொக்கவேண்டியிருப்பதைப் பற்றியும் சற்று யோசித்து வருத்த மடைந்தான். அவ்வாறடைந்த க்ஷண நேரத்திற்குள் மைலாவின் எண்ணமாகிய மாயை அவனைச் சூழ்ந்துகொண்டதனுல் அவற்றை யெல்லாம் மறந்து மிகுந்த சந்தோஷத்துடன் மார்வாடி யிடத்திலும், தரகரி யிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு வந்த வண்டியில் ஏறி நேராக மைலாவின் வீட்டிற்கு வந்தான். அப்போதும் மைலா விசனமுடையவள் போலவே படுத்திருந்தாள். அவளைக் கண்ட மணிவண்ணன், "என் கண்மணியே! சற்று நேரத்திற்கு முன் உன் தாயார் உன்னிடம் கூறிய சகல விஷயங்களையும் யானறிந்து கொண்டேன்; என் இன்னமுதமே! உன்னுடைய நகைகள் முற்றும் கிலீட்டு நகைகள் என்பதை நீ எனக்கு முந்தியே தெரிவிக்க லாகாதா? அப்படித் தெரிவித்திருந்தால் நான் அந்த நிமிஷமே வைர நகைகள் வாங்கி உனக்குப் போட்டிருப்பேனே! உம்; இப்போது தான் என்ன முழுகிவிட்டது; வண்டி கொண்டுவந்திருக்கிறேன்; எழுந்துவா; உனக்கிஷ்டமான நகைகளை நான் இக்ஷணமே வாங் கிப் போடுகிறேன்; இதோபார் கையில் பணம்" என்று ரூபாயை அவளுக்குக் காட்டினன்.

இந்த இன்சொல்லைக் கேட்ட மைலா என்னும் மாயக்காரி உடனே எழுந்து உட்கார்ந்துகொண்டு, நிரம்பவும் கனிவோடும், நடிப்பாகவும் பேசத் தொடங்கி, "ஆகா! இது என்ன இது! அந்தக் கிழவி ஏதோ உளறினல் அதற்காகத் தம்முடைய பணத்தை யெல்லாம் வீணகச் செலவு செய்யலாகுமோ! தம்முடைய சுக துக்கங்களைக் கவனிக்கவேண்டியவள் நானல்லவா! அப்படியிருக்க, நான் தமது பணத்தை மேன்மேலும் விருத்தியாகும்படிச் செய்யாம

ல் கரைப்பது ஒழுங்காகுமா?'' என்று அவன் க்ஷேமத்தையே கருதியவள் போல் தளுக்காகக் கேட்டாள்.

மணிவண்ணன்:—''என் கண்ணே! என் நன்மையை விரும்பும் உனது உத்தம குணத்தைப் பற்றி நான் மகிழ்கின்றேன்; கிழவி சொல்லுக்காக நான் இதைச் செய்யவில்லை; என்மீது மிக்க விசுவாச முள்ள உன்னை அலங்கரித்துப் பார்க்கவேண்டுமென்னும் எண்ணத் தினலேயே செய்கிறேன்; என்னைச் சந்தோஷப் படுத்தும் உன்னை நானும் சந்தோஷப்படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்; உனக்கு நகை வாங்கிப் போடுவதால் என் பணம் வீணுகிவிடாது; இரும்புப் பெட்டியில் ஒரு பயனு மில்லாமல் அடைபட்டுக் கிடக்கும் அது உன் ஆபரணங்களாக அழகு செய்து பிரகாசித்துக்கொண் டிருக்கிறது; இதற்காக நீ கவலைப்படவேண்டாம்; எழுந்திரு; நாம் உடனே (P. Orr & Sons) பியாரன்ஸன்ஸுக்குப் போய் உனக்குப் பிடித்தமானவற்றை வாங்கிக்கொண்டு வருவோம்; வா'' என்று வெகு அன்பாக வேண்டினன்.

மைலாவிடத்தில் வைரநகைகள் இல்லாமலில்லை; ஏராளமான நகைகள் அவளுடைய பெட்டியில் அடக்கப்பட்டு நித்திரை செய்து கொண்டிருந்தன. அப்படியிருந்தும் மணிவண்ணனிடம் ஏமாற்றிப் பொருள் கவர்வதற்காகவே தற்போது மேற்கூறியபடி பாசாங்கு செய்து கிலீட் நகைகளை யணிந்து கொண்டிருந்தாள். இவ்வகைத் தந்திரக்காரியாகிய அவள், மேற்கூறியபடி மணிவண்ணன் அழைத்தவுடனே அதற்கிசைந்து எழுந்து, வேறு ஆடை அணிந்து கொண்டு வருவதாக அவனிடம் கூறிவிட்டுக் கீழே இறங்கித் தனது உண்மையான வைரநகைகளை யெல்லாம் எடுத்துத் துடைத்து ஓர் பெட்டியில் வைத்து அதைக் கிழவியிடம் கொடுத்து, ''உடனே மாமாவை வரவழைத்து அவனிடம் இந்தப் பெட்டியைக் கொடுத்து, அவன் மேலேவந்து என் ஆசைநாயகனிடம், 'இந்த நகைகளெல்லாம் விலைக்கு வந்திருக்கின்றன' என்று கூறும்படிச்செய்'' என்று சொல்லி விட்டு, வேறு ஆடை அணிந்துகொண்டு மாடியை அடைந்தாள்.

இதற்குள் கிழவி மாமாவிடம் நகைகளைக் கொடுத்து மைலா தெரிவித்தபடியே கூறி மாடிக்கனுப்பினள். அப்போது மணி

வண்ணனும், மைலாவும் கீழேவருவதற்குப் படியருகில் வந்தார்கள். அத்தருணத்தில் கையில் பெட்டியுடன் மாமா எதிர்ப்பட்டு, "அடாடா! நான் வந்த சமயம் சரியில்லைபோல விருக்கிறதே! நீங்கள் எங்கேயோ பிரயாணம்போலும்; சரி நான் வந்தவேலைக்குச் சௌகரியமில்லை" என்று இழுத்தாற்போல் கூறினான்.

இதைக்கேட்ட மணிவண்ணன், "வாருங்கள் மாமா! நாங்கள் பியாரன்ஸன்ஸுக்குப் போகிறோம்; கொஞ்சநேரம் உட்காருங்கள்; நாங்கள் போய்ச் சீக்கிரம் வந்துவிடுகிறோம்; இதென்ன ஊரிலிருந்து வருபவர்போல கையில் பெட்டியை வைத்திருக்கிறீர்களே!" என்றான்.

மாமா :—"ஓகோ; பியாரன்ஸன்ஸுக்கா போகிறீர்கள்; அப்படியானால் விலையுயர்ந்த நகைகள் வாங்குவதற்குத்தான் போகிறீர்களென்றெண்ணுகிறேன்; தங்கள் உத்தேசம் அதுவாயிருக்குமானால் நான் வந்த காரியமும் ஆகலாம்; இதோ இந்தப்பெட்டியில் நானும் சில வைரசெட்டு நகைகளை கொண்டுவந்துள்ளேன்; இவற்றைத் தமக்கும், மைலாவுக்கும் காட்டிவிட்டுச் செல்லலாமென்றே வந்தேன்; தாங்கள் தேடிப்போகும் பொருள்கள் எதிராகவே வந்துவிட்டன" என்று சாமார்த்தியமாகக் கூறிக்கொண்டே அவர்களை மீண்டும் மேத்தைக்குப் போகும்படி செய்து தானும் அவர்களுக்குப் பின்னேசென்று அந்தப் பெட்டியைத் திறந்து நகைகளை அவர்களுக்குக் காட்டினான்.

அவற்றைக் கண்ட மைலா, தான் அப்போதுதான் நூதனமாகப் பார்த்தவள்போல, பிரமிப்பும், ஆசையும் அடைந்து, "ஆகா! நாதா! நாதா! நம்முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! இந்தப் பெட்டியில் ஒரு ஜோடிப்பு நகைகள் அப்படியே இருக்கின்றன; வீணாக நாம் கம்பெனிக்குப் போகவேண்டாம்; கடவுள் நாம் விரும்பியவற்றை இவ்விடத்திலேயே கொண்டுவந்து சேர்த்துவிட்டார்; இவற்றையே விலைதீர்த்து வாங்கிவிடுங்கள்" என்று பசப்பினாள்.

மணி :—மாமாவை நோக்கி, "இவையெல்லாம் என்னவிலையாகின்றன சொல்லும்; நான் இப்படியே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கிறேன்" என்றான்.

**மாமா** :—"இந்தப் பெட்டியில் மூக்குத்திருகாணிமுதல் கைவிரல் மோதிரம் வரையில் பத்து நகைகளிருக்கின்றன; இவைகள் சுத்தமான வைரங்கள்; இவற்றை இப்படியே மொத்தமாக எடுத்துக் கொள்ளும்பக்ஷத்தில் 20 ஆயிரம் ரூபாய்க்குக் கொடுத்துவிடும்படி சொத்துக்காரர்கள் கூறியுள்ளார்கள்; இவற்றின் மதிப்பு 25 ஆயிரம் ரூபாய்வரை தாராளமாயோடுகின்றது; இவற்றை வாங்கிக்கொண்டால் 5 ஆயிரம் ரூபா நமக்கு இலாபமிருக்கிறது" என்று மெல்ல தட்டான் நகைகளுக்குப் பொடிவைத்து ஊதுவதுபோலப் பேசினன்.

**மைலா** :—மணிவண்ணனை நோக்கி, "ஆகா! நாதா! நாம் இவ்வளவு நயமாய் வருகிறவைகளை ஒன்றுக்கிரண்டு விலைகொடுத்து ஷாப்பில் எதற்கு வாங்கவேண்டும்? இவற்றையே எடுத்துக் கொள்ளலாம்" என்றாள்.

அச்சமயத்தில் தாய்க்கிழவியும், மைலாவீட்டு வேலைக்காரனும் வந்து, மைலாவும், மாமாவும் சொன்னபடியே அபிப்பிராயம் கூறினர்கள்.

"வஞ்சகர் மூவர் சேர்ந்தால் மோசம், நால்வர் சேர்ந்தால் நாசம்" என்று அறிஞர் கூறுவார்கள்; அதுபோல மகா வஞ்சகராகிய கிழவி, மைலா, மாமா, வேலைக்காரன் ஆகிய நால்வரும் ஒன்று சேர்ந்து, வஞ்சகமாகிய பேச்சை நயமாக மாறறிக்கூறி, ஒன்றுமறியாது பாழான மோகத்திலீடுபட்டு மதிமயங்கிக் கிடக்கும் மணிவண்ணனை மயக்கிவிட்டார்கள். இவர்களுடைய விஷம்போன்ற மோசமான வார்த்தைகளைக் கரும்புபோல எண்ணி நம்பிய மணிவண்ணன் சற்றும் பின்னிடையாது, "சரி; அப்படியே இவற்றை எடுத்துக்கொள்வோம்" என்று கூறித் தன் கையிலிருந்த பணத்தை அந்த மாமாவிடம் கொடுத்துவிட்டு மிச்சமுள்ள தொகையை மறுதினம் கொடுப்பதாகக் கூறினன். மாமா, அதற்கு ஒப்பியதாக நடித்து நகைகளைக் கொடுத்துவிட்டுப் பணத்தை எடுத்துக்கொண்டு கீழே சென்று இரகஸியமாக அதில் தனக்குச் சேரவேண்டிய கமிஷனை யெடுத்துக்கொண்டு பாக்கித் தொகையைக் கிழவியிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

தந்திரக்காரியான மைலா, பின்னர் அந்த ஆபரணங்களை அணிந்துகொண்டு கலியாணவீடு சென்று விருந்துண்டு வீடுவந்து சேர்ந்தாள். அன்றே மணிவண்ணன் மீண்டும் மார்வாடியிடம் சென்று இன்னும் ஓர் பத்தாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டுவந்து மாமாவின் பாக்கியைக் கொடுத்துவிட்டு மிகுதியுள்ளதைக் கொண்டு தானும், மைலாவும் உல்லாசமா யுலாவுவதற்காக ஓர் மோட்டார் காரும் வாங்கிக்கொண்டு, "இதே கைலாசம், இதே வைகுண்டம்" என்று மைலாவின் வீட்டை நினைத்து அளவற்ற ஆநந்தக் கடலில் மூழ்கி அங்கே தங்கியிருந்தான்.

அவன், மேற்கூறியபடி சிறுகச்சிறுகப் புலால் உண்ணப் பழகி யதுபோலவே, மதுபானங்களைக் குடிப்பதற்கும் பழக்கஞ் செய்து கொண்டான். தினந்தோறும் உயர்தரமான சாராயங்களைத் தருவித் துத் தலை மயங்கக் குடித்துக்கொண்டே வருவதை வழக்கமாகக் கொண்டான்; ஒவ்வொரு நாளிலும் மைலாவுடன் நாடகம், பயாஸ் கோப், சர்க்கஸ் முதலிய வேடிக்கைகளைப் பார்ப்பதிலும் தவறுவ தில்லை.

இவன் செய்கை இங்ஙனமிருக்க, இனி நமது மாது சிரோமணி யாகிய மஞ்சுளவல்லியின் விஷயத்தைக் கவனிப்போம்: அவள் மேற்கூறியபடி கலங்கியிருக்கும்போது, அவள் குடியிருந்த வீட்டிற்கு மற்றொரு குடும்பத்தார் குடித்தனத்திற்கு வந்தார்கள். இவள் பரி தாபமான நிலைமையில் தனிமையிலிருக்கும்போது அவர்கள் அவ் வாறு வரவே சற்று தைரியமுடையவளாய்ச் சந்தோஷமடைந்து தனது விதியை எண்ணித் தன் காலத்தைக் கடத்திவந்தாள். மாதம் 5 ரூபாய் வாடகைக்கு ஒரே அறையைமட்டும் தனக்கு வைத்துக் கொண்டாள். தன்னுடைய விலையுயர்ந்த தங்கச் சங்கிலியை விற்று வந்த பணத்தைக்கொண்டு வீட்டுக் குடிக்கூலி கொடுத்துவந்ததோடு தனது சொல்ப ஆகாரத்திற்கு வேண்டியவற்றையும் செலவுசெய்து வந்தாள். இவ்விதமாகவே பலமாதங்கள் கடந்து வருடமுமாகி விட்டது. அவள் தன்னுடைய நாயகனைத் தன் கண்ணால் பார்ப்ப தற்குக்கூட ஏதுவில்லாமற் போயிற்று. அவள் சதா அதே நினை வாக உருகித் துரும்பிலும் துரும்பாகப் போய்விட்டாள். தான் எந்தவிதமான தந்திரமாயினும் செய்து தன் நாயகனை ஒருமுறை யாவது பார்த்தால்தான் தன்னுடைய ஜீவன் நிலைத்து நிற்கும் என்ற ஆவல் அவளுக் கதிகரித்துவிட்டது. அதன்மேல் அவள், "நம்வீட்டு வேலைக்காரியின் உதவியைக்கொண்டு நம்முடைய புரு ஷன் சென்றிருக்கும் தாசிவீட்டை யடைந்து அவரைக் கண்டு அவர் காலில் விழுந்து நம்குறைகளை அவரிடம் சொல்லி முறையிட் டுப்பார்ப்போம்; அதையும் அவர் சட்டைபண்ணவிட்டால் நமது உயிரை மாய்த்துக்கொள்வோம்; இதைத்தவிர வேறுவழியில்லை" என்ற தீர்மானத்திற்கு வந்தவளாய்த் தனக்கு மிகுந்த நம்பிக்கை யாயுள்ள வேலைக்காரியை அனுப்பி மைலாவின் வீட்டைக் கண்டு பிடித்துக்கொண்டு வரச்செய்து, அவளையே துணைக்கு அழைத்துக் கொண்டு நேராக அந்த மைலாவின் வீட்டை அடைந்தாள்.

அப்போது மணிவண்ணன் பாட்டுப்பாட, மைலா அபிநயம் செய்து சதுராடிக்கொண்டிருந்தாள். அவ்வாறு தன் நாயகன் உல் லாசமாயிருக்கும் தருணத்தில் மஞ்சுளா வெகு தைரியத்துடன் அவ்வீட்டின் படிக்கட்டில் ஏறி உள் பக்கம் நடையை அடைந் தாள். அப்போது மணிவண்ணன் பாடும் குரல் அவளுக்குக்

கேட்டது. அதை அவள் உற்றுக் கேட்டாள்; அது மெத்தை யின் மீதிருந்து வருவதாகத் தெரிந்தது. உடனே அவள், தன் வேலைக் காரியையும் அழைத்துக் கொண்டு திடுதிடுவென்று மெத்தையை அடைந்தாள். அங்கு நடந்த விநோதமான காட்சி யைக் கண்டதே மஞ்சுள வல்லியின் வயிற்றில் தீ மூட்டியது போல இருந்தது. அவள், சகிக்க வியலாத ஆத்திரமும், துக்கமுமடைந்த வண்ணம் மணிவண்ணன் நவ நாகரீகமான கோலத்தைத் தூர நின்ற படி கவனித்தாள். ஆகா! அவனுடைய உருவ முற்றும் மாறிப் போயிருந்தது; அவன் வேறு ஆசாமியைப் போல அவள் சந்தேகம் கொள்ளும்படி விளங்கினான். அத் தோற்றத்தைப் பார்த்த வுடனே அவளுக்குச் சற்று வியப்புண்டாகி விட்டது. "இவன் நமது கண வனே, அல்லது வேறு யாரேனும் அன்னியனே?" என்று ஐயங் கொண்டு அவனை நன்றாக உற்று நோக்கினாள். அவன் முகச் சாய லினாலும், குரலின் ஒலியினாலும் அவன் மணிவண்ணன் தான் என் பதை யறிந்துகொண்டாள். அவ்வாறு தெரிந்து கொண்ட வுடனே சரேலென ஓடி அவன் இரு தாள்களையும் தனது கரத்தினால் பிடித் துக் கொண்டு, "ஆ! என்னுயிரே! என் பிராணகாந்தா! தமது சர ணங்களையே சதமாக நம்பியுள்ள இவ்வேழையை இவ்வித பரிதாப நிலைமைக்குள்ளாக்கலாகுமா? ஐயோ! பாவி என்னுடைய நினைவை அறவே மறந்தீரோ! என்னுருயிர்க் கரசே! ஆதியில் இரண்டு நாட் களில் தாங்கள் தாசி வீட்டிற்குப் போகவில்லை யென்று எனக்கு ஏதோ சாக்குப் போக்குச் சொல்லியதை நான் நம்பாமல் சிலவார்த் தைகள் சொல்லியகாலத்தில், தாங்கள் வெகு கம்பீரமான குரலி னால், 'மஞ்சுளா! என்னை வேசிக் கள்ளனென்று நினைத்தாய் போலும்' என்று மகா பரிசுத்தர் போலப் பேசினீர்களே! அத்த கைய தாங்கள் தற்போது இந்த வேசி வீட்டிலிருக்கின்றீர்களே! இது தகுமா? இதை நான் நேரில் பார்த்து விட்டேனே; இப் போது என் மனம் என்ன பாடு படுமென்பதை நீங்களே யோசித் துப் பாருங்கள்; பிராண நாதா! தாங்கள் இப்பாவியை அக்கினி சாக்ஷி யாக மணந்த காலத்தில் என்னைக் கை விடுவதில்லை என்று பிரமா ணம் செய்து, என் கரத்தைப் பிடித்தீர்களே; அப்படியிருக்க அதை மறந்து என்னை இவ்விதம் சந்தியில் விட்டு விட்டுத் தாங்கள் அநியாயமான வஞ்சக வலையில் சிக்கித் தவிப்பது தங்களுக் கழகாமோ? ஹா! என் இன்ப துரையே! சில காலமாக இவ்வாறு சிறுமை யடைந்த நான், நம்முடைய முற்கால சம்பவங்களை நினைக் கும் போது என் மனம் தீராத் துயரத்திற் குள்ளாகின்றதே; என் அருமைக் காதலரே! நமக்குள் நிகழ்ந்துள்ள ஓர் சம்பவத்தை இப் போது தாங்கள் மறந்திருப்பினும் நான் மறக்கவில்லை; அது இப் போதுதான் நடைபெறுவது போல என் மனத்தில் தோன்றுகின் றதே! என்னாருமுதே! நமக்குச் சாந்தி முகூர்த்தம் நடை பெற்ற

காலத்தில் முதல் முதலாக நம்மைப் பள்ளி யறைக்குப் பெரியோர்கள் அனுப்பிய போது நான் அறையின் கதவைத் தாளிட்டுக் கொண்டு உடனே தங்களுக்கு ப்ரதக்ஷண நமஸ்காரம் செய்து மலர் கொண்டு தமது பாதத்தில் அர்ச்சனை செய்து கை கூப்பி நிற்க, அச்சமயம் தாங்கள் மிக்க வியப்படைந்து, ஆநந்தக் கடலில் மூழ்கி என்னைத் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டு, 'என் கண்மணீ! நாம் இதுவரையில் வெவ்வேறு மனிதராயிருந்தோம்; இன்றுமுதல் நம்முடைய ஈருயிரும் ஒருயிராகிவிட்டது; அதனுல் உன்னுடைய சுக துக்கங்கள் என்னுடையவையே; ஆதலால் நீ எதற்கும் கவலையடையவேண்டியதில்லை; அப்படியிருந்தும் உன் முகத்தில் ஏதோ ஒருவிதமான விசனக் குறி தோனறுகினறது; அதன் காரணத்தை நான் யூகித்துணர்ந்துகொண்டேன்; அதாவது தாய் தந்தையரற்ற அனுதையாகிய உன்னை இதுகாறும் தருமத்திற்கு வளர்த்தவர்களும வெகு தூர தேசமாகிய டில்லிக்குச் சென றுவிடப்போவதால, 'இனி நம்மை நம் புருஷன் எவ்விதம் நடத்துவாரோ' என்ற கவலையை யடைந்திருக்கின்ருய்; நீ அதைக் குறித்துச் சிறிதும் கவலை கொள்ளவேணடாம்; எக்காலத்தும் எந்தச் சமயத்திலும் நான் உன்னை எவ்வித குறைவுகளுக்கும் உள்ளாக்க மாட்டேன்; இது சத்தியம்; நாமினி ஒருயிர் என்பதை நீ உறுதியாகக் கொள்' என்று என்னைத் தேற்றினீர்களே அதன்படி ஆதரித்தும் வந்தீர்களே! அப்பேர்ப்பட்ட தாங்கள் இப்போது அந்த உறுதிமொழியான சத்தியததையும் மறந்து என்னைக் கேவலம் அனுதையிலும் அனுதையாக விடடுவிட்டீர்களே! முன்னிருந்த நிலைமையைத் தாம் சற்றும எண்ணவில்லையே; அன்று கூறிய மொழியை மறந்து என்னைக் கைவிடுவது தகுமோ! ஏழையான் புகலிடமின்றித் தவிக்கின்றேனே! ஐயோ! என்னசெய்வேன்! எங்குப் போவேன்! என்னுசை நேசரே! நான் பலமுறைகள் சொல்லியதையே சொல்லித் தம்மைத் தொந்தரவு செய்வதால் தங்களுக்குக் கோபம் அதிகரிக்கலாம்; அவ்வாறு கோபித்தால் பேதை எனக்கு வேறு கதியுண்டோ! பரத்தையரின் நேசம் பாம்பின் விஷமென்று பெரியோர் கூறியிருக்கின்ருர்களே! சீகாளத்திப் புராணத்தில்,

'கரிய நீலவோண் கட்போது மாதரைக் கண்ணுற்
றரிய மாதவ வேடம்விட்ட னேந்தவ ரனேகர்
உரிய மாநிதி யனைத்துமீந் திரப்பதற் குன்னிப்
பரியு மாதவ வேடமுற் றகன்றவர் பலரே'

என்று வேலையசுவாமிகள் கூறி யிருப்பதைச் சற்று ஆராய்ந்து பாருங்கள்; இதில், 'கரிய கண்களை யுடைய பரத்தையரைக் கண்டு

தவவேடம் விட்டுச் சென்று அவர்களைக் கூடிக் கெட்ட தவசிகளனேகர்; அவர்களுக்குக் கைப் பொருள்களை யெல்லாம் கொடுத்துவிட்டுப் பின்னரும் பொருள் யாசிப்பதற்குச் சாமியார் வேடந் தாங்கிச் சென்ற தனவந்தர்களனேகர்' என்று அப்பெரியார் கூறியிருக்கின்றாரே! அதையேனும் தாங்கள் கவனிக்கக்கூடாதா? என் உயிரினும் சிறந்த நாதா! சத்தியம் நிலைபெற்றோங்கி யிருந்த முற்காலத்திலேயே விலை மாதர்களையும், அவர்களின் மனத்தையும், குணத்தையும், இனத்தையும், செய்கையையும் குறித்துப் பெரியார் மிகக் கேவலமாகக் கூறியிருக்கின்றார்கள்; அக்காலத்திலிருந்த தாசிகளே அப்பேர்ப் பட்டவர்களா யிருந்தால், கலியின் கொடுமை மிகுந்து தாயை மகனும், தந்தையை மகளும் நம்பாமலிருக்கும் இக்காலத்தில் உள்ள விலை மாதரின் தீய செயல்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? நாதா! இதுபரியந்தம் அனுபவித்த போலியானந்தம் போதும்; இனியேனும் இக்கொடிய நரகை விட்டு வீட்டிற்கு வந்துசேருங்கள்; என் நாதா! கைப்பொருளும் வறண்டு, மெய்ப்பலமும் குன்றி விட்டபின் பரத்தையரால் ஓட்டப்பட்டுத் தவித்து வருந்திவருவதை விட, தற்போதே இந்த மயக்கத்தினின்றும் விடுபட்டு வந்துவிடுவது நலம்; நாதா! இந்த மாயையாகிய துயிலினின்றும் விழிமின்! விழித்தெழுமின்! விழித்து அடியாளின் விழியின் நீரைத் தடைபடச் செய்யுங்கள்; இந்தக் கொலை பாதகக் கூட்டுறவு வேண்டாம்! வேண்டாம்!! இனிப் பரத்தையரின் நேசம் வேண்டாம்!" என்று கல்லும் கரைந்துருகும்படி கண்ணீர் நிலத்தில் பாய்ந்தோடப் பிரலாபித்துக் கதறினாள்.

மணிவண்ணன், மைலாவின் பரமாநந்தமான அபிநயக்கச்சேரியில் ஈடுபட்டு மெய்ம்மறந்து, மயிர் சிலிர்த்து, ஆநந்தபுளகிதமடைந்து இன்ப வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்த தருணம், எவரும் எதிர்பாராத விதமாகத் திடும்பிரவேசமாய் மஞ்சுளா ஓடி வந்து தனது காலைப் பிடித்துக்கொண்டு புலம்புவதைக் கண்டதும், கனவிலும் கருதாத அச்சப்பவத்தினால் திடுக்கிட்டுச் செயலற்று, வியப்பும், திகைப்பும் அடைந்தவனாய் அப்படியே தம்பித்துப் பிரமித்து, மனமிடிந்து கல்லாய் உட்கார்ந்துவிட்டான். அப்படி உட்கார்ந்தவன் அவள் துரும்புபோல் இளைத்த தேகத்துடன் கூடியிருப்பதைப் பார்த்தவுடனே, முதலில் "இவள் மஞ்சுளாதானோ, வேறு பெண்ணோ?" என்ற சந்தேகம் அவனுக்குண்டாகிவிட்டது. எனினும், அவளுடைய குரலால் அவள்தானென்பதை அவன் தெரிந்துகொண்டான். அவனுடைய ஆநந்தத்திற்குப் பங்கமாக அவள் வந்து புலம்பியது முற்றும் அவனுக்கு வெறுப்பாகவே யிருந்தது. அதனால் அவன், அவளைத் தேற்றவோ கோபிக்கவோ முடியாமல் தனது நினைவே அற்றுச் சவம் போலிருந்தான்.

மைலாவும், வெகு திறமையுடன் தனது அபிநயக் கச்சேரியை நடத்திக்கொண்டிருக்கையில் மகாலக்ஷ்மிபோன்ற மஞ்சுளா ஓடிவந்து அபாரமான துக்க மேலீட்டால் புலம்புவதைக் கண்டதும் மணிவண்ணனின் நிலைமையையே அடைந்தாள். கிழவியும் மஞ்சுளாவின் அழகையும், அவள் சகிக்கவியலாத துயரத்தினால் புலம்பும் பரிதாபத்தையும் கண்டு தடைகட்டிய நாகம் போல ஒடுங்கி நின்றாள். எனினும் மஞ்சுளா மணிவண்ணனின் சம்சாரம் என்பதை அவள் புலம்புவதால் அறிந்துகொண்டு, அவள் தங்கள் ஜாதியாரையும், அவர்களின் செய்கையையும் பழித்துக் கூறியதைப் பற்றிச் சீற்றங்கொண்ட சர்ப்பம்போல சீறி அதிபயங்கரமான பார்வையால் ஒரு தரம் மணிவண்ணனையும் மஞ்சுளாவையும் பார்த்தாள். அவ்வாறு பார்த்ததும், "ஆகா! யாரடி நீலிக்கழுதை! என் வீட்டில் உத்தரவின்றி நுழைந்ததோடு எங்களைப் பழிக்கும் பரமதுஷ்டை நீயாரடி!" என்று கர்ஜித்துக்கொண்டு மஞ்சுளாவினருகில் வந்தாள்.

அவளுடைய இடிபோன்ற வார்த்தைகளைக் கேட்டவுடனே மணிவண்ணனுக்கு இருந்த பிரமை நீங்கித் தெளிவும் தைரியமும் உண்டாகிவிட்டன. கிழவியின்மீதும், மைலாவின்மீதும் பக்ஷமும், மஞ்சுளாவின்மீது மிகுந்த வெறுப்புமுண்டாகிவிட்டன. அவ்வாறாகவே அந்த வன்னெஞ்சன், மஞ்சுளாவின்மீது தாங்கமாட்டாத ஆத்திரம்கொண்டு அவளை விரோதியாகவே பாவித்து, கோபக்குறியுடன் பார்த்து, "ஆ! எனது இன்பத்தைக் கெடுத்த இழிவான நரகப்பிணமே! உனக்கு இத்துணை துணிச்சலும் வந்துவிட்டதா!" என்று பல்லைக் கடித்துக்கொண்டு கூறியபடியே, அவளுடைய பரிதாபமான வார்த்தை ஒன்றையும் கவனியாமல் அவள் கழுத்தைப் பிடித்துத் தடதடவென்று தள்ளிக்கொண்டுவந்து மெத்தை விராண்டாவின் கைப்பிடிச் சுவர்மேலிருந்து ஒரே தூக்காகத் தூக்கிக் கீழே உருட்டித் தள்ளிவிட்டான். இந்த அதிபயங்கரமான காட்சியைக் கண்ட, மஞ்சுளாவுடன் கூடவந்த வேலைக்காரி கோவெனக் கதறி, "ஐயோ! உத்தமியாகிய உனக்கு இவ்வித கொடுமை செய்யும் பாவிகளுக்குக் கடவுள் சகாயம் செய்வாரோ!" என்று பதற்றத்தோடு சொல்லிக்கொண்டே வீதியை நோக்கி வேகமாக ஓடலானாள்.

182848

Supplement to this Issue.

# THE MALAYALA MEDICAL HALL

**Head Office**

**Main Road**

**TRIVANDRUM**

**Travancore State.**

---

உலகப்பிரசித்தி பெற்றதும்
உண்மையோடும்,
உத்தரவாதத்தோடும் செய்யப்
பட்டதுமான மிகச்சிறந்த
மலையாள ஔஷதங்களின்

## கிரய ஜாப்தா.

---

மலையாள மெடிக்கல் ஹால்
மெயின் ரோடு
திருவனந்தபுரம் (Trivandrum)

---

Travancore.

# மலசுத்திலேகியம்.

## (நித்தியவிரேசனத்திர்க்கு லேகியம்)

ஜனங்களில் ஒருசாரார் நித்தியவிரேசனம் (தினசரி மலம் கழிதல்), சரியாய் இல்லாமல் ஆவஸ்தைப்படுகிறார்கள். அவ்வித சரீரிகள் பேதிக்கு சாப்பிடினும் மலம் சரியாய் கழிவதில்லை. விளக்கெண்ணை பேதிமாத்திரைமுதலிய பேதிமருந்துகளை அருந்தவும் சிலர் இஷ்டப்படுவதில்லை. மலம் சரியாய் தினசரி வெளியாகாதிருந்தால் வாதம், அர்சஸ்(மூலநோய்) அஜீரணம் பசியின்மை, வயிறுபொருமல், முதலியநோய்களும் சொறி, சிரங்குமுதலிய நோய்கள் வாயுவின் சேஷ்டை இவைகள் உண்டாகின்றன. எங்கள் மலசுத்திலேகியம் என்னும்நித்தியவிரேசனலேகியத்தைதின்மும் இராப்போஜனத்திர்க்குப்பின் ஓர் நெல்லிக்காயளவு சாப்பிட்டுவந்தால் மலச்சிக்கலென்னும்பாதையினின்று விலகிவிடலாம். சாப்பிடுவதர்க்கு யாதோர்வித கஷ்டமுமிராது மனத்தைக்குமட்டாது. முகத்தைச்சுளிக்கவேண்டாம். இந்தலேகியத்தை ஒருவிதபத்தியமுமின்றி தினசரி சாப்பிட்டு மலசுத்தி செய்வதால் மூலநோய், வாதம், பசியின்மை, அஜீர்ணம், வயிற்றுவலி, வயிறுபொருமல், சுரம், சர்ம்மநோய்கள் முதலியவைகள் அணுகாது.

20 தோலா டப்பி 1க்கு ரூபா 1 அணா 8.

## சந்தனாதி தைலம்.

இந்ததைலத்தைதேய்த்து ஸ்நானம்செய்துவந்தால் தலை, கண், மூளைநரம்பு இவைகளுக்கு ஏர்ப்பட்டுள்ள சூட்டைப்போக்கிநல்லகுளிர்ச்சியைக்கொடுத்து ஞாபகத்தையும் உர்ச்சாகத்தையும் உண்டுபண்ணும். கண்நோய் செவிக்குத்து, பீனஸம், சொறி, சிரங்கு, தேமல் இவைகளை நீக்கும். இரத்தவாதம், பித்தசேஷ்டையால்உண்டாகும் கைகால்சூடு இவைகளுக்கு மிகுந்த குணத்தைக்கொடுக்கும், கஸ்தூரி புனுகு முதலிய வாசனை திரவியங்களாலும் உயர்ந்த மூலிகைகளாலும்செய்துள்ள இந்த சந்தனாதிதைலத்தை வாரம் இருமுறை தேய்த்து ஸ்நானம்செய்துவந்தால் யாதோர்வித நோய்களுமணுகாது என்றுமட்டுமல்ல உடம்பிலும்வாயிலுமுள்ள துர்க்கந்தத்தை நீக்கி நல்ல உர்ச்சாகத்தையும்கொடுக்கும். கண்ணொளியை அதிகப்படுத்தும். ஞாபகமில்லாதவர்கள் இந்த தைலத்தை தவிர மற்ற மருந்துகள் ஒன்றும் உபயோகிக்கவேண்டாம். ஓயாதுபுஸ்தகம் வாசிக்கிறவர்களும் எழுதுகிறவர்களும்; வக்கீல் உபாத்தியாயர், பிரசங்கி இவர்களும் உபயோகிக்கவேண்டும் தைலம் இதுவேயாகும். சம்போகத்தால் இளைத்த உடம்பிர்க்கு இதோர் கர்ப்பத்தைப்போல் பலனளிக்கும். கர்ப்பணிகளுக்கும் பிரஸவித்த ஸ்திரீகளுக்கும் இதைப்போல் குணத்தைக்கொடுக்கும் தைலம் வேறில்லை. பித்தநோய், கண்கூச்சம், மூளைச்சூடு, கைகால் எரிச்சல், மூத்திரதோஷம், மேகம், எலும்புருக்கம் முதலியநோய்களுக்கு இதுவோர் தனிப்பட்ட தைலமாகும்.

புட்டி 1 க்கு ரூபா 1.

## பிருங்காமலாதி தைலம்.

கண், காது, பல் இவைகளுக்கு ஒரேகாலத்தில் குணத்தைக்கொடுப்பதும், தினமும் ஸ்நானத்திர்க்கு உபயோகிக்கக்கூடியதும், அளவற்ற விசேஷகுணங்கள் அமைந்ததுமான ஓர் தைலம். இந்ததைலத்தைதேய்த்து முழுகுவதால் அநேகநன்மைகள் உண்டாகிறது. சோம்பலுடன் வேலைசெய்கிறவர்களுக்கும் ஓயாது வாசிப்பவர்களுக்கும், உபாத்தியாயர், மாணாக்கர், இவர்களுக்கும், கவிகள், வக்கீல்கள், இரவில் தூக்கம்விழிப்பவர்கள், இவர்களுக்கும், இது மிகவும் குணத்தைக்கொடுக்கும், தலைவலி, எட்டியும் பாராது. குருடனை குருடாக்கும். காக்கையை குயிலாக்கும். மூளைக்கு ஞாபகத்தையும், குளிர்ச்சியையும் கொடுக்கும். ஒருபுட்டி தருவித்துப்பாருங்கள்,

புட்டி1 க்கு ரூபா 1.

# மன்மதசிந்தாமணி லேகியம்.



அகாலசம்போகம், அதிபோகம், முஷ்டிமைதுனம், வதனசுரதம், வேசிகள் உறவு, முதலிய கெட்ட நடபடிக்கைகளினால் ஏர்ப்படும் தாதுநஷ்டம் இந்தரியஸ்கலனம், மேகம், ஜனனேந்தரியத்தின் பலக்குறைவு, அடிக்கடி இந்திரியம் வெளியாகுதல், வாயுக்களினுலேர்ப்படும் தோஷங்கள், சூலைகள், மூத்திரதோஷம் சொறி, சிரங்கு, பெருஞ்சிரங்கு, ஆனைச்சிரங்கு, உஷ்ணப்புண்ணு, வெட்டை, கிரந்திகுன்மம், முதலிய மகாவியாதிகளினால் கஷ்டப்படும் ஸ்திரீபுருடர்களின் வருத்தத்தைத்துலைத்து சந்தோஷத்தைக்கொடுக்கும் ஜீவாதாரம் இதொன்றுதான்.

எங்களின் மன்மதசிந்தாமணியானது தாதுக்ஷயத்தினுலும் மற்ற நோய்களினாலும், இக்காலத்தில் நரைதிரை, விருத்தாப்பியம் முதலிய அவைகளுக்காளானவர்களை மட்டுமல்ல, அறுபது வயதிர்க்கதிகப்பட்டு ஆரோக்கியம் குன்றிய கிழவர்களையுங்கூட வாலிபர்களாகச் செய்யுமென்பதில் சந்தேகமில்லை. இம்மருந்தின் அருமையான குணங்களை மெச்சி பலமகான் களிடமிருந்தும் யோக்கியதாபத்திரங்கள் கிடைத்திருக்கின்றன.

இம்மருந்து ஜனனேந்திரியம், மூத்திரப்பை இரத்தம், இவைகளைச் சார்ந்த சகலவிதநோய்களையும் அடியோடு அறுத்து, தாதுபுஷ்டி இரத்தசுத்தி, புத்திசக்தி, இவைகளை உண்டாக்கும் திறமைபெற்றது.

இந்திரியத்தை வலுப்படுத்தும் அனேக திவ்விய மூலிகைகளினுல் தயார்செய்திருக்கும் இம்மருந்துக்கு அருசியாவது கடுமையான பத்தியங்களாவது கிடையாது.

கீழ்க்குறிக்கும் 75 வித நோய்களுக்கு இது கைகண்ட ஔடதமாகும்.

1. தாதுநஷ்டம். 2. இந்திரியஸ்கலனம். 3. சொப்பனஸ்கலனம் 4. மயக்கம். 5. ஜனனேந்திரியத்தின் பலக்குறைவு. 6. உறுப்புகளின் பலக்குறைவு. 7. மூச்சுத்திணறல். 8. மாற்துடிப்பு. 9. நெஞ்செரிதல். 10. கைகால் தளர்வு. 11. தலைநோய். 12. இடுப்புவலி. 13. பல்நோய். 14. ஜ்வரம். 15. சப்ததாதுக்களின் க்ஷீணம். 16. ஞாபகக்குறைவு. 17. மூத்திரநோய். 18. மலபந்தம் 19. மகோதரம். 20. குன்மம். 21. சூலை.

22. அருசி. 23. மேகம். 24. பலதரப்பட்ட பழுப்புப்போக்கு. 25. ஸ்திரீபுருடர்களின் ஜனனேந்திரியங்களிலுண்டாகும் பலவித புண்கள். 26. உஷ்ணப்புண்ணு. 27. பெருஞ்சிரங்கு. 28. கிரந்தி. 29. யானைச்சிரங்கு. 30. மூத்திரச்சூடு. 31. ஜலபாதைக்குமுன் அல்லது பின் இந்திரியம் வெளிவருதல். 32. இரத்ததோஷம். 33. கைகால்களின் பலக்குறைவு, நீர்வீக்கம். 34. உதடு வெள்ளையாகுதல் 35. நகம் கருமையாகுதல். 36. கைகால்களின்சூடு. 37. உடம்பு ஊரல். 38. உடம்பு எரிதல். 39. உடம்புவலி. 40. 80 பலவிதவாதநோய்கள். 41. நாசிவழி நீர்வடிதல். 42. பீனிஸம். 43. செவிக்குத்து. 44. காதடைப்பு. 45. செவி இரைதல். 46. கண் எரிதல். 47. வாசிக்கும்பொழுது கண்ணில் நீர்வடிதல். 48. கண்ணோரங்களில் புண். 49. கண்மயிர் உதிரல். 50. கண்மயக்கம். 51. அடிக்கடி கண்குரு உண்டாகுதல். 52. உச்சி எப்பொழுதும் சூடாயிருத்தல். 53. அதிகதாகம். 54. நாவு உலர்தல். 55. தொண்டைவலி. 56. ஜலதோஷம். 57. ருசியின்மை. 58. பசியின்மை 59. அக்கினிமந்தம். 60. தேகம் உணர்வின்றிக்காணுதல். 61. புருடத்தன்மையற்றிருத்தல் 62. லிங்கத்தளர்வு. 63. பைத்தியம். 64. தூக்கத்தில் எழுந்தோடுதல். 65. காசம். 66. பக்கவலி. 67. க்ஷயம். 68. பித்தம். 69. உடம்புமெலிதல். 70 காமாலை. 71. வேலை செய்யும்பொழுது நரம்புகளுக்கு பலக்குறைவு. 72. காய்ச்சல். 73. எலும்பு உருகல். 74. வயற்றுப்போக்கு. 75. வெள்ளை.

இவைகளுக்கு த்தனித்தனியாகவும் ஒன்றாகவும் சுகத்தைக்கொடுக்கும் மகாதாதுபுஷ்டி லேகியம். இதைப்போலவே இந்தகாட்லாக்கில் குறித்திருக்கும் மற்றமருந்துகளும் அனுபவசித்தமானவைகளென்று நம்பவும்.

விலை டப்பி 1-க்கு ரூபா 2.

இரண்டு டப்பிகள் ஒரே தடவையில் வாங்குவோருக்கு தபால் சார்ஜ் இனம்.

---

# தந்துமேகாரிதிரவகம்.

ஸ்திரீபுருடர்களின் மூத்திரத்துவாரங்கள் வழியாய் நூல்போல் வரும் தந்துமேகம், வெண்மை நிறம்போன்ற பழுப்புப்போக்கு, இரத்தப்போக்கு, லிங்கம் சக்திப்படும்பொழுது தோன்றும் வலி, மடிப்புகளில் உண்டாகும் கிருமி, மூத்திரம் தடைப்பட்டு இலேசாயி வெளியாகுதல், மூத்திரம் வெளியாகும்பொழுது குத்திக்குடைதல், சிறுநீர் மாக்கரைத்த ஜலம்போலவும் மாம்ஸம் கழுகிய ஜலம்போலவும் காணல், மேகப்புண்கள், இடுப்புவலி, கைகால்வலி, சந்துக்களில் நீர்வீக்கம், முதலிய பல நோய்களை கண்டிக்கும்

புட்டி 1-க்கு ரூபா 3.

## கக்குவான்
## இருமல்மருந்து

அன்பர்களே! கக்குவான் இருமலினால் கண் தாங்கி கன்னம் ஒட்டி நெஞ்சுதள்ளி உடல் மெலிந்து, இரத்தம் அசுத்தப்பட்டு வருந்தும் உங்கள் குழந்தைகளைப்பாருங்கள்நாள்பழக்கத்தாலன்னியில் யாதோர் மருந்தாலும் சுகம் கிடையாதென்று திட்டம் செய்துவைத்துள்ள இந்நோய்க்கு எங்கள்மருந்தை ஒருவாரம் உபயோகித்துப்பாருங்கள். இந்தமருந்தின் குணவிசேடத்தை வர்ணிப்பது அனாவசியமாதலால் உபயோகித்துப்பார்த்து எங்களுக்கு நற்சாட்சிபத்திரம் அனுப்புவீர்களாகவும்.

புட்டி 1க்கு ரூபா 1.

## சிங்கிபஸ்மம்.

அடிக்கடி ஜலபாதைக்குச் செல்லல், வாயுவுக்குத்து, வயிற்றுவலி, இடுப்புவலி, உஷ்ணம் அதிகரித்ததினால் உடம்பில் எர்ப்பட்டிருக்கும் மற்ற வியாதிகள் மேகப் போக்கு, சொப்பனஸ்கலனம், சீக்கிரஸ்கலனம், நரப்புகளின் பலக்குறைவு தாதுநஷ்டம், முதலியவைகளுக்கு சாப்பிட்டமறுநாளே சுகத்தைக்கொடுக்கும். மன்மதசிந்தாமணிலேகியத்துடன் இதைசாப்பிட்டுவந்தால் மேற்குறித்தவியாதிகள் இருந்தவிடம் தெரியாமல் பறந்துபோகும். முற்றிலும் உண்மை. புட்டி 1க்கு ரூபா 1.

## பவிழபஸ்மம்.

எந்தவிதமான இருமல், விக்கல், வாயுக்குத்து, மூச்சுத்திணறல், முதலியவைகளுக்கும் இதோர் உத்தமமான ஔடதம். எங்கள் காசகுலாந்தகத்துடன் இந்த பஸ்மத்தை உபயோகித்துவந்தால் எவ்வளவு காலஞ்சென்ற தீராத இருமலும் சுவாசசம்பந்தமாயுள்ள எந்த நோய்களும் தீருமென்பது நிச்சயம்.

குப்பி 1க்கு ரூபா 1—8—0

## அபச்செந்தூரம்.

நரம்புகளுக்குவலிமையையும், மனதிற்கு உற்சாகத்தையும், மூளைக்கு ஞாபகத்தையும், இரத்தத்திற்கு சுத்தி, விருத்தி இவைகளையும், கொடுப்பதும், ஆயாசம், இரத்தக்குறைவு, பாண்டு, காசம், இருமல், க்ஷயம் பித்தம், பித்தக்காமாலை, இவைகளைப் போக்கடிப்பதுமான ஓர் கைகண்ட மருந்து விருத்தர்களுக்கு சகஜமாய் கண்டுவரும் பலக்குறைவிற்கும், தாதுநஷ்டத்திற்கும், மிகவும் மேலானது பலகாரணங்களாலும் உடம்பு மெலிந்துள்ள வாலிபர்களின் எல்லாக்குறைகளையும் மாற்றும். 48 நாள் இம்மருந்தை உட்கொண்டால் எந்த உடம்பும் வைரத்திற்குச்சமமாகும் இரத்தம், சுக்கிலம், ஆயுள், அழகு, இவைகளுக்கு ஆசைப்படுவோர் இம்மருந்தை சாப்பிடவேண்டும் மன்மதசிந்தாமணிலேகியத்துடன் கலந்து இதைசாப்பிட்டுவந்தால் கல்பம் உட்கொண்டவர்களைப்போல் நீடித்த காலம் வாழ்ந்து ஸ்திரீசுகம் பெறலாம்.

புட்டி 1 க்கு ரூபா 1—8—0

## நவனீதபஸ்மம்.

மூத்திரத்தடங்கல், ஜலபாதை எர்ப்படும்பொழுது வலி, மேகம், முதலியவைகளுக்கு மிகநன்று. மறைவிடத்திலுண்டாகும்எந்தநோய்களையும் குணப்படுத்தும், தந்துமேகாரிதிருவகத்துடன் இம்மருந்தும் சேர்த்து சாப்பிட்டால் தீராத மறைவிட நோய்களும் மேகநோய்களும் தீரும்

புட்டி 1 க்கு ரூபா 1.

## மனோமோகனகுளிகை.

இம்மாத்திரையை ஸ்திரீ சம்போகம்வேணுமென்றதினத்தில் சாப்பாட்டிர்க்குமேல் உபயோகிக்கவேண்டும். அனேக திவ்யமூலிகைகளி

னாலும் உலோகங்களினாலும் தயார் செய்துள்ள இம்மருந்தை சாப்பிட்டால் சற்றேனும் காமவிகாரமில்லாதபுருடர்களுக்கும் காமேச்சையுண்டாவது மன்னியில் அனேகதடவை போகித்தும் சந்தோஷ மடையாத பெண்களின், மமதையை ஒரேபோகத்தால் ஒழித்து அவர்களை அடிமைகளாகச் செய்யும். இதற்கென்றெ வெகுபாடுபட்டு இம்மருந்தை தயார் செய்திருக்கிறோம். எவ்வளவுநேரம் இந்திரியம் வெளிப்படாமலிருக்க வேணுமென்று நினைக்கிறீர்களோ அதற்குமேலும் இந்திரியத்தை கட்டுப்படுத்தும்.

டப்பி 1-க்கு அணா 8.

## மதனாஸ்திரம்.

இதுவோர் பூச்சுமருந்து இதை லிங்கத்தில் தடவியமாத்திரத்திலேயே அதற்கு சக்தியுண்டாகும், கிழத்தன்மையாலும், முஷ்டிமைதுனம், வதனசுரதம், அதிபோகம்முதலியவைகளாலும் சோர்வடைந்தலிங்கத்திற்கு பலத்தையும் வன்மையையும் கொடுப்பதுடன் மனதிற்குஉல்லாசத்தையுமளிக்கும். சுக்கிலம் சீக்கிரத்தில் வெளிப்படாமல் தடுத்து போகத்தை நீடிக்கச்செய்யும்.

புட்டி 1-க்கு ரூபா 1.

## மேகாந்தகமெழுகு.

இந்த கியாதிவாய்ந்த சித்தௌடதத்தை காலை மாலை இரு வேளைகளில் தவறாமல் 20நாள் சாப்பிட்டுவந்தால் மிகப் பழகியமேகப்புண்களும் அதனால் ஏர்ப்பட்டுள்ள மற்றவியாதிகளும் கட்டாயமாய் விலகிப்போகும் கெட்ட சகவாசத்தால் திரேகத்தில் சூடு அதிகரித்து தொப்பிளுக்குநேரா உள்ளமூத்திரப்பை மூத்திரத்துவாரம் இவைகளில் புண்உண்டாகி வெளுத்தஓர்விதபழுப்பு மூத்திரத்துவாரத்தின் வழியாய் வெளி வருவதை மேகம் என்று சொல்லுகிறார்கள் இது அதிகப்பட்டு மேகவாயு,குஷ்டம் உடம்பில் பலவித தடிப்புகள், ஓரங்கள் தடித்தும், நடுவு பள்ளமாயும்,இருக்கும் பலவித விரணங்கள் லிங்கவளயப்புண், லிங்கப்புற்று, யோனிப்புற்று, பெருங்கிரந்தி, முடக்குவாதம், கைகால்வீக்கம், சந்துக்களில் வலி, சூலை, அக்கினிமந்தம், வயிற்றுவலி, முழங்கால்வாதம், இரத்தவாதம் இவைகள்உண்டாகின்றன. எங்களது மேகாந்தகமெழுகை சாப்பிட்டால் இந்தநோய்கள் எல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல்விலகிவிடும். மருந்தின்குணம் உபயோகத்தாலன்றி தெரியமாட்டாது.

டப்பி 1-க்கு ரூபாய் 3.

## அசோககிருதம்

மாதவிடாய்காலங்களில் பெண்களுக்கு ஏர்ப்படும்எல்லாவிதநோய்களையும் அகற்றி யாதொருவித தடங்கலுமில்லாமல் இரத்தத்தை வெளிப்படுத்தும் ஓர்திவ்விய ஔடதம். விலக்கவேளை வரும்பொழுது வயிற்றுவலி, துடைவலி, சுரம், மூச்சுத்திணறல், புலக்ஷயம் இவைகளால் வருத்தப்படும் ஸ்திரீகளுக்கு இது ஓர் தேவாமிர்தமென்னலாம். மாதவிடாய்காலங்களில் ஏர்ப்படும் நோய்களுக்கு இவ்வளவுசுகம் கொடுக்கும் மருந்து வேறு இல்லையென்றேசொல்ல வேண்டும். இதுகர்ப்பபய்யை சுத்திசெய்து அதிலுண்டாகும் புண்களை ஆற்றி, பலத்தை அதிகப்படுத்தும் சக்திவாய்ந்தது. யோனியிலுண்டாகும் துர்க்கந்தத்தையகற்றி சுந்தரம் போன்ற குழந்தைகளைக் கண்டு சந்தோஷமடைய வேண்டுமென்று நினையாத சகோதரிகள் இருக்கமாட்டார்கள். எங்களுடைய அசோககிருதத்தை உபயோகித்துப்பார்க்கட்டும்.

புட்டி 1க்கு ரூபா 2.

## குன்மாசினி.

வயிற்று வலியால் நெருப்பில் விழுந்த புழுவைப்போல் துடிதுடித்து வருத்தப்படுவோர் குன்மாசினியை அருந்தவேண்டும் அப்பொழுதேமருந்தின் வல்லமை புலனாகும் புளிவப்பம், அருசி, சாப்பிட்ட உடனும் ஜீரணமாகும்பொழுதும், ஜீரணத்துக்குப்பின்னும் ஏர்ப்படும்வலி, வயிறு இரைதல் வாயுத்தடங்கல், இருதயசூலை, முதலிய எவ்வித குன்மரோகங்களையும் சூலைகளையும் ஆந்தரரோகங்களையும் அடியோடு அகற்றும் உலகப்பிரசித்திபெற்ற இம்மருந்து வயிற்றுவலியால் உயிரைவிடவும் தயாரான அனேகரை மரணத்தினின்றும் காப்பாற்றியிருக்கிறது.

டப்பி 1-க்கு ரூபா 2.

## காசகுலாந்தகம்.

மூச்சுப்போகாமல், கண் பிதுங்கி, கழுத்துஸ்தம்பித்து கால் கைகள் தள்ளாடி உடம்பில் வியர்வைசிந்தி எதுசெய்வதென்று தோன்றாமல் கடவுளை நோக்கி கைஎடுக்கும் ஒருவர் எங்கள் காசகுலாந்தகத்தை சாப்பிடுவாராகில் அப்பொழுதே ஆனந்தக்கடலில் முழுகி கூத்தாடுவார் சுவாச நாடிகளிலும், குழாய்களிலும் உண்டாகும்வலி, குத்தல் இதுகளை மாற்றி இருமல், பலக்ஷயம், இளைப்பு, தலைநோய், காய்ச்சல், இதுகளை இருந்தவிடம்தெரியாமல் ஓட்டி தேகசுகத்தைக்கொடுப்பதற்கு இம்மருந்திற்கு இணை வேறில்லை. சுவாசநோயால் வருந்தும் சகோதரர்களே நீங்கள் வீணில் பணத்தை விரயம் செய்யாமல் எங்கள் காசகுலாந்தகத்தை அருந்தி சுகமடைவீர்களாகவும்.

டப்பி 1-க்கு ரூபா 2.

## கோல்டன்பாம்.

அருமையான பரிமளம் கமழும் இந்தகுழம்பை உடம்பில் வலியிருக்கும் பக்கத்தில் நன்றாய் தேய்த்துசூடாக்கவேண்டும். தோலில் சூடு ஏறினதும் வலி விட்டுப்போகும் தலை, கழுத்து, கைகால்கள், நெஞ்சு, இவைகளின்வலி, வாயுக்குத்து, சந்துக்களில்வீக்கம், வெட்டுக்காயம், சதைவு இவைகளுக்கும் இம்மருந்தை முன்போல் உபயோகிக்கவேண்டும். மேகவாயு, பக்கவாயு, திமர்வாதம், கைகால் குடைதல், இந்தநோய்களுக்கு இது மிகவும் பலனைகொடுக்கும் பல்வலி, பற்களின் சந்துக்களில் வீக்கம் முதலியவைகளுக்கு இதுவோர் முதல்தர ஔடதம்.

டப்பி 1-க்கு அணா 12.

## வஜ்ரதந்தப்பொடி

மிகவாசனையுடனும்- குணவிசேடத்துடனும், கூடிய இப்பொடியால் பல்துலக்கிவந்தால் பல் வலி, பல்பூச்சி, நிறமாற்றம், பல்லசைவு, பல்புளிப்பு, வாய்நாற்றம், ஊனில் இரத்தம்வடிதல், முதலிய தந்தநோய்களுக்கெல்லாம் மிகுந்தகுணத்தை கொடுக்கும். பற்களுக்கு வைரத்திற்கொப்பான பலமும் பளபளப்பும் ஏர்ப்படவும் செய்யும்.

டப்பி 1-க்கு அணா 4.
டஜன் 1-க்கு ரூபா 2—8—0.

## பாலாமிர்தம்.

குழந்தைகளுக்கு நோயணுகாமல் காப்பதற்கு இதுவோர் உத்தமமான மருந்து. உரைமருந்திற்குப்பதில் இதை உபயோகித்து வரலாம். தினமும் இம்மருந்தை குழந்தைகளுக்குகொடுத்துவந்தால் யாதொருவித

மான நோய்களும் அணுகாது என்பதை உறுதியாய் நம்புங்கள். சுரம், மூச்சுத் தடக்கல், நடுக்கம், எச்சில் வயிறுபொதுமல், மாந்தம், பல நிறமாக மலம்போகுதல், வயிற்றுப்பூச்சி, சன்னி, அடிக்கடி கோட்டாவிவருதல், சொறி, சிரங்கு, கரப்பன், தாய்ப்பாலின் தோஷம், இவைகளை இருந்தவிடம் தெரியாமல் ஓட்டுமென்பதில்யாதோர்வித சந்தேகமும் இல்லை. மிகவும் அனுபவத்துடன் கூடியது. டப்பி 1-க்கு அணு 8.

## உரோமசங்காரி

உடம்பில் எந்தபக்கத்தில் உரோமம் அவசியமில்லையென்று நினைக்கிறீர்களோ அந்தவிடத்தில் சூரணத்தை குளிர்ந்த ஜலத்தில் குழைத்து சற்றேகட்டியாகப்பூசி இரண்டு மூன்று நிமிஷங்கள் கழிந்து ஓலைத்துண்டினாலாவது கார்டினாலாவது வழித்துவிட்டால் அந்த விடத்தில் உரோமமே இராது.

டப்பி 1-க்கு அணு 8.

## நரைமயிர்
## கறுக்கும்தைலம்

இத்தைலம் நரைத்து வெள்ளிக்கம்பிபோன்ற உரோமங்களை கருமேகத்திர்க்குச் சமானமாகச்செய்யும். உபயோகித்துப்பாருங்கள். சந்தோஷமடைவீர்கள்.

புட்டி 1 க்கு ரூபா 1.

## பித்தரோகநிவாரணி.

அஜீரணம், சொப்பனம், வாய்ப்புண்ணு, நாக்கில் புண்ணு, வாந்தி தலைச்சுற்றல், படபடப்பு, தலைவலி, மனம்குமட்டல், நீர்பித்தம், மஞ்சள் பித்தம், பாண்டு, கண்ணெருளிமங்கல், ஞாபகக்குறைவு, வயிறுஎரிதல், கைகால்களில் நீர்வீக்கம், முதலியவை பித்தரோக இலக்ஷணங்களாகும். மேல்குறித்த ரோகங்களை எல்லாம் எங்கள் பித்தரோகநிவாரணி உடனே மாற்றிவிடும். பரீக்ஷித்துப் பார்க்கட்டும்.

புட்டி 1 க்கு ரூபா 1.

## சுகபேதிகுளிகை.

மனிதருக்கேர்ப்படும் நோய்களுக்கெல்லாம் ஆதிகாரணம் மலபந்தமாகும். மாதம் ஒரு தடவையாவது வயிறை சுத்திசெய்யவேண்டும். நோயாளிகளும் நோயற்றிருப்பவரும் எங்கள் மருந்தை உபயோகிக்கலாம். ஒரு வித கஷ்டமில்லாமல் மலத்தை கழிக்கவேண்டுமென்று நினைப்பவர்கள் இரா போஜனத்திர்க்கு பின் சுகபேதி குளிகையை சாப்பிடவேண்டும் அதிகாலையில் மலம் நன்றாய் க்கழிவது மன்னியில் சுரம் பித்தம், தலைநொய், கிருமி, சொறி, சிரங்கு, இவைகளையும் போக்கடிக்கும்.

புட்டி 1 க்கு அணு 8.

## கஸ்தூரிகுளிகை.

காஸம், இழுப்பு, வாயுக்கட்டு, ஜலதோஷம், கபம், அசதி, இருதநோய், மூத்திரத்தடங்கல், பசியின்மை, மலச்சிக்கல், சூதகவாயு, உடம்பெங்கும்வலி, க்ஷயம், சன்னி, விஷசுரம், வாதசேஷ்டைகள், குழந்தைகளின்சளி, இருமல் இளைப்புகரப்பன், ஸ்திரீகளின் சூதகதோஷம், ஜன்னிதோஷம்,கற்பப்பையிலுண்டாகும் நோய்கள் இவைகளுக்கெல்லாம் சிரேஷ்டமானதும் வாஸனை பொருந்தியதும, சாப்பிட சந்தோஷத்தைக்கொடுப்பதுமான ஓர் திவ்விய ஔடதம். குழந்தைகளை பாலாரிஷ்டைகளிலிருந்து காப்பாற்றும் சமய சஞ்சீவியாதலால் இது ஒவ்வோர் கு

டும்பங்களிலும் எப்பொழுதும் இருந்து வரவேண்டியது.

புட்டி 1 க்கு அண 8.

## முகப்பருமருந்து.

எண்சாணுடம்பிர்க்கும் சிரசே பிரதானம். சிரசிலும் முகமே முக்கியமானது முகம் வசீகரமாயிருக்க வேண்டுமென்று நினையாதவர் யார். முகத்திலுண்டாகும் சிறு பருக்களையும் கருமைநிறத்தையும் மாற்றி முகத்திர்க்கு அழகைக்கொடுக்கும். இம்மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

டப்பி 1 க்கு அண 8.

## யுக்கலிப்டஸ்தைலம்

இதன் குணத்தையறியாதவர் இப்பொழுது உலகில் இல்லை. பெருமைவாய்ந்த இந்தத்தைலத்தால் தீரும் வியாதிகள் பல்வலி, நாசியடைப்பு, சுரம், தலைநோய், வயிற்றுவலி, அஜீரணம், தொண்டைவலி, கபம், சூலை, குன்மம், வாதஉளைச்சல், மார்பு, முதுகு இடுப்பு, முதலியஇடங்களில் தோன்றும்வலி, தொத்து வியாதிகள் முதலியவை.

1 ஒளன்ஸ் புட்டி 1 க்கு அண 4.

டஸன் 1 க்கு ரூ. 2—8—0

## வாதகஜகேசரி.

தங்கபஸ்பத்தால் தயார்செய்துள்ள இம்மருந்து வாதம் 80 யும்போக்கும் தீராத சுளுக்கு, நரம்புவலி, வயறுஉப்புதல், ஸ்தம்பனம், கால்கை முடங்கல், நொண்டல், முதலியவாதசேஷ்டைகளுக்கு இதுவே உத்தமமான மருந்து.

புட்டி 1 க்கு ரூபா 2.

## நேத்திருஞ்சனம்.

கண்ணோய், கண்சூடு, கண்குத்து, ஜலம்வடிதல், பூ உண்டாகுதல், ஜாஸ்தி பூளைவருதல், தசைவளருதல், ஓரமதடித்தல், கண்சிவப்பு முதலிய எல்லாவித கண்ரோகங்களுக்கும் மிகவும் நன்று

புட்டி 1 க்கு அண 8.

## புழுக்கடி நிவாரணி

இம்மருந்தை மூன்றேவேளை உபயோகித்தால் பலன் தெரிந்துவிடும் தோலில் உண்டாகும், சொறி, சிரங்கு, பலவிதப்பற்றுகள், முதலியவைகளை வெகுசீக்கிரமாக போக்கடிப்பதில் இணையில்லாதது. ஒரு தடவை உபயோகித்துப்பாருங்கள்.

புட்டி 1 க்கு அண 12.

## கர்ப்பரக்ஷாகுளிகை

கர்ப்பிணிகள் தினமும் இராபோஜனத்திர்க்குப் பின் இம்மருந்தை சாப்பிட்டுவந்தால் வாந்தி வாயுக்குத்து, மலச்சிக்கல், வயற்றுவலி, ஆயாசம், சோம்பல், அருசி, சுரம், பல்வலி, நீர்த்தடிப்பு, தலைசுற்றல், முதலிய பிணிகளுக்கு ஆளாகாமலும் வலிதெரியாமலும் சிசுவை ஈனலாம் இந்தமாத்திரை கர்ப்பம் அலசிப்போகாமல் காப்பாற்றுவது மன்னியில் கர்ப்பிணிகளுக்கு நாளுக்குநாள் தேகபலத்தையும் அழகையும் கொடுத்து பிரஸவத்திர்க்குப் பின் தாயையும் குழந்தையையும், நல்ல ஆரோக்கியத்தோடு காப்பாற்றவும் செய்யும்.

டப்பி 1 க்கு அண 8.

## சாலாமிசிறிலேகியம்.



பாலியசேஷ்டைகளினாலும் துர்ப் பழக்கங்களினாலும் அமிதபோகத்தினாலும் இரத்தம் வற்றி உடல் மெலிந்து அங்கம் தளர்ந்து கைகால்கள் வலி இழந்து கண்பார்வை குன்றி தவிக்கும் நண்பர்களுக்கு இந்த லேகியம் ஓர்சமயசஞ்சீவியைப் போல் உதவிசெய்யும். "விந்து விட்டால் நொந்து கெட்டான்" என்பது பெரியோர் வாக்காகும். அமிதமாயும் துர்மார்க்கங்களிலும் விந்தை செலவு செய்து தேகபலம் குன்றி நோயாளிகளாய் தவிக்கிறவர்கள் இந்தலேகியத்தை ஒரேமண்டலம் சாப்பிடுவார்களாயின் இந்திர ஜாலம்போல் இந்திரியம் கட்டுப்பட்டு உடலில் இரத்தம்ஊறி பாலிய பருவத்தைத்திரும்பவும் அடைவார்கள். தனது இளம் பருவத்தைபாழாக்கி உடல் வெளுத்து நோயாளியாயிருக்கும் ஒருவரிடமிருந்து அவர் மனைவி அடையும் சுகம் யாது. இல்லறம் சரியாய் நடக்கவேண்டுமென்ற கருத்துடையவர்கள் அதற்கு இடையூறாக விருக்கும் காரணங்களை தெரிந்து கொள்ளாமல் பெண்களை வீணே பழிப்பதில் பயன்யாது.

நண்பர்களே! இந்த லேகியமானது வட இந்தியாவில் மட்டிலும் அபூர்வமாய் கிடைக்ககூடியவாதுமை, பிக்தா, சல்கூஜ, அக்ரோட், பிந்தோக், குர்பா, சாலாமிஸ்ரி முதலிய நாற்பது வித பருப்புதினசுகளால் தயார்செய்யப்பட்டுள்ளது. இந்திரிய பலம் குன்றி மனைவியின் முகத்தைப்பார்க்கவும் வெட்கி மனமுருகும் நேயர்கள் இந்த லேகியத்தில் இரண்டே டப்பிகள் சாப்பிடுவார்களாயின் எவ்வித இளகிய தாதுவும் கட்டுபட்டுபோக இச்சை உண்டாகி சத்புத்திரர்களைப் பெற்றெடுத்து ஆனந்தமடைவார்களென்பது நிச்சயம், சிக்கிரஸ்கலனத்தால் சஞ்சலப்படும் சகோதரர்களுக்கு இதுவே ஏற்ற மருந்தாகும். ஒரே முறை பரீக்ஷித்துப் பாருங்கள்! யாதோர் வித பத்தியமும் கிடையாது. டப்பி ஒன்றுக்கு ரூபாய் 3.

## தேள்க்கடி நிவாரணி.

தேள்க்கடிக்கென்று உலகில் பல நாட்டுவைத்தியர்களாலும், ஆங்கில வைத்தியர்களாலும் இதுகாலம் பற்பலமருந்துகளும் வெளிவந்துள்ளன இம்மருந்துகளை வாங்கி உபயோகித்துள்ள மகான்கள் எங்கள் தேள்க்கடி மருந்தையும் ஒருதடவை வாங்கி உபயோகித்துப்பாருங்கள். ஒருதடவை ஒருபுட்டிக்கு ஆர்டர்செய்வோர் இரண்டாம்தடவை ஒருடஸனுக்கு தேவைபடுவீர்கள். அர்புதகுணமமைந்த இம்மருந்தை கொட்டுவாயில் வைத்ததும் வலியும், கடுப்பும் பிடித்துக்கட்டியதைப்போல் நின்றுவிடும். அழுது துடிதுடித்துகையை நெரித்து கொண்டிருப்பவர் மருந்துவைத்ததும் ஆனந்த பரவசமடைவதைக்கண்டு அனைவோரும் ஆச்சரியப்படுவார்கள்.

பாக்கெற்று 1 க்கு அணா 8.

## தான்வந்தரதைலம்.

தான்வந்தரதைலம் மலையாள வைத்தியமுறையில் சிறந்து விளங்கும் ஸ்நானதைலமென்பதை மறுக்க ஒருவரும் முன்வரார். இராக்காலங்களில் தூக்கமில்லாமல் வருந்துகின்ற நண்பர்கள் இதை ஒரே முறை ஸ்நானம்செய்துபாருக்கள். உடம்பில் வலியிருக்கும் பக்கங்களில் இந்த தைலத்தை சூடேறும்வரையில் தடவி வென்னீர் பிடிக்க வலி இருந்தவிடம் தெரியாமல் விலகிவிடும் உடம்பில் காயம் படினும் நீர்க்கட்டு உண்டாயினும் இந்த தைலத்தை மூன்றேநாள் போட்டுவந்தால் குணம் கிடைக்கும். கைகாலுகளில் உண்டாகின்ற எந்தவிதமான சிரங்குகளுக்கும் ரணங்களுக்கும் இந்த ஸ்நானதைலத்தை உபயோகிக்கலாம். உடம்பின் எல்லாவிதகெடுதலையும் போக்குகிறது. நரம்பு தளர்ச்சி இடுப்புவலி, சந்துக்களில்வலி, கைகால் குத்திக் குடைதல், தூக்கமின்மை, ஞாபகக்குறைவு, பித்தமயக்கம், விடாத் தலைநோய், மந்தம், கண்சூடு, கண்ணில் பூளைகட்டல் பிரயாணத்தினுலும் வேலைமிகுயினுலும் உடம்பிற்கு உண்டாகும் அழசதி, காங்கை, மூத்திரச்சூடு, பீனசம் முதலிய அநேகநோய்களுக்கு கை கண்டது குறைந்தது ஒரு மண்டலம் இந்த தைலம் தேய்த்து ஸ்நானம் செய்கிறவர்களுக்கு மேர்கூறிய நோய்கள்விலகுவதோடு உடம்பிற்கு நல்ல பலமும் மனதிர்க்கு ஆனந்தமும் உண்டாகுமென்பதை அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாம், ஒரே தடவை தருவித்துப்பாருங்கள்.

புட்டி 1 க்கு விலை ரூபாய் 1.

## இரகசியசுகானந்தன்.

இதுசம்போககாலத்தில் ஸ்திரீபுருடர்கள் உபயோகிக்கும் ஓர் இயந்திரம். காமத்தீயால் மதிமறந்து பகுத்தறிவையிழந்து விபசாரம் செய்வதினுல் உஷ்ணப்புண், பழுப்புவடிதல், அரையாப்பு, முதலிய நோய்கள் வந்து சேருகின்றன. நோயாளிகளோடு சேருவதால் இந்தநோய் தொட்டவரையொட்டுகிறது. அவ்விதம்சேரினும் நோய்அணுகாமல் இருப்பதர்க்காக அங்கிலேயர்கள் மேர்க்குறித்த இயந்திரத்தை கண்டுபிடித்திருக்கின்றூர்கள். அதனுல் அனுபவசுகம் குறைவுபடாது. நோயுமணுகாது. இயந்திரம்உபயோகியாதிருக்கும்பொழுது கிடைக்கும் சுகமே உபயோகிக்கும்பொழுதும் கிடைக்கும்.

பெண் இயந்திரம் 1 க்கு ரூபா 2. ஆண் இயந்திரம் 1 க்கு ரூபா 1;

## ஒட்டோபுஷ்பவனம் ஸென்று.

இதன் அதிமனோகரபரிமளம் எவர்மனதையும் கவரச்செய்யும் தன்மையுடையது. படுக்கையறயில் கொஞ்சம் சென்றை தூவிவிட்டால் அதன் மணம் அறைமுழுவதும் பரவி மந்தமாருதத்துடன் கலந்து ஜிலுஜிலுவென்றுவீசும். ரோஜாபுஷபத்தின் மணம்வேண்டுமென்று இச்சிப்போர் எங்கள் சென்றை தருவியுங்கள். இதன் விசேடகுணத்தைப்பற்றி பலவிதமாய்ப்புகழ்வதில் பயனில்லை. ஒரு பாட்டில் தருவித்துப்பாருங்கள்.

புட்டி 1 க்கு அணா 12. டஸன் 1 க்கு ரூபா 8.

அனேக மெடல்கள் பெற்ற,

# மோகன கூந்தல் தைலம்.



இதன் அதிமனோகரமான பரிமளம் இவ்வளவு என்று சொல்வதைப் பார்க்கிலும் உபயோகித்து தெரிந்துக்கொள்வதே நலம் சௌகந்திகப் பூவிலிருந்து இறக்கிய தைலத்தில் விலையுயர்ந்த அனேக வாசனை த்திரவியங்களையும், மூலிகைகளையும் சேர்த்து தயார் செய்திருக்கிறோம். இந்த கூந்தல் தைலத்தை கூந்தலில் தடவிய மாத்திரத்திலேயே இதன் நறுமணம் மற்றுவிடங்களிலெல்லாம் பரவி எவர் மனதையும் ஆகர்ஷித்துவிடும். இதை பதிவாய் உபயோகித்துவருவதானால் தலைமயிர் மிகமிருதுவாகவும், மேனியாகவும், செழித்துக்கறுத்து, அடர்ந்து சுருண்டு, இடுப்புக்கு கீழ்வரையிலும் தொங்கும் கூந்தலை அதிவிரைவில் வளரச்செய்யும். மூளைச்சூடும், மயிர்உதிரலும், உடனே தீர்க்கும், கண்ணிர்க்கு குளிர்மையும், முகத்துக்கு வஜீகரமும், ஞாபகசக்தியும் உண்டாகும். நரைமயிர் கறுக்கும், மனதிர்க்கு உல்லாசமும், தேகத்திர்க்கு காந்தியும், கூரானபுத்தியும் எவர்மனதையும் இழுக்கும் உயர்ந்த பரிமளமும், கொடுக்கும்தைலம் இதர்க்கு மேலில்லை. இவ்வளவு அருமையும் திறமையும் வாய்ந்த இந்த தைலத்தை ஒரு தடவை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். இதை சதா உபயோகித்துவந்தால் மண்டைரோகங்கள், அணுகவே அணுகாது. கண்ணிர்க்கும் தலைக்கும், ரோமத்திர்க்கும் ஏககாலத்தில் குணம் கொடுக்கும்.

புட்டி 1 க்கு ரூபா 1.

டஜன் 1 க்கு ரூபா 11.

போஸ்டேஜ் பிரத்தியேகம்.

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய அற்புதமான நாவல்கள்

(சித்திரப்படங்கள் கூடியவை)

## சண்பக விஜயம்

இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், றுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை னைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த திகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரி ாரின் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம ுணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேக மேற்கோள்களுடன் ிளங்க வைத்திருக்கிறது.

இதில் எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடிய தாயும், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் திருத்தக்கூடிய வகையிலும் சிறந்து நிற்கும். விலை ரூ. 1-12-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 1-8-0.

## வைதேகி

இதில் கதா நாயகியின் மன உறுதி, கற்பின் மாட்சி, உன்னத குணங்களின்உயர்ச்சி முதலியனவும் கதாநாயகி நாயகருடைய தெய் ீகக் காதலின் இலக்ஷணம். கீரைக்கார காமாக்ஷியின் உயரிய குணங் ள், துப்பறிபவரின் திறமையும், லொள்ளுதுரை, லோகாற்புதம் மீந்தார், பொக்கைக் கிழவி, மார்வாடி, சாரங்கபாணி, ஊரளந் ான், அடியளந்தான் முதலியவர்களின் ஹாஸ்ய விநோத அற்புதச் ெய்கைகளும் இன்னும் மற்ற ரஸங்களும் நிரம்பப் பெற்று ருசிகர க விளங்குகின்றன. இது அநேக பத்திரிகைகளாலும் பிர கர்களினுலும் மதிக்கப்பெற்றது. 540-பக்கங்கொண்ட இப்புத்த த்தின் விலை ரூபாய். 2-8-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0.

## பத்ம சுந்தரன்

இதில் மேனாட்டு நாகரிகத்தின் ஆடம்பரமும், முடிவில் ுதனலடையும் துன்பங்களும், பண்டைக்கால பழக்கத்தின் பெரு மையும், கதா நாயக நாயகியின் ஒவ்வொரு அம்சத்தின் உயர்ந்த ாக்கமும், காதலின் திறமையும், துப்பறிபவரின் விசித்திரமான ெய்கைகளும், செல்லப்பாவின் துயரமும், அவன் தன் தீயொழுக் ்கிலிருந்து உடனே திருந்துவதும், அவனது பெற்றோரின் லமையும், மணத்தக்காளியம்மாள், சுண்டைக்காயம்மாள், ழுமூஞ்சி அண்ணவி இவர்களின் ஹாஸ்யரஸப் பிரதானமான ய்கைகளும் இன்னுமற்ற ரஸபாவங்களும் படிக்கப் படிக்க சலிப் ன்பதே தராமல் ஆநந்திக்கச்செய்யும். விலை ரூ. 2-8-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0

"ஜகன் மோகினி" ஆபீஸ்,

26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்

சர்வ ரோகங்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரு. 0-10-0




இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, சில் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்.

**மோஹினி தைலம்.**

பாட்டில் 1-க்கு 0—12—0

| பண்டமருந்து | பல்பொடி |
|---|---|
| டப்பி 1-க்கு 0—6—0 | டப்பி 1-க்கு 0—2—0 |

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிபோ,
7, தம்புச்செட்டி வீதி, சென்னை.



Published by V. M. Parthasarathy Iyengar,
*for* "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.